23 JUN 1914
SHIYALI.

# NEEDINOOL

OR

# MORAL INSTRUCTIONS.

தஞ்சை

BY

S. VADANOYAGUM PILLAY,

DISTRICT MOONSIFF OF SHEALLY,

ZILLAH COMBACONUM.

# நீதி நூல்.

இஃது.

கும்பகோணம் ஜில்லா

சீகாழித்தாலூகா முன்சீப்,

ச. வேதநாயகம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

MADRAS:

PRINTED AT THE VURTHAMANATHARUNGHEENEE PRESS, BY P. VENCATA ROW.

1859.

# INTRODUCTION.

The want of an ethical work in Tamil, on the principle of the moral writings of English authors, is felt by all those who are interested in the moral improvement of the natives of India. With a view to supply this desideratum, the author has undertaken to compose the following Poem consisting of 45 chapters, wherein he has endeavoured to convey accurate ideas of God; as well as of moral good and evil—to point out the wide range of social and moral duties incumbent on mankind, together with the grounds on which they are founded—and to exhibit the *amiableness* of virtue, and the *hideousness* of vice. The Table of Contents will show the number of Stanzas contained in each Chapter, and the several topics discussed therein. How far the Writer may have succeeded in his object, he leaves it to the Public to determine. He has chosen Poetry as the medium of communicating his ideas, as a large majority of Hindoos have a stronger relish for *Poetical* than prosaic works. He has however taken care to compose the verses in a style so simple as to adapt them to the capacity of those whose knowledge of Tamil is only superficial. He has proceeded on the principle that virtue and vice are common to all; and he has studiously avoided the insertion of any thing likely to wound the prejudices of any class of men. In illustration of this remark, he would refer his readers to the favorable criticisms by Hindoo Poets of various sects, which are annexed to this work at their earnest request, and in which they express their appreciation of its utility. He deems it unnecessary to apologize for any peculiar expressions therein, which may appear strange to foreigners, as they have not been used with any other view, but those of meeting the requirements of Tamil Poetry, and the taste of Hindoo readers. The Writer is conscious that a variety of public duties has prevented his executing the work he has undertaken in a manner *altogether faultless*, yet he would fain hope that he has spared no arguments (for many of which he is indebted to the best English moralists) to exhibit the excellence of virtue, and the

odiousness of vice. He further trusts that the work will prove instructive and entertaining not only to Hindoos in general, but also to other classes of readers, notwithstanding the small shape in which it appears, owing to the brevity of the style in which he has endeavoured to clothe his ideas. It is also hoped that such a work will prove of great utility at a time like the present, when the Government is very anxious to elevate the moral character of the people, but at the same time unwilling to introduce to their attention such lessons as can interfere with their religious sentiments.

He would only add that he commits his labours to the blessing of Jehovah without whom nothing is strong—nothing is holy.

Should the present work meet with general approbation, the author will devote such time as he can spare from his official duties to the composition of such works as would tend to the moral and intellectual elevation of his countrymen. He also intends to publish an English translation of this work for the benefit of those who are ignorant of Tamil Poetry.

## TABLE OF CONTENTS.


| Page. | Chapters. | Subjects. | No. of Stanzas. |
|---|---|---|---|
| 1 | | Introductory Verses,........................................ | 6 |
| 2 | 1 | Arguments regarding the existence of a Supreme Being,........................................ | 10 |
| 3 | 2 | Attributes of God and Piety towards Him,....... | 20 |
| 6 | 3 | Duties of Kings,........................................ | 10 |
| 8 | 4 | Duties of Subjects to Kings,........................ | 7 |
| 9 | 5 | Characteristics of a good Priest,.................... | 11 |
| 11 | 6 | Character of a False Priest,.......................... | 9 |
| 12 | 7 | Filial Affection,........................................ | 10 |
| 14 | 8 | Education of Male Children,......................... | 10 |
| 16 | 9 | Education of Females,................................ | 10 |
| 17 | 10 | Fraternal Affection,................................... | 5 |
| 18 | 11 | Conjugal Affection...................................... | 38 |
| 24 | 12 | Adultery,.............. ................................ | 15 |
| 26 | 13 | Duties of Superiors to Inferiors,................... | 10 |
| 28 | 14 | Duties of Inferiors to Superiors,................... | 1 |
| 28 | 15 | Falsehood,.............. .............................. | 11 |
| 30 | 16 | Theft, Robbery, &c.................................... | 8 |
| 32 | 17 | Murder,................ ................................ | 10 |
| 33 | 18 | Drunkenness,................... ....................... | 10 |
| 35 | 19 | Gambling,................................................ | 7 |
| 36 | 20 | Bribery.................................. ............... | 11 |
| 38 | 21 | Slander,.................................. .......... | 7 |
| 39 | 22 | Against slandering good men,........................ | 5 |
| 40 | 23 | Niggardliness,.......................................... | 12 |
| 42 | 24 | Sloth..................................................... | 6 |
| 43 | 25 | Anger,........... .............. ......................... | 8 |
| 44 | 26 | Envy..................................... .............. | 8 |
| 46 | 27 | Pedantry and Literary Pride,.................. ... | 3 |
| 47 | 28 | Pride arising from Beauty,.......................... | 5 |
| 48 | 29 | Pride arising from Riches,.......................... | 7 |
| 49 | 30 | Against keeping bad Company,..................... | 5 |
| 50 | 31 | On Forgiveness of Injuries,......................... | 7 |
| 51 | 32 | Polite and affable address,...................... ... | 5 |
| 52 | 33 | Against Injuring others,......................... ... | 5 |
| 53 | 34 | On Excess in sleep,.................................... | 3 |
| 54 | 35 | On Gluttony.............................................. | 1 |
| 54 | 36 | On Egotism and Self-praise,......................... | 2 |
| 55 | 37 | On Indifference to Flattery and Censure,......... | 3 |

| Page | Chapters. | SUBJECTS. | No. of Stanzas. |
|---|---|---|---|
| 56 | 38 | Universal Benevolence,............................ | 15 |
| 58 | 39 | Avarice condemned,............................ | 13 |
| 60 | 40 | On the Uncertainty of Life,........................ | 16 |
| 63 | 41 | On Human Afflictions,.......................... | 6 |
| 64 | 42 | On Virtue,................................... | 16 |
| 67 | 43 | Characteristics of Dancing Girls or Public Prostitutes,.................................... | 40 |
| 74 | 44 | Against Cruelty to Animals,...................... | 5 |
| 75 | 45 | On Miscellaneous subjects. viz. 1 Self-knowledge; 2. Modesty of great men; 3, Civility; 4, Contempt of death on the part of good men; 5, Incredulity; 6, Love of our enemies; 7, Useless wealth of misers; 8, Importance of Good qualities; 9, Rude and Harsh Speech; 10, Talking only on suitable occasions; 11, Contentment; 12, End of Religion. | 14 |
| | | Total... | 440 |

# சாற்றுக்கவிகள்.

ம-ா-ா-ஸ்ரீ, திரிசிரபுரம் வித்துவான்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களியற்றியது.

(ஆசிரியப்பா.)

மலர்தலையுலகினலர்பலவுயிரு,மறமுதலொருநாற்றிறமுமெளித டையத், தெய்வமுண்டென்று தெளிதரன்முன்வைத், தஃதுணர்ந்தார்க்கே யத்தேவியல்பும், வாழ்த்துமுணர்ந்தியற் றமனமுறுமாதலி, னதுபின் னுறவமைத் தரசர்தநீதி, தெய்வநீதியே சிவணுமாதலிற், பின்னதுநிறுவிப் பெரும்பூபால. ரியல்பொடுபெரியா தியலுந்தன்மையிற், குடிகளதியல்பு குறித்ததன்பின்னமைத், தியல்புறத்தழீஇய விருங்குடிக்கல்லது, ஞானசாரிய னன்னுறைதலி, னனையவன்பெருமை யனையதன்பின்னமைத், தியலாசிரிய னியலுணர்ந்தார்க்கே, பொய்யாசிரியன் புன்மைதோன்று, மாதவினவனிய லதன்பின் னுறநிறீஇ, யாரியனியல்போர்ந் தடுப்பார்க்கன்றித், தந்தைதாய்வணக்கந் தகாமையினஃததன், பின் னுறநிறுவியிப் பெற்றியின்வணக்கு, மைந்தருக்கனையார் மகிழ்ந்தாற்றுதலிவை, யென்று நூல்கற்பித் திடுதல்வளர்த்தன், மற்றதன்பின்வைத் துற்றுழியுதவல், கல்வியேயாதலிற் காமருமாதரு, முணருமாறதன்பின் னுறவஃதுறுத்திக், கற்றோர்க்கன்றி மற்றோர்க்கியலா, தென்பதுதோன்ற விருஞ்சகோதரரியல், பன்புறவதன்பி னமைதரநாட்டி, யுடன்பிறந்தாரொழுக் குறுமில்லறத்திற், கின்றியமையா தென்பதுதோன்றக், கிழவன்கிழத்தி யியலதன்பின்வைத், தியலுறுகிழத்தி யியலுணர்ந்தார்க்கே, யவண்மறுதலையா மணங்கினடையுணர, வருமதனுலதி மற்றதன்பின்வைத், திவ்வாறொருமுரு மியல்புடையுயர்ந்தோர், தாழ்ந்தோர்த்தாங்கலுந் தாழ்ந்தோருயர்ந்தோர்க், கடங்கியொழுகலு மறனெனவதன்பி, னென்றன்பின்ன ரொன்றுறநிறுவி, யடங்கியொழுகுநர்க் ககலும்பொய்மை, பொய்நின்றகலப் போமேகளவுங், களவுநீங்கக் கைவிடுங்கொலையுங், கொலையதுதொலையக் குலைதருமதுவு, மதுக்குடியகல மாறுஞ்சூதுஞ், சூதுநீங்கப் பரிதானந்தொலையும், பரிதானமகலப் படும்புறங்கூறலும், புறங்கூறலொழியப் போம்பெரியோரைத், தூற்றலுமஃதறத் தொலையுமுலோபமு. முலோபநீங்க வொழியுஞ்சோம்பலுஞ், சோம்பனீங்கத்தொலைதருஞ்சினமுஞ், சினமதுதீரச் சிதையும்பொறுமையு, மென்பதுதோன்ற விவையெலாமதன்பி, னென்றன்பின்ன ரொன்றுறவமைத்துப், பொறுமையொழிந்து புண்ணியர்க்கல்லது, கல்விச்செருக்குங் காரிகைச்செருக்குஞ், செல்வச்செருக்குஞ் சேராவென்பதற், கதன்பினெவ்வொன்று வடைவுறநிறுவிச், செருக்கொழிந்தவரோ தீயரைச்சேரா,ரென்பதுதோன்ற வதன்பினிணைத்துத், தீச்சார்பிலார்க்கே செறிபிழைபொறுத்த, லினியசொற்கழற லியலும்பிறர்க்குத், தீங்குசெய்யாமை செறியுமென்றதன்பின், முறையொரோ

வொன்று முயங்குறவைத்து, நினையுமிந்நெறியோர் நெடுந்துயிறுறப்ப,
ருணாக்குமதறப்பே ருண்டியுமொழியும், புகலஃதறத்தற் புகழ்தலுமொ
ழியு, மிஃதருதெனிற்புக ழிகழ்மதியாமை, யுண்டாமென்றற் கொன்
றன்பின்ன, ரொன்றுறவதன்பி னுறுமுறைநாட்டிப், புகழிகழ்மதிக்
கும் புண்ணியர் தமக்கே, பரோபகாரம் பலிக்குமென்றுணர, வதன்பி
னிறுவி யத்தகையோரே, பொருளவர்வொழிவரப் புண்ணியர் தமக்
கே, மெய்நிலையாமையும் வெளிப்படுமவர்க்கே, துன்பப்பகுதியுந் தோ
ன்றிடுமவர்க்கே, யறஞ்செயுந்திறமுண் டாமவர்தாமே, கணிகையரிய
ல்பு கழிப்பரென்றுணர, விவைமுறையதன்பி னியைதர நாட்டிக், கனை
தருமினையர் கமுகந்தோட்ட, மென்றாற்போல வியல்விலங்கினத்துக்,
கிடர்செயாரெனல்பி னியைதரவமைத்து, நன்னெறிபலவு ணவ்விலாத
டங்கப், பன்னெறியென்பது கடையுறப்பதித்து, நீதிநூலென்றோர் நி
லவுபெயரிட்டுத், திருமாறந்த தெள்ளமுதொப்ப, யாவருமுவப்ப வினி
தினியற்றித், தந்தனனொருநூ றவலருங்கேண்மைமற், றன்னவன்யா
ரெனி னறைகுதுங்கேண்மோ, புலிக்கொடிகயற்கொடி பொருவிற்கொ
டியுடை, வேந்தர்தநாட்டுறை வேளாண்மாக்கள், சோழியரென்றும்
பாண்டியரென்றுங், கொங்கரென்றும்பெயர் பெற்றனரவருள், வளரெ
றும்பீசர் மலைக்குமேற்குக், கடும்புனல்பாய்மதிற் கரைக்குக்கிழக்கு, ந
லந்தருகாவிரிநதிக்குத்தெற்கு, வளம்பொலிநம்பிரான்மலைக்குவடக்கு,
நவிலுமிவ்வெல்லை நான்கனுட்பட்ட, விடங்குடிகொண்ட வியல்வேளா
ளர், முன்னமுரைத்த முத்தமிழ்வேந்தரு, மெங்கண்மூவருக்கு மியன்
முடிசூட்டுதற், குங்களையமைத்தன முவந்துகொள்வீரெனக், கொண்
டுமகிழ்ந்தனையார் கோத்தன்மையரே, யாயினரதனா லவர்வாழ்நாடு,
கோனாடென்றோர் குலவுபெயர்பெற்ற, துரைக்கருங்குன்ற மொருபதி
னெட்டு, நத்தமெழுநூற் றறுபத்தாறு, முன்னும்படிநன் குளகுளத்
காடு, முன்னுமாயிரத்து முந்நூற்றுமுப்பதந், தேவாலயங்கள் சிறந்
குநூற்றெட்டு, மிநம்பிரமாலய மிருபத்தெட்டுங், குறையறக்கொண்
டவக்கோனாடுபின்ன, ரறைதருபுனல்வெள் ளாற்றின்றென்பா, லுரை
தென்கோனா டொலியூர்க்கூற்றந், திரைகரையெறியுமத் திருநதிவடபா,
லொளிர்வடகோனா டுறையூர்க்கூற்ற, மெனப்பெயர்பெற்றுநன் றியங்
குங்காலம், வண்மையவ்வேளாண் மாக்கண்மிகப்பெருகி, வடசோனா
ட்டில் வண்குளத்தூரிற், பெரிதிருத்தவின்மிகப் பெரியகோனாடென்,
றொருபெயர்பெற்றவவ் வொண்குளத்தூரிற், கொங்குராயர் கோத்திர
மதனில், வந்தவதரித்த செந்தமிழ்க்குரிசி, விரும்புவியேத்து மிலையா
ன்குடியி, லருமுனைவாரி யன்னம்படைத்த, குருமணிமாறனங் குலமெ
னுங்கொண்ட, லவிர்விரையாச்சிலை யாண்டார்திருமலை. யுடையான்
கருவரா லுகளியாற்றான், குளிர்புனல்வயறூறுங் குலவுகோனாடு,
ளமரும்புகழ்வே ளாண்குளத்தூரா, னுச்சைச்சிரவ மூறநும்பரியா,
னயிராவதநிக ராயதிண்களிற்றான், குளிர்மதுப்பொழியுங் குவளைமா

ஸிகையா, னுலகமூன் று முணர்கொடைமுரசான், வெற்றிக்கொடியெ னு மேழிக்கொடியா, னடங்கலர்நடுங்க வடர்க்குமாணையா, னளவில் பன்னூலு மரிறபவுணர்ந்தோன், பண்பெலாமோருருப் படைத்தென ப்பொலிவோ, னுருணிநீர்நிறைந் தற்றேயுலகவாம்,பேரறிவாளன் றி ருவெனப்பெரியோ, ருரைத்தவாக்கியத்திற் கொருசான்ருகப், பயன் படுசெல்வம் படைத்துமகிழ்பூமா, னடைந்தோர்வெங்கலி யடர்க்குந்தி றலோன், பிறர்மனைநோக்காப் பேரறிவாளன், கற்றோர்நட்புக் கழலா க்கனவா, னனிலமுவப்ப நடாத்துநீதியா, னரும்பொருள்செறியு மை ந்திணைக்கோவை, நம்பாற்கேட்ட நகுபுகழ்ப்பெரியோன்,வலந்தருநதி க்குலவள்ள,'னலந்தருவேதநாயகமாலே ............................................ (க)

விருத்தம்.

தெரியவிருவேறுலகத்தியற்கைதிருவேறு - தெள்ளியராதலும்வே றென்றுள்ளபடியுரைத்த, வரியபுகழ்வள்ளுவர்தம்வார்த்தையினைமறுத் தா - னரசர்காரியநடவுமதிகாரத்தொடேனூ, லுரியவென்வுணர்ந்துபெ ருஞ்செல்வமுங்கல்வியுமிக் - கொருங்கடைந்துபொருட்கொடையிலொ ப்பிலானுகி, விரியவனிமகிழவொருநீதிநூலியற்றி - விளக்கியசீர்வேத நாயகக்குரிசிலுனே ............................................ (உ)

வள்ளுவராதியரோ நன் னீதிநூலுரைப்பதற்கு வல்லாரென்று ............*
துள்ளுவர்யாவருமனைய தன்மையாயினுங்குளத்தூர்ச் சுகுணவள்ள *
லுள்ளுவர்பாலருணிறுவும் வேதநாயகமகிப னுரைத்தநீதி ..............*
தள்ளுவர்யாராதவிற்றேற் றேகாரந்தவிர்த்திசைத்த நகுதியாமே...(ங)

ஓதிநூலுண ர்ந்தகுளத் தூர்வேதநாயகமா லுவப்பிற்செய்த ..........*
நீதிநூறேவியலாசிரியனிய லுணர்த்துதலா னிகரின்ஞானச் ............*
சோதிநூலெனச்சொலலாமிந்நூன் முனெந்நூலுஞ்சொல்லிற்கானுல்
பாதிநூன் முக்கானு லுலட்டுநூல்சிலம்பிநூல் பகுத்திநூலே ......(ச)

வில்லாருமதிற்குளத்தூர் வேதநாயகமகிபன் விருப்பிற்செய்த ..........*
நல்லாருண்மகிழ்நீதி நூலினுளகற்பனையு நயமுமோரி ......................*
னெல்லாருங்கற்றவரோ யெல்லாரும்பாடுநரோ யெல்லாருந்தாஞ் .....*
சொல்லாருமறிவினரோ யறிவினர்தந்துதியவருஞ் சூடுவாரோ ..... (ரு)

முன்னோர்களுரைத்தபெரு நீதிநூற்பொருடெரிய முயலினம்மா*
பின்னோர்களுரைத்தவுரை பலவவையோரினுமையம் பிறந்தொன்றற் கொன், றன்னோர்சொன்மாறுபடும் பொருள்விளங்கவுருபுமுதலவிழ் த்துப்பாடு, மன்னோர்தம்வேதநாயகமுகினுல் போலுளதோ மதிக்குங் காலே ............................................ (சு)

பொருளுடையோனீயேயோ வடதிசைக்கோமகனுமுளன் புவன ங்காக்கு, மருளுடையோனீயேயோ நெடுமாலுமுளனீதி யமைநூல் சொல்லுந், தெருளுடையோனீயேயோ வள்ளுவனுமுளன்குளத்தூர்ச்

செல்வாநாளு, மிருளுடையவெழுகதிர்நேர் வேதநாயகமகிபா வியம்
புவாயே.......................................................................(௭)

தாவினூற்பொருட்கேள்வி யுறலதிகமதற்கதிகந் தானேகற்றல் *
மேவியதைவெளிப்படுத்த லதற்கதிகமதற்கதிகம் வியன்பாச்செய்தல்
பாவினுங்கற்பனையமைத்த லதற்கதிகநீதிநூல் பாடனூளும்......... ...*
பூவினிடையதிகமெனில் வேதநாயகமகிபன் புகழெற்றூமே...........(௮)

சேல்பாயும்புனற்குளத்தூர் வேதநாயகமகிபன் செய்தநீதி .... *
நூல்பாயுமறிஞரோ துண்ணியராய்ச்சிறந்துவரு நோன்மையாலே.... *
வேல்பாயுங்களிற்றரசர் மேன்மேலும்விருப்படமுற விளங்கியின்பச் .. *
சால்பாயுங்கடவுளடிக் கீழுறைவரொந்நாளுந் தவாதுதானே ........(௯)

நூலியற்றியீதலொன்றே யுள்ளதெனக்கொள்ளலேபன் னூறுமோ
ர்நம், மாலியற்றிக்கொடுத்திடுமைந் திணைக்கோவை யேற்றனையாலள
விலாத, சேவியற்றுபுனற்குளத்தூர் வேதநாயகமகிபா சிறப்பச்செய்
யுட்,பாவியற்றலேற்றலிவை யிரண்டினுநீயெப்போதும் பயிலுவாயே.

---

ஆயபுவியாளுமாங்கிலேயமன்னராண்டோ - ராயிரத்தெண்ணூற்
றைம்பத்தொன்பதனுக்கொத்த, தூயபுகழ்க்காளயுத்தியாண்டுறுதை
த்திங்க - டொகுதஞ்சைச்சுபாசோழித்தானுகாவின், மேயமுன்சீப்தி
காரஞ்செலுத்திடுநன்னாளின் - விளங்குகுளத்தூர்ச்சவரிமுத்துமகிபா
ல, னேயவரோதயன்வேதநாயகப்பேர்க்குரிசி - னீதிநூலியற்றியரங்
கேற்றினனன்குறவே ...........................................................(௰௧)

---

திரிசிரபுரம், ம-௱-௱-ஸ்ரீ.
சோடசவதானம்
சுப்பராயசெட்டியாரவர்களியற்றியது.

பொன்னேறுதமிழ்க்குரிசில் வேதநாயகமகிபன் புகன்றநீதித் .. *
தென்னேறுபனுவலினோர் செய்யுள்வரும்பொருளையுறத் தெரிந்தோர்
நம்பாற்,கொன்னேறுமனுப்பொருளு மெளிதினுணர்குவமாயிற் குறி
க்குமந்நூன், மன்னேறுபுகழ்மையையாஞ் சொலவல்லேமெனவகுப்
போர் மதிவல்லோரோ ...........................................................(௧)

மையேந்துமலர்ப்பொதும்பர் வளமேந்துந்தென்குளந்தை வாண
ன்சீர்சால், மெய்யேந்துபுகழ்க்குரிசில் வேதநாயகப்பெரியோன் விரித்
துநன்னூல், மொய்யேந்துமுன்னூற்கு முன்னூலென்கோவலது பின்
னூலென்கோ, கையேந்துபன்னீதி யனைத்தையுந்தன்பால்விளக்குங் க
திர்ப்பாலன்றே ...........................................................(௨)

தண்ணமைந்தகுணநிபுணன் சவரிமுத்துநரபாலன்றவத்தால்வந்
த, பண்ணமைந்தபெரும்புகழோன்வேதநாயகவள்ளவன் பகர்ந்தநீதித்,
திண்ணமைந்த பனுவல்பல கலையனைத்துந் தேர்ச்சியுளோர் திகழ்ந

ண்டு, கண்ணமைந்தமணிதுணையு மென்னிலொரு மணிதுணையாக்
கழறற்பாற்றே ........................................................(௩)

முன்னுளபல்கலையொழியப் பின்னுளபல்கலைகளெலா முதிர்ந்ததெ
ன்சொல், தன்னுளசப்படுத்தறுபா ரணைத்தினுந்தன்புகழ்நிறுத்துந்
தலைமைமிக்கோன், மன்னுறுசற்குணவேத நாயகமால்வகுத்தகலை வ
ண்மைக்கொப்பா, வுன்னுதலுங்குறையெவ்வனிற் பன்னவும்வாயெழுப்
படுமோ வுலகுளீரே ........................................................(௪)

திரைசுருட்டும்பாற்கடலும் வேதநாயகமகிபன் செப்புநீதி, வரை
சுருட்டும்பெருநூலும் புலவர்கட்குவான்பயனை வழங்குமாற்றால், உரை
சுருட்டுங்கலைவல்லீ ரொப்பெனயாமுரைப்பதெவ னும்பர்தந்நோய்,
நரைசுருட்டுமருந்துடைய தவஞ்சுருட்டுமிதற்கிணையாநவிறற்பாற்றே()

முறைதிறம்பாநெறியுடையோன் வேதநாயகநிபுணன் மொழிந்த
நீதித், துறைதிறம்பாப்பலதுறைப்பாற் செய்யுளுமுன்னுளவாயிற் சுரு
க்கமில்லா, மறைதிறம்பாநாயனார் முதலானோர்வருந்தினூல் வகுப்பர்
கொல்லோ, குறைதிறம்பாவுலகினுளோர் குறைதிறம்பிநன்னெறியை
க் கொள்ளுமாறே ........................................................(௬)

விண்ணுலகின்கற்பகமோ விருநிதியோவெனவிளம்பும்விரகுளோ
ரை, மண்ணுலகோரவ்வாறு சொலுமாறு வழங்குபெருங் கொடையி
ன்வல்லோன், தண்ணுலவுநதிகுலத்தோன் வேதநாயகமுன்னோன் சா
ற்றுநீதிப், பண்ணுலவுநூற்பயனே யறப்பயனென்றுணரவல்லோர்
பண்பின்மிக்கோர் ........................................................(௭)

மலைசுரக்கும்பெருவளஞ்சேர் தென்குளந்தைப்பதிவாணன் மலரு
ஞ்சீர்த்தி நிலைசுரக்கும்வண்மையினான் வேதநாயகநிருப னிகழ்த்துநீ
திக் கலைசுரக்குந்தெள்ளமுதைச் செவிமடுப்பின்வான்புலவர் கரை
கொன்றெங்கும், அலைசுரக்குமமுதினைவாய் மடுப்பவிரும்புவர்கொல்
லோ வறிவின்மிக்கோர் ........................................................(௮)

புள்ளிருக்குநறும்பொதும்பர் புடையிருக்குந்தென்குளந்தைப் புரி
யோன்காமர், கள்ளிருக்குங்கருங்குவளைக் கணியிருக்கும்புயசயிலன் க
ருதிமேலோர், நள்ளிருக்கும்வேதநா யகப்பெரியோனவினீதிப் பனு
வல்வேதத், துள்ளிருக்குமுணர்வுடையோர் தாவிருக்குமதன்மிகுதி
யுரைக்கற்பாற்றே ........................................................(௯)

செல்லாரும்பொழிற்குளந்தை வேதநாயகநிபுணன் செறி
நீர்வையத், தெல்லாருமெளிதினுணர்ந் துய்வகையைப்பெறும்வ
ண்ண மியம்புநூற்குச், சொல்லாருமறையவர்க்கே யுரியமறைத
னைத்துணையாச்சொல்லும்பாற்றே, அல்லாருங்கலைமதிக்கோ ரக
த்தொளிருஞ்சுடர்நிகரா வறைவோர்யாரோ ........................(௰)

கான்காட்டுங்கருங்குவளைக் கணிகாட்டுமணிப்புயத்தோன் கலையின்வல்லோன், தேன்காட்டும்பெரும்புகழோன் வேதநாயகமகிபன் றிகழுநீதி, தான்காட்டும்பலகலையின் பொருண்மையினைவனாயறுத்துத் தழைப்புற்றோர்ந்து, வான்காட்டும்புலவர்களிப் புறவொருநூலொருங்குணர்ந்து வகுத்தானன்றே..........(யக)

---

திரிசிரபுரம், ம-ா-ா-ஸ்ரீ.

தியாகராசசெட்டியாரவர்களியற்றியது.

சுரும்புசெறிநறுங்குவளைத் தொடையலணிதடம்புயத்துச் சுகுணமேரு, கரும்புசெறிவயற்குளந்தை வேதநாயகமகிபன் கவிவினுராய்ந், திரும்புவிபோபொளிதுணர நீதியெலாஞ்செந்தமிழி னிசைத்துப்பெற்ற, பெரும்புகழையென்சொல்கே னுபிரநாவிருந்தாலும் பேசொணுதே .... ............ ............... ..... (க)

தனையடைந்தோர் மற்றொருவர்ச் சாராமணிதியளிக்குந் தகையான்மிக்கோன், புனைபுகழ்சேர்வேதநாயகமாலன் னவனிநிதி புகன்றநூலுங், கனைகடல்சூழுலகதனிற் றனைபுணர்ந்தோர்மற்றொருநூல் காணுவண்ணம், வினையநனியினிதுதவும் வித்துமதன்முளையுமென்றும் வேறுகாதே .... ............ ............. (உ)

பன்னூலும்புகழ்திருவள் ளுவப்பயனேமுதலாகப் பாரின்மேய, வெந்நூலும்புகனீதி யெலாந்திரண்டோரொழில்வடிவமெடுத்துநின்று, தொன்னூல்களுணர்வேத நாயகமாலென்றொருபேர் சுமந்துநீதி, நன்னூலொன்றுனாத்திட்டா விறும்பூதென்றேபுலவீர் நவிற்றுவீரோ......... ......... ..... ........ ..... ......(ங)

நோடியுடையாரொன்றுகொடுத்தாலென்றேபெருமை குளிர்நீர்வைப்பி, ஞடிநூலெலாமுணர்ந்த வேதநாயகமகிப னன்னூல்பலல, பாடியவல்லோனென்று பாடிஞற்பெருமையெவ்ன் படிப்போருள்ளங், கூடியுணர்வாக்கவினுற் பெருமைநனியுடையதவன் கூறு நூலே.... .... ........... ..........................(ச)

நுண்ணுணர்விற்குறைவுளனே நூலாய்விற்குறைவுளனே நுண்ணூல்பல்ல, பண்ணுறநண்குணரானே வேதநாயகமகிபன் பகர்ந்தானீதி, நுண்ணுறு நூலொன்றுகவி நானூற்று நாற்பதவனலங்கண்முற்று, மெண்ணுதவிலார்புகழ்க யான்புகழேன்யான் புகழே னிதனுன்மாதோ.................................................(ரு)

பெருநூல்கண் முழுதுணர்ந்த வேதநாயகமகிபன் பிறங்கு
நீதி, தருநூனன்கினிதுரைத்தா னென்னலளவையினதனைச் சாற்
றுங்காலை, யொருநூலென் றுவுமுணர் வோர்க்குப்பன் னூற்பய
னு முறுத்தலாலவ், வருநூலின்குணநோக்கிப் பன்னூலென்றே
துணிவுற்ற றைபலாமே ........................................ (௬)

---

திரிசிரபுரம், ம-ா-ா-ஸ்ரீ.

குப்பமுத்தாபிள்ளையவர்களியற்றியது.

சீர்மணக்குந்தமிழ்ப்புகழுந் திருமணக்குப்பொருட்புகழு
ஞ் செழிக்கும்பூபன், றார்மணக்கும்புயசயிலன் வேதநாயகமுகி
ன்முத் தலமும்வாழ்த்தற், கேர்மணக்குமியற்றமிழா லெடுத்து
ரைக்குநீதிநூ லெடுத்துளோர்வோர், பேர்மணக்குமுகமகமும்
பெரிதலர்த்திவிரிசுடர்போற் பிறங்குமன்றே ... .... .... ...... (௧)

சேலுறுப்புனலசும்புஞ் செய்புடுக்குங்குளந்தைநகர் செழி
க்குங்கூர்மை, வேலுறுவேள்பொருவும் வேதநாயகக்குரிசில் விள
ம்புநீதி, நூலுறுச்சொற்செறிவும் பொருட்செறிவு நுண்ணுணர்
வி னோக்குவோர்தம், வாலுறுமனத்தையுடன் வளைத்திழுத்தலாற்
காந்த வரையென்பாமால்........................... .... ............ (௨)

கலையேறும்புகழ்ப்புலவர் கருத்தேறுங்கதிர்ப்புலமை க
திர்க்குஞ்சீர்த்தி, நிலையேறும்வேதநா யகப்புனிதனோர்ந்துரைக்
கு நீதிநூலாற், புலையேறுஞ்சிற்றுணர்விற் புரிந்தேறுந்தரத்தரு
ந்துரப் புலமிக்கோங்கி, யலையேறும்பெருங்கடல்சூ ழவனியின்
மெய்யறம்புரிவோ ரானார்மன்னோ .... . ......................... (௩)

வலம்வளர்முத்தமிழ்ப்புலவர் மனத்தினிற்குடிபுகுந்து வ
ளருஞ்சீர்த்தி, நலம்வளர்நம்வேதநா யகத்தருமனுனிலத்தோர் ந
யம்வைத்தோரப், பலம்வளர்திப்பசுந்தமிழிற் பன்னுமொளிர்நீ
திநூல் பகர்வதோர்ந்தே, சலம்வளர்வச்சிரதரனுந் தனியரசுநடத்
திடுமேற் றலம்வாழ்வோர்க்கே.. .......... . . .... . ........ .... (௪)

வீற்றிருக்கும்பெருஞ்செல்வ மிகுத்திருக்குங்குளந்தைநகர்
விளங்கமேன்மை, யேற்றிருக்கும்வேதநா யகமதவேளியற்றமிழா
லினிதுண்டாக்கு, மூற்றிருக்குஞ்சுவையமுதி னெழுக்கிருக்கும்
பொருணீதி யொளிருநூலே, மாற்றிருக்குமனத்திருக்கு மலத்
திருக்குங்கடிந்துயர்த்தும் வளர்மாக்கட்கே.......................(௫)

அருண்மடுக்குமதுரைநகரகமடுக்குந்தமிழ்ச்சங்க மடுத்துவாய்மைப், பொருண்மடுக்குப்புலவர்மொழி நூன்முழுதுஞ்சங்கையெனப் பொங்கியார்க்குந், தெருண்மடுக்கும்வேதநாயகமுனிசெய்நீதிநூ றெளிவோர்யாரோ, கருண்மடுக்குங்கருத்துடையா ரொனிதுலகிலவன்பெருஞ்சீர் கழறற்பாற்றே .......... ....... (௬)

பல்வளஞ்செய்குளந்தையெழிற் பதிபுரக்கும்பெரும்புகழ்ச்சீர் படைப்போன்கல்வி, வில்வளஞ்செய்வேதநாயகதூயன்வினைபவள மிகுந்துமேலோர், சொல்வளஞ்செய்நூலெனத்தஞ் சூட்டணியப்பொருள்சுரந்து துளும்புநீதி, நல்வளஞ்செய்நூனவின்று னயமுணர்வோரொந்நூலு நயக்கார்மன்னே ............ (௭)

பூமேவுமியற்புலவர் பொங்குசுவைப்பாவினத்தாற் புகழ்ந்துவாழ்த்து, மாமேவுவேதநாயகமகிபன்மூவுலகின் வாழும்யார்க்கும், பாமேவுபிறப்பிறப்பாம் படுகடனீந்திடும்படியோர் பண்புகூர்ந்து, தேமேவுபுகழ்த்தமிழாற் செயுநீதிநூற்குவமை தேர்வோர்யாரோ.......................................... (௮)

பொன்செய்திருவள்ளுவனார் புகன்றருளுங்குறண்முதலாப் புகலெந்நூலு, மென்செய்வதெனவினிநம் வேதநாயகமகிபனெளிதிற்கூறுந், தென்செய்நயஞ்சிறந்தொளிருஞ் செறிநீதிநூலனவோர் தெளிநூல்சொல்வோர், மின்செய்நிலவுலகிலுண்டேல் விண்டலத்துமுண்டகப்பூ விரிவுண்டாமால் .......... ............(௯)

குணமேந்துங்கற்பகக்கோ வேதநாயகக்குமுனன் குறையாத்தொல்சீர், வணமேந்துங்கலைகளெலா மகிழ்ந்துணர்ந்துவகுத்துரைக்கு மன்னுநீதிக், கணமேந்துநூலுலகோர் கவினிதயமலர்களெலாங் கமழுமென்றாற், பணமேந்தும்பணியரசு மவன்பெருஞ்சீர்புலவுமுன்னிப் பணிக்கற்பாற்றே...................(௰)

---

திரிசிரபுரம்-ம-ா-ா-ஸ்ரீ.

தவசியாபிள்ளைகுமாரர் ஜெகநாதபிள்ளையவர்களியற்றியது.

பல்கலைபயின்ற வேதநாயகப்பேர்ப் பாவலன்சீர்பரப்புறுமோ, நல்கலினீதிப் பனுவலுக்கிணையோ வண்ணன்மாதவர்முனமியற்றுஞ், சொல்வளஞ்செறிந்த நூலெலாமதனுற் றுதிபெறுமதிஞர்தநாவின், மல்குதலொழியா ததின்றிறப்புவிமேல் வகுப்பவுமரிதரிதம்மா..................................................... (௧)

மன்னுநற்கங்காகுலமணியென்ன வயங்குறும்வேத நாயக
மால், பன்னருநீதிநூற்குடைந்தெழில்செய் பண்புறுநகரொரீ
இயொளிரு, நன்னயங்கனிந்தகுறுமுனிமலைய நண்ணியுண்ணிறை
தரும்விதிர்ப்பாற், றுன்னுதென்கானெட்டுயிர்ப்பெறிவானோத்
சொல்வலரெவரதன்சீரோ ................................ (௨)

கள்ளருப்பதுமத்தடம்புடைசூழுங் காமர்சேர்குளந்தைமா
மகிபன், றெள்ளுபல்கலையின்றீம்பொருள்கவர்ந்த திறஞ்செறி
வேதநாயகவே, ளுள்ளகமகிழ்ந்திவ்வுலகெலாம்பயப்ப வோதுந
ன்னீதிநூல்புலவர், நள்ளிருந்தினியநயம்விளைத்திடுமே னட்ட
லாமெனதையதற்கிணையே ................................ (௩)

செந்நெலம்படுகர்சூழ்ந்தொளிர்குளந்தைத் திணிபெறும்
வேதநாயகமா, லுன்னுமொண்பொருள்சேர்த் தியற்றுநன்னீதி
யுயர்வுளோர்செவிமடுத்தருந்திற், பன்னுவர்கொல்லோமுன்னு
ளநூல்கள் புலவுநற்பயனுளதென்றே, யன்னதற்கிணையொன்று
ண்டெனப்புவிமே லறைதரத்துணிகுநரெவரோ ............ (௪)

குவளைசேர்புயத்தன்சவரிமுத்தென்னுங்குரிசினன்காற்றிய
தவத்தாற், புவிமிசையுவகைபூப்பவந்துதித்த புரவலன்வேதநாயக
வே, ணவையறவுரைத்தநீதிசேர்பனுவ ஞனிலத்தவர்க்குறுதுணை
யா, வவமில்பல்லறங்களொருங்குணர்த்துதலா னருமறைக்கொப்
பெனலாமால் ................................ (௫)

உற்றவெஃமிடியைக்களைந்தருள்புரிய வுலகிடத்துதித்தருங்
கலைகண், முற்றுணர்வேதநாயகப்பெரியோன்மொழிகுவனீதிநூ
லென்றே, நற்றமிழாய்ந்தநாயனார்முதலா ஞானிகண்முன்றெரி
ந்திருக்கிற், சொற்றுவரோநூல்சுடர்முனர்த்தீபந் துன்னல்போ
லாமெனநினைத்தே ................................ (௬)

நதிகுலமெவணும்புகழ்பெறவுதித்த நாவலன்வேதநாயகவே,
டுதிபெறவுரைத்தநீதிநூன்மேவுஞ் சுவைபுறுபொருளுணராதார்
கதிநலமளிக்குமின்னறமறியார் கனவனவபுகுதவுமுதவார் ......*
முதிரறிவடையாரெனிலதன்பயனைமுழுதுரைத்திடவலோர்யாரோ

கடல்புடையுடுத்தவுலகுசெய்தவமோ கன்னனு நாண்செயவு
தவு, மடலுறுசவரிமுத்தெனுமகிப னாற்றியதவங்கொலோநீதி,
நடவுநல்வேதநாயகப்பெரியோ னண்ணிய வமுதமும்பரகு,
மடிவிலின்றேனுங்கைத்திடவுரைத்தான் வான்பொருணூறனைமா
தோ ................................ (௮)

முகிலெனக்கனகமளவிகந்தரிய மூவிலாப்பாவலர்க்குதவி * நகைசெறிபுகழாம்படாந்தரித்திலங்கு நாவலன்வேதநாயகமால் * சகமுழுதுவப்புற்றதிசயம்பயப்பச்சாற்றுநன் னீதி நூற்கிணையா, மிகைபடவிரும்பிவருந்தினும்வேறுவிதிப்பவல்லவரொவர்மாதோ

நோன்செறிமனத்தினிருளகன்றிரிய நவலுமாண்பொருளொலாந்திரட்டித், தேன்செறிநீதிநூலெனவகுத்துச் செகதலமுய்தரவளித்தான், கான்செறிகுவளைக்கணிபுனைந்தொளிருங் காமர்செய்திண்புயாசலனும், வான்செறிபுகழ்சேர்வேதநாயகப்பேர் வயங்குநூற்கலைவலான்மன்னே ........................ (ய)

திரிசிரபுரம் - ம - ா - ா - ஸ்ரீ.
நாராயணபிள்ளையவர்களியற்றியது.

வந்தவிரவலர்தாவென்றுரையாமு னுணர்ந்தவனவள்ளலாகுஞ், சந்தனமென்பொழிலுடுத்தகுளத்தூர்வாழ் சவரிமுத்துத்தாதாவீன்ற, சுந்தரஞ்சேர்வேதநாயகமுகில்செய் நீதிநூற்றணிவேயன்றி, யந்தமனுவுரைத்தவழக்கதனையார் நாடியினியாய்வர்மன்னே ........................(க)

திரிசிரபுரம் - ம - ா - ா - ஸ்ரீ.
குப்புசாமிநாயகரவர்களியற்றியது.

எத்திசையும்புகழ்நடத்துஞ் சவரிமுத்துநரபாலனினிதினீன்ற, புத்திரனெத்திறத்துநலங்குன்றுத பொருளுடையோன்புலமைமிக்கோன், சத்தியநன்னெறிவழுவா வேதநாயகமகிபன்றகைமைதேர்ந்து, மத்திமருத்தமராகவுத்தமநூல் வகுத்துரைத்தான் மகிழ்வுற்றன்றே ........................ (க)

சந்திரனைத்தாண்மீதுங் கதிரவனைத்துசெனவுந் தரித்துவான்மீன், பந்திதனைமுடியெனவுஞ் சிரத்தணிந்திங்குலகனைத்தும் படைத்ததாயைச், சிந்தையின்கணிங்காநற் குளத்தூர்வாழ்சவரிமுத்துச் செல்வனாலே, வந்ததவவேதநாயகனுரைத்த நூனீதிவழக்குநன்றே. ........................(உ)

திரிசிரபுரம் - ம - ா - ா - ஸ்ரீ.
குழந்தைவேலப்பிள்ளையவர்களியற்றியது.

கற்றவர்நாவினுக்கினிக்குங் கேட்டவர்தஞ்செவிக்கினிக்குங் கருதுமாறு, பெற்றவர்கண்மனக்கினிக்கும் பேருலகெலாம்புகழப்பிறங்கியோங்கி, நற்றவனுகியவேத நாயகவேள்செந்தமிழா

ணவின்றநீதி, யுற்றநன்னூற்பெருமைதனை யாயிரநாவுடையோ
னு முரைக்கற்பாற்றே .. .... .... .......... ..... .... ...... .......... (௧)

---

திரிசிரபுரம் - ம - ள - ள - ஸ்ரீ.

சரவணப்பெருமாள் பிள்ளையவர்களியற்றியது.

பூவுலகிற்கவிஞர்களும் பொன்னுலகிற்புலவர்களும் பொ
து நூல்செய்ப, மேவுவரோமேவா ரஃதியா துகாரணமென்னின்
விளம்பக்கேளீர், நாவலனும்வேதநா யகவேள்சொன் னீதினூன
விலக்கேட்ட, மாவலனுன்முகனுதி சேடனிருவரும்பூவுண் மறை
ந்ததாலே .... ... ......... .... .... .... .......... ......... . ....... (௧).

சைவர்கடஞ்சமயநெறி நிலையென்பார்நாரணன்றன் சமய
த்தோர்கள்,பொய்யில்விசிட்டாத்துவிதப் பொருளென்பாரேனை
யர்தம் பொருளேயென்பார், சைவருஞ்சத்தியவேத வேதநாயக
னீதி காட்டுநூலுண், மையிலறம்பொருளின்பம் வீடடையும்வி
திவிலக்கின் மார்க்கங்கண்டே .... . . . . ... .......... ......... .....(௨)

---

திரிசிரபுரம் - ம - ள - ள - ஸ்ரீ.

அப்பாவுப்பிள்ளையவர்களியற்றியது.

கங்கையங்குலத்தை விளக்குறுமணியாக் காசினிமேல்வ.ருந்
தூப, துங்கனும்வேத நாயகப்புலவன் சொற்றநன்னீதிவையவிண்
ணோ, ரிங்கிதங்கனிந்த பண்டைநன்மறைபோ லெடுத்துரைத்துவ
ப்பமாபாயி, னிங்குளர்தம்மா லதன்சிறப்புரைக்க வென்னணமி
யன்றிடுங்கொல்லோ .. ......... ... ............... .. ..... . . ........(௧)

---

திரிசிரபுரம்-ம - ள - ள - ஸ்ரீ.

சின்னையப்புலவராலியற்றப்பட்டது.

சீருலவுசெந்நெல்கன் னற்றிரளடர்ந்தமரர் திகழுலகினுக்
குநிழல்செய்,தென்குளந்தைப்பதிக் காதிபன்குவளையணி திண்பு
யாசலவுத்தமன், காருலவுகங்கா குலத்தினைவிளக்கிவான் கதிரொ
ளிபரப்புதீபன், சுடன்மடைதிறந்தனன் கல்விப்பிரசங்கங்க ளங்
கறவியற்றுநிபுணன், பேருலவுவேதநா யகமகிபனுலகுளோர்
பெட்புடனகங்களிப்பப், பேசுநீதிப்பனுவ னூனூற்றுநாற்பது
ம்பெரிதுணர்ந்தவர்பெரியருட், பாருலவுநடுநா யகம்போற்சி
றப்பளாய்த் தங்குவாரொனிலநூலின், றகைமையெவ ருரைசெப்
வ ரன்றியுமனந்தனுற் சாற்றிடற்கரிதுமாதோ........................ (௧)

---

## திரிசிரபுரம் - ம - ள - ள - ஸ்ரீ.

## தெய்வநாயகம்பிள்ளையவர்களியற்றியது.

### வெண்பா.

எனையயரா நீங்கி யெழில்வேதநாயகபூ ............ *
மானையடைந்தோ துவித்தாய் மாநீதி ஞானமின்னே
பெற்றவமாமென்று பிழையுனக்குச்செய்ததெவ... *
னற்றவமென்செய்த தவனு .................. (௧)

அவ்வேதநாயகனு மாரமுதீந்தானதுபோ............ *
லிவ்வேதநாயகனு மீந்தனனு - லவ்வமுதை ...... *
வான்புலவர்கொண்டார்மனுநீதி நூல்புவன ......... *
வான்புலவர்கொண்ட மருந்து .................. (௨)

மாவேதநாயககோமானியற்றுநீதி நூற் ............ *
பாவேதகவோர்ந்த பண்பினுற் - றீவே............ *
தனைக்குமறியாமைக்குஞ் சார்மலமூன்றிற்கும்...... *
வினைக்குங்கொடுத்தோம் விடை .................. (௩)

## குளத்தூர் - ம - ள - ள - ஸ்ரீ.

## சண்முகம்பிள்ளையவர்கள் குமாரர் முத்துவேலப்பிள்ளையவர்களியற்றியது.

நலத்தைவிளக்கினபனுவ னீதிநூலொன்றியற்றி நாடவல்லார், புலத்தைவிளக்கினமென்பாய் வேதநாயகசுகுண புலவரோறே, குலத்தைவிளக்கினஞ்சிறந்த குடியைவிளக்கினநமது குளத்தூரொன்னுந், தலத்தைவிளக்கினமென்றுத் தன்மையெவனெனக்கிது நீ சாற்றுவாயே........................................ (௧)

அகவையினீயெனக்கொவ்வாய் கல்வியில்யானுனக்கொவ்வேனுனபோது, மிகவையினின்றம்பிதரு நீதிநூலுணர்ச்சியின் மற்றியாவர்கொள்ளார், தகவையினியார்சிறவா மொனப்புவிக்கூறவினியானுந் தக்கோனுமேனன், நகவையில்மேவுறுசீர்த்தி வேதநாயகசுகுண நாவலோயே ........................................ (௨)

நிலக்கொழுந்தேயெனக்கல்வி விருத்தியனுய்நீதிநூ னிகழ்த்தியான்றோர், புலக்கொழுந்தேற்று புதந்தாயெம்மனோர்க்கும் புகழ்பாம்புரிகைமாறென், நலக்கொழுந்தேமலர்ப்பொழில்சூழுடுத்தகுளத்தூர்ப்பிறவி நயந்தவெங்கள், குலக்கொழுந்தேவேதநாயகமகிபாவெனப்புகழ்ந்து கூறுவோமே.................. (௩)

அருந்துசுவையமுதளித்த மாலினுநன்னீதிநூ லமுதந்தந்து, வருந்துதலில்புகழ்படைத்தாய் பகீரதனுமுனக்கிணையோ வள்ளலேசீர், திருந்துகுலமணியேயென் செல்வமேயெங்கள்குடித் திலகமேமெய், பொருந்துகலைவலவதுல நலவேதநாயகவண் புலவரேறே ...... (௪)

---

ஷியூர் ஷியார் குமாரர்- ம-ள-ள-ஸ்ரீ.

அடைக்கலம்பிள்ளையவர்களியற்றியது.

பொறிசால்வேதநாயகப்பேர்ப் புனிதனேசெந்தமிழ்ப்பல வன், நெறிவழாதிங்கவனுரைத்த நீதிநூலேசோதிநூல், மறிவெண்டிரையார்கலிவைப்பின் மற்றையோராக்கவிகுரோனல், அறிவிலர்ணைமுழுமகனென் றந்தோகூறல்கடிக்குமே ... ... ..... (௧)

சோதியாதவனனைய வேதநாயகசுகுணத் தோன்றல்வாணி சாதிமாமலரினைத்தன் றணைநாவையேனையர்நாத் தவிசைநீத்து, மேதினியிலெந்நாளு முன்னாவில்வீற்றிருந்து விளங்குமாற்றா, னீதிநூலொன்றேமற் றுதிநூலையுமினிநீ நிகழ்த்துவாயே. (௨)

அன்புநீர்பெருகவறக் கரைவாய்ந்தவேதநா யகப்பேர்வாவி யின்புகூர்நீதிநூற் றாமரைப்பல்கவிமலர்ப்பல்லிருந்தாட்டோட் டுவன்புசால்கற்பனைத்தா துகள்பொருந்திநீதிமது வழிதலாலே, முன்புகாணாதவுயி ரளிசெவிவாய்மடுத்துணுமேன் மொழிவதென்னே ...... (௩)

மாச்சீரும்விளச்சீருங் காய்ச்சீருங்கனிச்சீரும் வண்மைசான்ற, பூச்சீருநிழற்சீரு நீபுகன்றநீதிநூல் பொருந்தலாலே, யேச்சீரும்வேதநா யகவிளவலேயுலக ரிணையுண்டென்னும், பேச்சீரும் பொழிலுவப்ப தென்பர்பொழி லென்றேயான் பேசுவேனே ...... (௪)

---

குளத்தூர் ம-ள-ள-ஸ்ரீ.

முத்துசாமிபிள்ளையவர்கள்குமாரர் தயிரியம்பிள்ளையவர்க ளியற்றியது.

பருதிதனக்கெதிரான சுடரில்லையிறையவனாற் பகரப்பட்ட, சுருதிதனக்கெதிரானகலையில்லை யிருங்குளத்தூர்த் தோன்றல்பாருங், கருதியமைத்திடுபுகழ்சால் வேதநாயகசுகுண காமாவிங்கு, வருதிநின்வாய்வருநீதி நூற்கிணையாகிய நூலுமற்றொன்றின்றே ...... (௧)

வளாமிசைபேறியசுடர்போ னீதிநூலொன்றியற்றி வயங்கச்செய்த, வுளாமிசைவாய்வேதநா யகமான்மைத்துனனெனயானுற்றநீராற், களாமிசையேறுதிறைவ னுண்பானடங்குபெருங் கடல்புரண்டு, தளாமிசையேதினுமஞ்சே னதற்கென்பேர்சான்றுதரா தலத்துள்ளீரே.............................. (௨)

அன்னத்தைமலர்தாங்கு குளத்தூரினுதித்திறைவ னமைத்த நூலின், முன்னத்தை வெளிசெய்து நீதிநூலொன்றியற்றி முனிவிலாத, வென்னத்தைமகன்வேத நாயகமால்புகழ்ச்சுமையொன்றெனக்கும்வைத்தான், றன்னத்தையறியாது வாழ்வேன்மற்றினியென்னோதான்செய்வேனே .......................... (௩)

காமருநம்வேதநா யகமீன்றநீதிநூற் காமதேனு, மாமருநாலடிகொடவ னியிற்பயின்றுகற்பனைவண் மடிசுரந்து, பாமருநன்னீதியெனும் பால்பொழியப்பாவமெனும் பசிகெட்டோடத், தாமருநல்லுயிர்செவிவா யுண்டுமனவயிற்றமைத்துத் தழையுமாலோ.............................. (௪)

---

குளத்தூர் ம-ா-ா-ஸ்ரீ

சுப்பராயபிள்ளையவர்களியற்றியது.

வெள்ளைவாரணனனைய வேதநாயகதிருபா, தள்ளரியநீதிசொலித் தாரணியோர்புகழையெல்லாங், கொள்ளைகொண்டாயையவுனைக் குவலயத்திலெனக்கிளைய, பிள்ளையெனநானிருக்கப் பெரியவனீயாயினையால்.............................. (௧)

நீர்படைத்தகுளந்தைநகர் நிதிவேதநாயகமா, லேர்படைத்தநூலியற்றி யிசைபடைத்தானலம்படைத்தான், சீர்படைத்தான் கனம்படைத்தான் சிற்றனைசேயவனெனக்கென், பேர்படைத்தேன்புகழ்படைத்தேன் பேறிதெவர்படைத்தாரால்.......... (௨)

---

குளத்தூர் ம-ா-ா-ஸ்ரீ

சண்முகம்பிள்ளையவர்கள் குமாரர் சிதம்பரநாதபிள்ளையவர்களியற்றியது.

சீர்பெருகுகுளத்தூர்வாழ் சவரிமுத்தேந்திரமகிபன் சிறப்பினீன்ற, வேர்பெருகுகுணவேத நாயகமாலெங்கட்கோ ரினியகோமான், பார்பெருகுபல்கலைதேர் புலவருளங்களிதூங்கப் பண்மிற்செய்த, பேர்பெருகுநீதிநூற் பெரும்புகழையெம்மனோர் பேசற்பாற்றோ.............................. (௧)

மண்ணினுளோர்புரிபவத்தை மாற்றமனுவுருவெடுத்த மாசி
லான்பி, னெண்ணியதைநிறைவேற்ற வேதநாயககுண வியல்பி
னேனைப், பண்ணியிந்தப்புவியில்விட வந்ததற்கோர்சான்றாகப்
பரிந்தன்னான்மெய்ப், புண்ணியமார்க்கந்தெரிக்கு நீதிநூலொன்
றியற்றிப் பொலிவுற்றானே ........ .... ........,....... ..... ... .(௨)

சண்பகப்பூஞ்சோலைகள்சூழ்ந் 'திலகுமெங்கள் குளத்தூர்
செய்தவத்தால்வந்தோன், றண்பணைசூழ்நாடெலாம் புகழ்வேத
நாயகச்செந் தமிழ்க்காசான்,விண்பிறக்குமன்பருக்கு வேதநாய
கனவின்ற வேதநூலைப், பண்புடனன்னீதிநூ லெனப்பாடியுல
குகொளப் பரப்பினனே .... ....... .. ... .... .. ......... ....... (௩)

பொன்னுலகம் புகழ்ந்தேத்தப் பூவுலகிற்பொலிந்துவளர்
புரியாயெங்க, ணன்னகராகியகுளத்தூர் நாயகன்பல்கலையுணர்ந்
த நல்லோன்வல்லோன்,மன்னவர்தங்கண்மணிநம் வேதநாயகவது
லன் வகுத்தநீதிச்,சொன்னயமோர்ந்தனந்தன்முடி யசைக்கவிய
லாதுநெஞ்சந்துளங்கினனே........ ....... ...... . .......... .... (௪)

பலகலைகளுணர்ந்தவெங்கள் வேதநாயகமகிபன் பாரிற்செ
ய்த, நலகலைநன்னீதிநூ லென்னுமிந்தப்பாவதனை நவிலப்பெற்
றோ, ருலகதனிற்பொய்வாழ்வை யொளித்தப்பாலொளிர்கின்ற
வும்பர்கோமான், றலமதனிற்சேர்வதற்கோர் தடையிலையென்
றெல்லோருஞ் சாற்றுவாரோ...... . ...... .... ..... . ....... ......(௫)

எழுகடல்சூழ்புவியினுளோ ரெந்நாளுஞ்செய்பவத்தையெ
ளிதிற்போக்க, முழுதுமுணர்வேதநா யகவள்ளறிருவாக்கான்
மொழிந்தவின்சொற்; பழுதில்பெருநீதிநூல் படித்தறவிதிவ
ழியே பயிலாநிற்போர், வழுவிலாமுத்தியினை யடைவதற்கோர்
தடையுளதோ மதிக்குங்காலே........ ..... ........,.... . .... .... (௬)

அனந்தனகத்தியனென்னக் கேட்டதலாற்கண்டறியோ மவ
ர்தம்பாட்டிற், றினந்தினமுமிருந்ததல்லால் யார்க்கென்செய்தார்
நீதி செப்பினார்கொல், அனந்திரியுங்குளந்தைநகர் புரந்தருளும்
வேதநாயகனெ னண்ணன்,கனந்தருநல்லறந்திகழ வுவந்துநெறி
பகர்ந்துபுகர் களைந்தான்மாதோ........ ............ . .......... (௭)

பொன்கொலனந்தன் கொன்முருகன்கொல்கும்பசன்கொ
லெனப்புகல்வார்நின்னை, யென்கொலிதுபுகழ்வேத நாயகபூபா
லாகையேவாயாக, மின்கொலெனுங்கதிர்மதிபஞ் சுவாயாகநீதி
யெனு மிளிர்நூனூற்றாய், நன்கொலொருபெண்ணெனப்பேன்
முனிவையேற்கலைப்பெண்ணென்று நாட்டுவேனே........ .....(௮)

தாதாரமணிமார்பா வேதநாயகமகிபாசகுநூல்கற்பித் ... *
தாதாரமாகியெனக் கவிர்குரவாவுரவாவெ னண்ணாவெண்ணாக் *
காதாரக்கேட்டுமகிழ் நீதிநூலியற்றியநின் கருணைக்கியானுன் *
பாதாரவிந்தமடிக் கடிபணிவேன்வேறென்னேபண்ணற்பாற்றே

தாபுற்றபெருங்கருணை சால்வேதநாயகமால்..........*
வாயுற்றநீதிநூல வாழ்த்தவவனுவினைப்போற்.......*
சேபற்றநாவெனக்குஞ் செய்யாததீவினையால்......*
வீபுற்றான்கோயிலற்றான் வேள்வியற்றான்வேதாவே.

வெண்பா.

தமிழ்வாரியுண்டுசதாநீதிநூலா.........................*
மமிழ்தவருட மளித்தே-யமைபும்.......................*
எழிலியையுமாவேத நாயகக்காரொண்விண் ..........*
எழிலியையுநீத்ததிணை.................................(௰௧)

---

குளத்தூர் - ம - ா - ா - ஸ்ரீ.
முத்துவேலப்பிள்ளையவர்கள் குமாரர் சாமிநாதபிள்ளை
யவர்களியற்றியது.

வெண்பா.

மாவள்ளுவரவ்வை மாமுனிவர்மற்றையர்சொல் .... *
பாவளமையாரும் பகுத்துணர-மேவுபுகழ்....... *
ஞாலநிற்குஞ்சீர்வேத நாயகவேணீதிநூல்.......... *
பாலகர்க்குந்தோன்றும் பயன்......................*

விருத்தம்.

புண்ணியமெலாமொருங்குற் றெனக்குளத்தூ ரவதரித்தபுனிதனெங்கள், பண்ணவனாகியகருணை வேதநாயகமகிபன் பகர்ந்தநீதி, மண்ணுலகோர்மடமையிரு ணீக்கியறிவினைவிளக்கி மாசகற்றி, விண்ணுலகவின்பசுக மடைவதற்குவழிகாட்டும் விளக்கமாமே.............................................(௨)

வெண்பா.

விண்கற்பகமு மிளிர்வேதநாயகநூ ..................*
லொண்கற்பகமு முளபுலவர்-நண்ணவை..............*
மறக்குமதுமறவா மாண்பிதனுகி .....................*
பிறக்குமிதுமேலேற்றமே ..............................(௩)

---

சாறணைக்குடி-ம-ா-ா-ஸ்ரீ.

நல்லதம்பிபிள்ளை யவர்களியற்றியது.

கொம்பியன்மாங் குயில்கூவுங்குளத்தூர்வாழ் வேதநாயகக் கோமானே, வம்பியலாநீதிசொல்லிப் பெற்றோர்க்குமுற்றோர்க்கு மகிமைதந்த, வெம்பியேநம்பியே நவமணியேயாருயிரோ யிருகண்ணேயுன், றம்பியெனப்பிறவாமற் றமயனெனப்பிறந்தேன்யான் சபலமென்னே ........ ........ ......... .... ..... ......... (௧)

எழுதுகருவிகள்செய்வோ ரெழுதறியார்சரஞ்செய்வோரெய்தறேரார், பழுதறுநூல்பலசெய்துந் தாமேநன்னெறிநடவார் பலருண்டான்மற்றோர், தொழுதகுசீர்வேதநா யகக்குரிசினீதிநூல் சொல்லித்தானே, முழுதுமவ்வாறொழுகிவழி காட்டலாலவன்புகழை மொழிபார்யாரோ......... ........... ......... ....... .... (௨)

மதுவியல்சூதியல்விலைமின் னரியனீகூறியதான் மதுவின் வைப்புப், பொதுமகளிர்மனைகழகத் தினியொருவர்செலாரென்னப் பூரிப்புற்றாய், விதுரனேவேதநா யகனேயுன்னீதிநூல் விதியோர்ந்தியாரு, முதுவராய்ச்சழக்கறின்யார் வருவருன்னீதித் தலத்தின் முறையிடற்கே ... ....... ... ............... . (௩)

தஞ்சாவூர்வித்வான்-ம-ா-ா-ஸ்ரீ.

அண்ணாப்பிள்ளையவர்களியற்றியது.

பதியார்ந்தவதிகார முன்சிபுமனுநீதி பரிந்துதோன்றத் .......*
திதியார்ந்தநூலொன்றிங் கிலேயமன்னரரசாட்சி செய்புங்காலை*
மதியார்ந்தபுலவர்பிரான் மீனாட்சிசுந்தரமான் மகிழ்ச்சிகூர .. *
நிதியார்ந்தகுளத்தூர்வாழ் வேதநாயகமகிப னிகழ்த்தினானால் (௧)

கொளக்கருதில்லறத்தினிலக் கணங்கடனக்கணியாகக் கொண்டநீரான், அளக்கரியவடமொழியுந் தென்மொழியுமாய்ந்தவற்றினரியநீதி, துளக்கறமன்பதைகட்கு விளக்குறவந்நூலொன்று சொற்றான்பொன்போற், றளக்கமலப்பொலிகுளத்தூர் வேதநாயகநாமத் தமிழ்வல்லோனே..... . . . . ............................ (௨)

தஞ்சாவூர்-ம-ா-ா-ஸ்ரீ.

அருளானந்தம்பிள்ளை யவர்களியற்றியது.

கலைமுழுதுணர்ந்த வேதநாயகப்பேர்க் கவிவலனகமகிழ்ந் துரைத்த, நலமலிநீதிநூல்புவிமேவு நாவலரவையிடைப்பரவி, யிலகுறுமவருள் வியப்புறச்செயுமே லேதமின்மாதவர்முன்செய், புலவில்பல்கலைகளதற்கிணையென்றேயோதலாந் தகமையதன்றே

சீகாழி - ம - ா - ா - ஸ்ரீ.
நமச்சிவாயக்கவிராயர் மருமகன் இராமலிங்கதேசிக
ரவர்களியற்றியது.

மந்தரமால்வரையிலனந் தனைப்பிணித்துப்பாற்கடலை மதித்
தானத்தை,யந்தர நாடவர்க்களிக்கு மாலெனவேமறை நூலாழியை
க்கடைந்து, சுந்தரமாநீதி நூற் சொல்லமுதைப்புவியோர்கள்
சுவைக்கத்தந்தான், கந்தரமாங்குளத்தூர்வாழ் வேதநாயகமென்
னுங் கருணைமாலே ........................ (௧)

கார்பிரதியுபகாரந் தனைமதியா துவரகற்றிக் கடற்றெண்ணீ
ரைப், பாரமுதமெனவளிக்கும் பண்புபோன்மறையாழி பருகி
யையஞ்,சார்திரிபுமடநீக்கி நீதி நூலெனுஞ்சுதையைத் தரணிக்கீந்
தான், சீர்பெருகுங்குளத்தூர்வாழ் வெதநாயகசுகுண தீரன்றானே

---

சீகாழி- ம- ா- ா- ஸ்ரீ.
சபாபதிதேசிகரவர்களியற்றியது.

துளங்குகதிர்புறவிருளைப் போக்கிநிறையொளிபெருக்கித்
தோன்றபார்க்குங், களங்கமறக்கட்புலனுக் கறியும்வகைகாட்டுதல்
போற் கடல்சூழ்வைப்பி, னுளங்குடிகொளஞ்ஞான விருளகற்றி
ஞானவொளி யோங்கச்செய்யும், விளங்கியநன் னீதி நூற் கதிர்வே
தநாயகச்செவ் வேடந்தானே ........................ (௧)

அருந்தமிழாகரமுனிவ னருந்தவருக்கறநெறியை யருளி
யாங்கே,யிருந்தமலையதனைவிடுத் தெழுந்தருளியனைத்துலகு மி
ன்பமெய்தப், பெருந்திருவாழ்குளத்தூரில் வேதநாயகமெனப்
பேர் பெற்றுநன்றாத், தெரிந்துணரயாவர்க்கு மனுநீதி நூலதனை
ச் செப்பினனே ........................ (௩)

---

சீகாழி - ம- ா- ா- ஸ்ரீ,
நடராசபிள்ளையவர்களியற்றியது.
வெண்பா.

நாடுகுளத்தூர்வேத நாயகப்பேர்ச்சங்கமொளி .....*
மோடுபெறுநீதி நூன் முத்தமொன்று-நீடுதவிற் *
றம்முத்தம்பெற்றே மகத்தணிந்தேமற்றதுபோ .. *
லெம்முத்தமுண்டு புவியீர்........ (௧)

நிகழ்வேதநாயகமா னீதி நூலென்றுந் ........ *
திகழ்வான்வென்றுஞ் செறியல்-அகமும் .... . *
அறையுமிதுமறையா தம்மவது நாளு........ *
மறையுமிதொன்றே வேற்றுமை ........ (௨)

கொட்டையூர் - ம - ா - ா - ஸ்ரீ.
சிவக்கொழுந்துதேசிகர் குமாரர் சாமிநாததேசிக
ரவர்களியற்றியது.

நீதிநூல்செய்து நிகழ்வேதநாயகமா....... ........... *
லோதிமுடியாதபுக . ழுற்றதனான்-மேதினியி .... *
லொன்றும்பெறலருமியா தோதினனென்றுரைப்ப *
தென்றுஞ் சரியல்லவே..... .... ... ........ . ........(௧)

தேவேநின்வாக்கிருந்து செப்பியதாற்செந்தமிழோர்
நாவேபுகழ்வேத நாகயப்பேர்க்-கோவெநீ.... .... *
தேடினனன்கற்பனைகள் சேர்த்தனனிந்நீதிநூல்.... *
பாடினனென்பாய் கற்பனை . ..... .............. .. (௨)

---

கும்பகோணம் வித்வான் - ம - ா - ா - ஸ்ரீ.
சோமசுந்தரம்பிள்ளையவர்களியற்றியது.

பொன்னாடுமேவும் புலவிர்காளங்குளதோ........ ....*
விந்நாடுசெய்தவத்தா லிங்குதித்தோன்-மன்னி .. *
நகனீதிசால்வேத நாயகபூபாலன் ................ ..... *
புகனீதிநூலமுதம் போல் ... ............. ..... .......(௧)

நல்லகுளத்தூர்வேத நாயகமால்சொன்னீதி .........*
வல்லகலைத்தேன்போமெலம் மாமலரிற்-புல்ல.... ..*
வுறமேயென்றேசுழலு முண்மையால்வண்டு...... *
பெறுமேபிரமரமென்பேர்.... ... ................(௨)

மானுகரன்குளந்தை வாழ்வேதநாயகவேள் . ........ *
ஞானபரணனெனு நற்குரு-மேன்மையுறத்....... *
தானேமொழியுந் தமிழ்நீதிநூற்றேன்போற்..... .. *
றேனேநீயுண்டதுண்டோ செப்பு ................ (௩)

---

கூறைநாடு-ம- ா- ா- ஸ்ரீ.
திருமலிங்கமுதலியாரவர்களியற்றியது.

பொன்னிலத்துதவுங் காக்குளத்தூர்வாழ் புண்ணியன்சவரி முத்தேந்திரன், முன்னியற்றிடுநற் றவத்தினிலுதித்த முன்னவ ன்வேதநாயகவே, ளிந்நிலத்தினில்வாழ் மன்னுயிரனைத்து மின் புறுகதியடைந்துய்ய, மன்னியநெறிசேர் நீதிநூறமிழால் வனை ந்தனன்வளனுறமாதோ ....... ....... .... .... ........................ (௧)

---

சிதம்பரம் - ம - ா - ா - ஸ்ரீ.

வாமதேவமுருகதேசிக ரவர்களியற்றியது.

வேதத்திற்கூறு மநுவினையத்த வேதநாயகன்குளத்தூரி..*
னேதமின்மனைவிதனையுநாவிருத்தியெழில்பெறவந்துதென்சொ
ல்லா, லோதினனதனை யவன்படைத்திடும்பே ருலகமேயறிந்திட
வென்று, லாதருளொருவ னுனையான்முகம னுப்புகழ்வதுபுக
ழாமே........ ......... ......... ... ....... ...... ... ........... ......(க)

திருவாழூமூர வேதநாயகப்பேர்த் திருமாலே ..............*
பொருளீதலுன்றொழில்பாப் புகறலென்போ லியர்தொழிலா *
மொருநீதிநூலுரைத்தெற் குரியதொழில் கவர்ந்துகொண்டா *
யருநீதிக்கதிபதிநீ யநீதியிது செயலாமே...... ....... ...... .... (உ)

---

தேவிபட்டினம்- ம - ா - ா - ஸ்ரீ.

முத்துச்சாமிபிள்ளையவர்களியற்றியது.

வெண்பா.

ஒள்ளியசீர் நூலனைத்து மோதியுணர்ந்தோங்கு ..... *
தெள்ளியசீர்ஞான சிகாமணியாம்-வள்ளுவனொன் *
னூல்வேதநாயகன்செய் நற்குறட்கோர்சிருனாயா... *
மால்வேதநாயகனுன் மாண்பு.... ... ... ... .... ..(க)

பன்னடைமெய்ஞ்ஞானம் பரிவுபொறைமீகையொடு..*
நன்னடைசேர்சீர்வேத நாயகமா-லுன்னடையே..... *
மேதினியோர்பார்த்தொழுக வேவிளக்காம்பின்னுமோர்*
நீதிநூலேன்சொன்னாய் நீ .... ......... .......... ......(உ)

---

தருமதானபுரம்- ம-ா-ா-ஸ்ரீ.

கண்ணுவையரவர்களியற்றியது.

கலைமதியாவருபுலவர் கோவான்குளத்தூர்வாழ்கற்பதாரு*
விலைமதியாமணிவேத நாயகமானீதிநூன் மேன்மைநோக்கத்..*
தலைமதியாளர்களகத்தினிருள்கடிந்துஞானக்கண்டருதலால்வான்
மலைமதியாதவனழலோ னிம்மூவர்மிகையிந்த வைப்பிற்றானே()

பூதநாயகனாகி யெவ்வுயிர்களும் புரக்கும்......... ... .. ....*
நாதனாயகம் புறநிறைநா யகன்மலர்த்தாட்..... .. ........... ......*
போதனையறிவோர் புகழ்நீதி நூல்புரிந்த......... ..... ........ ....*
வேதநாயக வாழியநின்குல மிகவே.... .... ......... .... ... ....(உ)

போற்றுப்புகழ் பொலிகுளத்தூர் வேதநாயகசுகுண பூபா
நீநன், காற்றுபெருநீதிநூல் போற்பலசெய் திடுகவவற் றனைந்
தபாடல், நேற்றுவனாமுளைத்தபனை யேடெல்லாந் தீட்டுதற்கா

நிகழ்காலங்கள், சாற்றுகவிக்கினிமுளைக்கும் பனையேடெல் லா மொருங்கு தழைகமாதோ .... .... ........ .... .... .... .... ..... . . . (௫)

கோவாழ்க வெனுங்குளத்தூர் வேதநாயகசுகுணக் குன்றே நன்று, பூவாழ்கவென்றுதி நூலுணர்ந்து நீதிநூல்பொலியச்செய்த, நீவாழ்க நின்றமிழ்ச்செந் நாவாழ்கநின்னூலி னிரம்புமின் சொற், பாவாழ்க வாழ்கவென்று பன்னாளுமியானுசி பண்ணு வேனே ...... ......... ....... . ....... . . ... ... . . .... ..........(௪)

---

இராமநாதபுரம்வித்வான் ம-ா-ா-ஸ்ரீ.

கஸ்தூரி ஐயங்காரவர்களியற்றியது.

தளத்தூருந்தேன்பிலிற்றுந் தாமரைமாதிருவர்களுஞ் சார் வார்ஞான, முளத்தூடேபிறந்தெழுந்தா னந்தமுயர்வீடுய்க்கு முயிர்க்குச்செல்வ, வளத்தூடேமருவிநெடு வானவர்வந்திறை கொள்ள வயங்காநிற்குங், குளத்தூர்வாழ்ந்திலகியதோர் வேதநா யகனீதிக் குறைவினாலே. . ........ .... ... . ....... ... ...... . .(௧)

கனிவாய்வித்தைநிறைவாக்கிக் கமழுஞ்சுமனசம்பொருந்தி,
இனிதாநீதிநூனறுந்தே னீயுந்திறத்தா னிருங்குளத்தூர் ..... . . *
நனிமாதவத்தி னவதரித்த நயமாம்வேதநாயகமே... .... ....... *
பனிசேர்கற்பதாருவெனப் பகரத்திலையொன் றிலதாமே... (௨)

வெண்பா.

எண்ணெண்கலைநிறைவுற் றெங்குங்கதிர்பரப்பிப்.. .....*
புண்ணியப்பைங்கூழ்தழையப் போற்றுமே-விண்ணு..*
நகுநீதிசால்வேத நாயகவான்றந்த... ....... . . ..... .... ..*
தகுநீதிநூன்மதியந் தான். ..... ........ ........ ......... . . (௩)

சேடனிருநாவாயிற் சேர்ந்தான்பொதியவனா... .... ... . *
நீடுமுனியுங்குறுகி நின்றானே-தேடரிய... .... .... ....*
வாதிநூன்முற்றோர்ந் தவிர்வேதநாயகமா .... . ......... *
னீதிநூலைப்படிக்க நேர்ந்து........ ........... ....(௪)

குறுகிமலைவாயிருந்தான் கும்பன்விளரி.... ........... . .*
மறுகிமறைவாயிருந்தாள் வாணி-பொறிமிகுந்த..... . .*
நன்னீதிசால்வேத நாயகபூபாலமுகி... .... .... ............*
றன்னீதிநூலோர்ந்து தான்.............. .... ..... .....(௫)

சீதரநீதிநூல் செய்தவலவாகனக ... ............ .... .... *
பூதரமொய்ம்பர்செருநர் போரேறே-பேதமிலா.....: *
வண்டாமரைமடந்தை வாழ்வேதநாயகமார்க்.....,....... ....*
கண்டாசய மங்களம் .. ..... .. ....................... .... (௬)

---

## திருவீழிமிழலைஇராமாயணப்பிரசங்கம்

## ம-ள-ள-ஸ்ரீ.

## சாமிநர்தக்கவிராயரவர்களியற்றியது.

சீர்மலிந்திலங்குஞ்செழுமணித்தவளத், தரளத்திரளைச்சாரவாரிக், கல்லோலத்திரள் கரையினையகழுங், கருங்கடற்பைந்துகின் மருங்குறவுடீஇ, நெட்டுடற்றறுக்ட் கட்டழல்விடங்கா; றுளைப்பற்பஃறலைச் சுடாமணிக்கணபணக், கட்செவிச்செஞ்சூட்டுச்சியிற்கிடந்த, விந்திலவரைப்பின் மன்னியவுயிர்க, டொன்னூற்புலவர்தோமறவுணர்த்திய, பன்னூலனைத்தும் பழுதறவாய்ந்து, பொருந்தியநீதிபுரிந்துநடப்ப, விரிந்தனவாதவின் மெய்ப்பொருளனைத்துங், கற்றோரன்றிமற்றோரியாவரு, மெளிதினுணர்பாக் கெண்ணிநற்றமிழாற், சொன்னயப்பொருணயத் துணிபுமுற்றுணர்ந்து, பல்வகைப்பட்ட பனுவலதனாற், றிடமுளவுலகிற் கடவுளுண்டெனலுந், திடவுட்டவர்நற் றினந்தொறுமேத்துங், கடவுட்டன்மையுங் கவின்பெறவாழ்த்தி, மிடிக்குரற்கூர்ங்கோட் டிழிமதக்கரடப், புரசையானை யரசரதியல்புங், கடிகளவில்லாக் குடிகளதியல்புந், தானாசிரியத்தவமினிதியற்று, ஞானாசிரியர் நலந்தருபண்பு, மெய்யாசிரியர் வேடங்காட்டிப், பொய்யாசிரியர் பொய்த்திடுந்தன்மையு, மாய்தந்திடுநல் லறிவொடுபெற்ற, தாய்தந்தையரைத்தனையர்வணங்கலுஞ், சிலராகத் திருவயிற்றுதித்த, பாலரைவளர்த்தலும் பயிற்றலுங்கல்வி, மாதரையதனின் வாணுதற்கருங்கண், மாதரைக்கல்வி வளனுறப்பயிற்றலுங், கோதறுங்குணத்துச் சோதரரியல்புங், குருடனையினுந்தற் கொண்டுமணந்த, புருடன்பாரியர் புரியில்லியல்பு, மபசாரஞ்செய் தயலார்ப்புணர்ந்து, விபசாரஞ்செய் மெல்லியரியல்பு, நூலோர்ந்தகன்ற நுண்ணறிவுடைய, மேலோர்கிழோரை விரும்பித்தாங்கலு, மெய்த்தன்மைவிலக்கும் பொய்த்தன்மையியல்பு, மளவிலாப்பழிதருங் களவின்றன்மையுந், தலையாம்வினையெனுங் கொலையினதியல்பு, நொதுமல்விளைக்குமதுவின் றன்மையு, மாதுயர்க்கேதுவாஞ் சூதின்றன்மையும், பெரிதானபுன்மைசால் பரிதானவியல்பு, மறங்கூர்மனத்தாற் புறங்கூற்றுரைத்தலு, முரியோரனைவரும்பெரியோரைத்தூறலு, மிலாபம்பெறாதவுலோபத்தன்மையு, மேம்பற்கியலாச் சோம்பற்றன்மையு, மனத்திற்றோன்றுஞ் சினத்தின்றன்மையு, முறுவிடர்விளக்கும் பொறுமைத்தன்மையும், பல்வகைப்படுதற் கல்விச்செருக்கும், வினைப்பாலடங்காவனப்பாற்செருக்குந், தெருளாரகத்துப் பொருளாற்செருக்கலுந், தூயோருரைத்த சொற்றுணிபுணராத், தீயோர்தம்மைச் சேராதிருத்தலு, முற்றவரயலார் குற்றம்பொறுத்தலுங், கனியமனத்திற் கினியசொற்கூறலு, மறக்கொடுந்தீங்குபிறர்க்குச் செயாமையுங், கொடுந்துயர்விளைக்கு நெடுந்துயில்செய்தலும், பெருங்குழிதூர்த்தல்போற் பெருண்டிகொள்ளலு, மற்பக்குணத்தாற் றற்புகழ்தன்மையு, நிகழுமுலக நிலைபலவாதலி, விகழும்புகழு மெண்ணிடாநிலையுந், தராதலந்தன்னிற் சத்துருவாயினும், பரோபகாரம் பண்ணுவார்தன்மையு, மென்னிச்சையிதுவெனப் பொன்னிச்சையொழித்தலுங், கடமெனத்தோன்றுஞ்சடநிலையாமையு, மின்பம்பயவாத் துன்பப்பகுதியுந், திறஞ்செப்புகழ்சா லறஞ்செய்தன்மையு, மணிகையினிலகுங்கணிகையரியல்பு, மடர்பலவிலங்கு

க்கிடர்செய்யாமையு, நன்னெறிகாட்டும் பன்னெறித்தொகையுந், தொகுத்துப்புலப்படச் சொற்றனனென்ப, வாவியிற்செங்கமலமுறுக்கவிழ்ந்து, தேக்குடமுடைந்தெனச் செந்தேனுவட்டெழீஇ, வல்விரும்பென்னவளைகருங்கோட்டுக், கயவாய்ச்செங்கட் கடம்புனைசெருத்தற், கவையடிச்சயிரிபங் கன்றினையுள்ளப், பீரிடுதீம்பாற்பெருக்கொடுதழீஇத், திரைபொருநதியின் கரையிறச்சாடி, முடப்பலவின்றகுடக்கனியகழ்ந்து, கந்திப்பொங்கரையுந்தித்தள்ளிக், கன்னற்படப்பையைச்சின்னஞ்செய்து, கழனிவாய்மடையைக் கரைத்துப்பெருகிக், கிளர்கடலகடு கிழிதரப்போகிக், கார்க்கடலதனைப் பாற்கடலாக்கும், புறநாடனைத்தும் பொலியுறும்பாகத், தலைமைபெற்றிடுதெலிற் றலைப்பெயர்தரித்த, பொன்னிசூழ்கிடந்த சென்னிநன்னாட்டில், வேற்கட்பிறைநுதன் மென்மலர்வாணமுகச், சீதவிலோதச்செழுநகைத்தளவ, விலவிதழ்த்துவர்வாயிணைமுலைச்சிற்றிடை,யலத்தகச்சீறடியஞ்சொனல்லார், முகிற்புனல்சுவற்றிமுரணுறும்பரிதி, யொற்றைச்சக்கரப்பொற்றடமணித்தேர்,யாத்தகொய்யுளை யிகறெறுகலின, மரகதக்குரகதம் வானின்வாவ, வோட்டும்விடங்க நாட்டுமாடத்துக், கருங்குழற்கூட்டு முருங்ககிற்றூம, மாவலிதன்பான் மூவடியேற்றுச், சேவடியளந்த தூவடிவொப்ப, விண்மிசையெழீஇ வெண்டிரைசுருட்டுங், கண்ணகன்கங்கையைக் காளுந்தியாக்கி, மன்பதையளித்த கொன்பெறுநான்முகத், தேவனூருஞ் சிறைவிரியனத்தைக், கார்நிறவெங்குணக்கரண்டமாக்கி, யொள்ளொளிவிரிக்கும் வெள்ளியங்குன்றை, நீனிறமலையி னிலவச்செய்து, தண்ணிலாத்திரள்பொழிவெண்மதிகுடலிற், றுளக்கறுகளங்கந்தோன்றக்காட்டித், தழைசெவிப்பருஉக்கைத்தழனிரியாண,வருவரையருவிகருமணிகொழிக்கும்,பாங்மையன்னபமர மடுப்பக்கடாமுமிழ், கரடக்காத்திர நால்வாய்க், கந்தடுகிம்புரிக் கவளத்தவளத், தமரக்கரியினைத் திமிரக்கரியெனத், தோன்றச்செய்யுந் தூச்சிறையனத்தொ, டுள்ளான்குளத்தூர் வேளான்குளத்தூர்,புரிந்திடும்புண்ணியம் பூத்ததேய்ப்ப, நிலவியபுகழா னிறைகுணசேகர, னுவரிமுத்தணிபுயச் சவரிமுத்தப்பன், முற்பவத்தவத்தா லுற்பவமானோன், பல்காப்பியமெனும் பவ்வப்புனலி, னுடுமதிக்கோட்டருந்தமிழ்க்குஞ்சர, நெறியினில்லாச் சிறியராங்கரிகள், வாய்வீறடக்கும் வாளரிக்குருளை, பொய்க்குப்பெரும்பகை புகழுக்கணிகல, மெய்க்குக்களைகண்மே தகுதயாநிதி, நற்குணப்பொக்கிஷஞானப்பயோததி, கல்விக்களஞ்சியங் கலைஞானபீடம், பாடாந்திரப்பெரும் பவ்வப்பாரதி, மானபூடணம் மதுரிதபாடணம், தீனர்மனோகரந் திவ்யகுணாகரம், ஞானசாகரம் நற்குணசேகரம், வறிஞர்நிட்சேபம் மாணிக்கதீபம், அறிஞர்க்கிலாபம் அமலப்பிரதாபம், புவனமனோக்கியம்புருடசிலாக்கியம், தவறிலாவாக்கியந் தனிப்பெரும்பாக்கியம், சொல்லருமிரஞ்சிதஞ் சுகுணசஞ்சிதம், நல்லவர்க்கிங்கிதம் நாவிற்றங்கிதம், தருமவாலயந் தயைமகராலயம், பெருமையினிலயம் பெருநிதிவலயம், பெறலருநிதியம் பிறங்கிடுமெதியம், அறஞானோதயம்அவிர்பானோதயம், கனகவிக்கிரகங் கட்டநிக்கிரகம், தனசம்பூரணஞ் சத்துருநிவாரணம், நல்லவர்நேசம் நற்பிரகாசம், புல்லர்தம்விநாசம் புண்ணியவிலாசம், இல்லறவாசம் இதோபதேசம், புலவர்தம்மிடியாம் புனையிருளகல, நிதியொளிவி

ரிக்குஞ் சதோதயபானு, பொறியடக்குதலாற் புவனந்தாங்கலான், மா
ப்பொறையுடைமையான் மணியேந்துதலாற், பாப்பரசென்னபகருவ
ர்சில்லோர், கல்விகற்றனபோற் கசடறுகேள்வி, யறிந்திடநற்செவிய
மையாத்தன்மையிற், பூதலத்திருதபாதலத்துறுதவி னன்றிணையென்
னவறைகுவர்பல்லோர், தமிழ்க்கடலுண்டவிற் சங்கந்தழுவவி, லசலத்
திருத்தலிலருட்குணமுடைமையின், மகத்தியல்புரியுமகத்தியமுனியே,
யொப்பிவற்கென்னவுரைப்பர்கள்சிலரோ, யவன்கையிற்றொட்டனயாவு
மஃது, மிவன்கையிற்பட்டனவெல்லாம்பெருகுங், குறியவனவனிவன்
கூறினெடிய, னுயர்ந்தனதாழ்ப்பனுவனிவனுலகிற், றாழ்ந்தனவுயர்த்
துந்தகைமைபனுதலி, லிணையன்றென்னவிசைப்பவர்பலரோ, தேனுவு
மணியுந்திப்பியதருவு, நலந்தருபுயலொடுநவநிதியிவனே, டொன்றிர
ண்டொருமூன்றுயர்ந்திடுநான்கைந், தாறேழோடெட்டாமொன்பதொ
ருபத், தாமெனவுரைக்குமருட்கொடையாள, னவ்விழத்திநனுகுமி
டத்திற், பூவின்கிழத்திபொருந்தாளென்றே, முன்னேருரைத்தமொழி
தடுமாற, விருமையுமொருங்குநின்றிலகுஞ்சிலாக்கிய, னீதிநாயகநிபு
ணன் வேதநாயகவித்தகவேளே ........................................*

கோட்டின்பந்தனையனைக்குங் காக்குளத்தூர்ச் சவரிமுத்துக்குரிசி
ல்பெற்ற, வேட்டின்பமாமுரலுந் தார்வேதநாயகவே ளினிமைநூலைக்,
காட்டின்பந்தந்தவிர்க்கு நீதிநூலெனவொன்று கழறினனைப், பாட்டி
ன்பத்தினுமினிதோ வீட்டின்பம்வீட்டின்பப் பான்மையாமே ........(க)

பொன்னிலகுந்திணபுயத்தெம் வேதநாயகமகிபன் புகன்றநீதிக்*
கொன்னிலகுநூற்பொருளின் சுவைமுழுதுங்கலைமகளுட் கொண்டுநா
ணன், மின்னுடலம்விளர்த்திறையு மன்னமிறங்காதுவே தனையேமே
வித் தன்னிகரிறவளமலர் தனிலொளித்தாளெனிலினியான் சாற்ற
லென்னே ........................................ (உ)

கனந்தருகரத்தெம்வேதநாயகமால்கல்வியம்பெருங்கடலயின்று,
வனந்தருநீதி நூலெனுஞ்செய்யை மாண்பொருண்மாரியானிரப்பத்,
தினந்தினம்வழிந்து சேடமுண்டதனாற் செழுமணிப்பஃறலைச்செஞ்சு
ட்டனந்தனுஞ்சேட னயினனென்னி லவனியிலுரைக்குமாறெவனே*

சுகத்தியல்செல்வவேதநாயகவேள் சொல்லியநீதிநூலென்னு, மி
கத்தியல்பொருளினற்சுவையுணர்ந்துள் ளோங்கிமாமலையமூச்சுயிர்த்து
மகத்தியல்புரிந்து பொருநையாங்கண்ணீர் வழிதரவண்டமிழ்சொற்ற*
வகத்தியமுனியுங் குறுமுனியானா னயினுமறைகுவதெவனே........(ச)

தசரதனறுப தாயிரம்வருடந் தவம்புரிந் திராமனைப்பெற்றுத்....*
தண்டலையயோத்தி நகரினையாளத் தனிப்புக ழினிதுபெற்றுய்ந்தான்*
வசையில்சீர்வேதநாயகவேணீ மன்னிய வயிங்கிலீயத்தின் ..........*
வளனெலாமுணர்ந்து மணியணிச்சுடிகை வாளர வுச்சியிற்கிடந்த...*
வசலையில்வாழ்பல் லுயிர்கள்சன்மார்க்க வாற்றினையடைகுவான்கருதி
யருந்தமிழதனி னீதிநூலியற்றி யகிலங்கண் முழுவதுங்காக்கத் .....*
திசையெலாம்புகழுந் தண்குளத்தூர்வாழ் தீரனுஞ்சவரிமுத்தப்பன்..*
சித்திசேர்தவங்க ளெத்தனைகாலஞ் செய்தனனினைப்பெறத்தானே(ரு)

தேமணக்குந்தெரியலணி சவரிமுத்துமகிபாலன் செல்வனான.. *
பூமணக்குங்குளத்தூர்வாழ் வேததாயகக்குரிசில் புகன்றசெய்ய...... *
பாமணக்குநீதிநூ றனையுளாங்கக்கேட்கநிதம் பார்க்கயார்க்கு ....... *
நாமணக்குஞ்செவிமணக்குங் கண்மணக்குமெனிலினியா நவில்வதெ
ன்னே .............................................................. (சு)

தங்கியபுகழ்சால்வேதநாயகவேள் சாற்றருந்தமிழினானூலாத்த...*
மங்கவினீதி நூற்றனையினிய வளனுறுமங்கம தென்பர் ................... *
துங்கமார்தரும சாத்திரப்பொருளின் றெருட்பெனப் புகலுவர்வேதத்
தங்கமதென்னச் செப்புவர்கடலஞ் ஞுவனியிற் கற்றறிந்தவரோ ... (எ)

சென்னபட்டணம் அட்டாவதானம் -ம-ா-ா-ஸ்ரீ·

வீராசாமிசெட்டியாரவர்களியற்றியது.

பலகனிகளுடன்பார்றேன்விரவியவாமெனநீதிபகர்நூலொ
ன்று, கலசநிகழாதெவரு மனமகிழ்வான்முறைபுரியுங் கருணைவ
ள்ள, லுலகநிகளங்குறுகப் பெருகுபுகழ்க்குறையுளுணர் வுடை
யோர்க்கெல்லாந், திலகநிகராங்குளத்தூர் வேதநாயகக்குரிசில்
செய்தான்மன்னே ............................................ (க)

---

சென்னபட்டணம் வித்வான்-ம-ா-ா-ஸ்ரீ.

கா- சபாபதிமுதலியாரவர்களியற்றியது.

உலகமுய்ப்பப்பலநெறிக ளுணாத்தவேதமதுதானே........*
நிலவுமனிதவடிவாகி நீர்நாட்டுளதாங்குளத்தூரில் ........ ........*
இலகவேதநாயகமென் றிசைக்குஞ்சிறப்புப்பெயர்புனைந்து...*
குலவுநீதிநூலொன்று கூறிற்குணமாக்கொளுமுலகே...... .. (உ)

---

சென்னபட்டணம்-ம-ா-ா-ஸ்ரீ, அட்டாவதானம்

பு - அ - சபாபதிமுதலியாரவர்களியற்றியது.

வெண்பா.

நானூறேநாலடியென் றோர்வேதநாயகமால்......... *
தேனூறுஞ்சொல்விருத்தச் செய்யுளினாற் - றனீடு
நாற்பானடுத்த நானூற்றதெனநீதி ......... .. ......... *
நூற்பாலமைத்தா னுவன்று ... ........ ....... . .......... (க)

மகன்றந்தைக்காற்று முதவியிதுபோன்மென்...... *
றகன்ஞாலநன்குணர்ந்த தம்ம - மிகுநீதி ......... *
பாயபுகழ்மைந்தற் பயந்தகுளத்தூர்வேத..... ...... *
நாயகமாறேற்ற நலனால்...................................(உ)

---

## சென்னைச்சாற்றுக்கவிகள்.

### ம-ா-ா-ஸ்ரீ விசாகப்பெருமாளையரவர்களியற்றிய

### நிலமண்டிலவாசிரியப்பா.

முதனடுவீறிலா முனைவன்படைத்த, நதிபதியுடுத்தஞாலத்துறைவோர், பெறுதற்குரிய பெரும்பயனிவையென், றறைதருசுருதி மிருதியாதிய, வெண்மையன் றுணர்வ தெனமுனிவரரு, முண்மைவள்ளுவருமுள்ளியுள்ளிரங்கு, பறமுதன் முப்பாலாகவப்பொருளைத், திறனுறத்தமிழிற் றெள்ளிதின்வகுத்த, மாண்பமைநூலொடு சங்கமரீஇய, வேண்கொணவலர்களியாத்தபன்னூலு, நல்கினிதாய்ந்து நயந்தெரிந்தெவர்க்கு, மங்கையிற்கனிபோ லையந்திரிபொரீஇப், புலப்படச்சொற்சுவை பொருட்சுவைபொதுள, விலக்கணக்கவிஞரி யாவரும்வியந்து, முடிதுளக்குறுவான் கடிகமழ்தேறலுங், கன்னலுமமுதுங் கலந்துகுழைத்தாங், கின்னிசைதழீஇய பன்னருஞ்சிறப்பி, னணிகெழுசெய்யுளான் மணிவடமேய்ப்பச், சால்புடைநீதிநூ லொன்றியற்றின, னளந்தறிவொண்ணு வளக்குழூஉவுற்ற, தாடகவுலகெனு மதுபட்டாங்குகொ, ளுடுதுமென்றுவோடிநிமிர்ந்தென, வுயர்வறவுயர்ந்தபுயறவழ்குடுமிப், பொன்மாணெயிலும் பன்மாளிகையும், விளங்கிச்செறிந்த குளந்தைக்கிறைவன், பவந்தெறுகங்கா குலபரிபாலன், றவந்தருபொன்னனையெனுந்தண்ணதியோன், செந்தேன்பில்குபைந் தார்க்குவளையன், றிசையிருநான்கினுஞ் சென்றுகவிந்து, வசையறவோங்கிமலிபெரும்புகழோன், றன்னுயிராமெனத் தண்ணளிபுரிந்தே, மன்னுயிர்த்தொகுதி மல்கப்புரப்போ, னூழிபெயர்வுற் றகிலஞ்சிதைப்ப, வூழிபெயரினுமுறைபிறழாதோ,னகவைமூன் றுளமகவொன் றினுக்குப், பெருமலைப்பார்வைதிருமலைப்பாறருஞ், சேணுயர்சோலைத் தோணிபுரத்தி, லொட்டார்நட்டா ருலகிலயலெனப், பட்டாபொனுமந்தரம்பாராமே. நாடுர்ந்துலைபோ னடுநின் றுக்கும், பீடுபெறுநற் பிராட்டுவிவாக, ஞுதிநாயகனடிபணிந்தேத்தும், வேதநாயகனுமிகவல்லோனே.......................(க)

### ஆசிரியச்சந்தவிருத்தம்.

தாருலாவியமொய்ம்பனுடக தாருநேர்தருசெங்கையான்.........*
ரூழ்விலாவுருமாரன்விஞ்சுத யாளனண்புதழைந்துளா...............*
னேருலாவுபதாகையானுல கேழுநீடிசைதங்குவான்........................*
யாவுமாயிணையொன்றிலாதொளி ரேகதேவையிறைஞ்சுவா..........*
னீருலாவுதடாகமெங்கு நிலாவுகின்றகுளந்தைவாழ்.....................*
திருபனுயர்நதிமரபுதனில்வரு நிபுணன்வரகுணசிங்கமாஞ்..............*
சீருலாவியவேதநாயக சிலனீதிசிறந்ததோர்..................................*
தெளியுநூல்வினையுதவினன்மதி தெளிஞர்யாரும்வியக்கவே............(உ)

---

### விருத்தாசலம் கவிராஜர்.

### தியாகராயப்பிள்ளையவர்களியற்றியது.

சீதநீர்த்திரையெனுமங்கைகொடுசெங் கதிர்மணியுஞ்செய்யபொன்னுஞ், சித்திரநித்திலநிரையும் பத்தியினுற் குரம்பையினிற் செல்லவீசிச், சோதிதமிழ்வாரிசமே முதலியபல்லியன்மலர்க டேவியங்கு, தோய்ந்தாடுமாதர்நய னத்தைநயந்திவங்கயல்கள் துள்ளியாட, மாதவவரவிகள்சூழும் குளத்தூரிலேவாழு மனமாசில்லா,மனுநூலாந்திரியதனிலார்வமெனு நெய்ந்நிறைவால் வளர்ந்தேயோங்க, வேதநாயகமெனுமோர் விளக்குலகி லநீதியெனுந் திமிரம்போக்கி, விள்ளரியநீதியெனுஞ் சுடர்விரித்த திதன்பெருமை வியப்பாமன்றே.......................(க)

### சென்னபட்டணம் வித்வான் -ம-௱-௱-ஸ்ரீ.
### இராமலிங்கப்பிள்ளையவர்களியற்றியது.

வளங்கொள்குளத்தூரமர்ந்த வேதநாயகனருளால் வயங்க
முன்னாள், உளங்கொள்மனுவுரைத்தனனோர் நீதிநூலந் நூற்பின்
னூறுநூலாகத், துளங்கிடுமில்லூர்நறைபத் தோன்றலோர்நீதிநூல்
சொன்னானிந்நாள், விளங்குமிந்நூன்முன்னர்மற்றை நூலெலா
ங் கிழிபடத்தின்வெண்ணூலன்றே ... ... ... ... .... ...........(க)

---

### சென்னபட்டணம்-ம-௱-௱-ஸ்ரீ.
### சுப்பராயமுதலியாரவர்களியற்றியது.

நன்னீதிபறிஞர்களிதலைசிறப்பவந்நீர்மைநவிற்றந்நூல்கள்,
சொன்னீதியெவையுமிதி லெளிதுணர்வான்கோனாட்டுத் தொல்
வேளாளர், மன்னீதிவளந்தருசன் றகைக்கேற்பவிந்நூலை வந்தடு
த்தோர், பொன்னீதியெனுங்குளத்தூர் வேதநாயகப்புலவன் பு
கன்றான்மன்னோ ........ ... . ... ... ............................(க)

---

### திருநீர்மலை - ம - ௱ - ௱ - ஸ்ரீ.
### கோபாலகிருஷ்ணகவிராயரவர்களியற்றியது.

மலையசைக்கப்படினுநனி சீர்தூக்கித்தான்றேற்றும் வழக்
கின்சூழ்ச்சி, நிலையசைக்கப்படாதெனவே நின்றாழிப்பெரும்பு
னலி னெடுநாவாய்ப்புற், கலையசைக்கும்பிரானுகைத்த காழிதனி
னடுப்புரிவோன் கற்றோராருந், தலையசைக்கநீதிநூல் வேதநாய
கன்றமிழாற் சாற்றினால்................................(க)

---

### திருநீர்மலை - ம - ௱ - ௱ - ஸ்ரீ.
### ச-முருகேசமுதலியாரவர்களியற்றியது.

சீரோறுபுகழ்படைத்த மூதறிஞர்முன்னாளிற் செப்புநீதிப்,
பேரோறுநூல்பலவு மிருட்படலம்போயொளிப்பப் பிறங்கோ
ராழித், தேரோறுகதிரோன்முன் றண்மதியிற்பொலியச்சீர்க் கு
ளத்தூர்வாழ்தண், டாரோறுபுயவேத நாயகனோர்நீதிநூல் சாற்றி
னானால் ..... ................. .......... .... .. .. ... .... .... ......... . .. (க)

கட்டளைக்கலித்துறை,

மறையவர்சூழ்குளத் தூர்வேதநாயக மாலொழுக்கம்.. ................*
பொறைநிறையாளன் புகனீதிநூற்சொற் பொருட்பொலிவை .........*
அறைதருவீரா யிரந்தானுடையவ னந்தனெனும்.........................*
நிறைமதியாளற் கரிதெனில்யாவர் நிகழ்த்துவரோ ....................(உ)

வெண்பா.

நளிகடனல்லாண்டபுனை நானிலத்தோர்யாரும்..........*
எளிதினுணர்ந்துய்ய வெழிலார்-குளிர்பொழில்சூழ் ... *

கோதிலாச்சீர்க்குளத்தூர்க் கோன்வேதநாயகன்சொல். *
நீதிநூற்குண்டோ நிகர் ........................................ (ரு)

திருப்பாதிரிப்புலியூர்-ம-ா-ா-ஸ்ரீ.

சிவசிதம்பரமுதலியாரவர்களியற்றியது.

வெண்பா.

ஓதியுணர்ந்துலகோ ரொண்ணெறிக்கணேயொழுக *
நீதிநூலன்பா னிசைத்திருன்-றீதிகந்த............ *
நல்லோர்க்கினிய னவில்வேதநாயகமாம் ............ *
வல்லோன்குளத்தூர் வாழ்வான்..................... (க).

பாரோங்குவியன்மாக்க ளகத்திமிரம்பருகிநறும் பாதைகாட்டி, யேரோங்குபுலவரக முககமலமலர்த்தியுதித் தெழுந்ததம்மா, சீரோங்குகுளத்தூர்வாழ் வெதநாயகப்பெயர்கொள் சிறந்தசீர்த்தி, நாரோங்குகுணக்கடல்வாய் நீதிநூலெனும்பானு நன்குமாதோ ........................................ (உ)

தேவியலாசிரியனிய லரசியருய்தந்தையியநிகழமேலோர்க்*
காவியனவேதநா யகமாலோர்நீதிநூ லறைந்துமிக்க.......... *
பாவியருப்புண்ணியராம் படிசெய்ததாலவனைப் பாரிலீசன் *
ருவியலாக்குருநிருபன் ருய்தந்தையெனநாளுஞ்சாற்றலாமே()

மலையாளம்-ம-ா-ா-ஸ்ரீ.

இராமசாமிபண்டிதரவர்களியற்றியது.

பூமருவுமன்னுயிர்கள் பகையற்று நட்புற்றுப் பொலியும்வண்ணஞ், சேமநிதியனவேத நாயகமா னீதிநூல் செய்தான்பல்ல,பாமருவந்நூலுணர்ந்தன்றேமருகிமாமியெனும் பகைமைதீர்ந்து, நாமகளும்பூமகளு மவனிடஞ்சேர்ந் தொத்துறைதனயந்தாரம்மா........................................ (க)

மனைபுதல்வர்சோதரர்தாய் தந்தையுற்றோர் யாவருநல்வழியுறுது, வினைவழிசென் றனொனறைந் தனையவர்யா வருமெழுகவிதிவகுத்துப், புனைநீதி நூல்செய்தான் வேதநாயகபூடன்பூவிலன்றோர், அனையநூலுணரினஞ்சொற் கனமர்துநலமுறுவரினி யஞ்சேனெஞ்சே ........................................ (உ)

யாழ்ப்பாணம்-வித்வான்-ம-ா-ா-ஸ்ரீ.

விசுவநாதபிள்ளையவர்களியற்றியது.

இரும்புவனம்புகழ்குளந்தை வேதநாயகமகிப னிசைத்தநீதி, தரும்புனைபினூலதனைத் தண்ணமுதமென்னிலது தணிவிநீ

ணை, யரும்பும்விடத்தொடுமுதித்த தலைதன்றிக்கடைபட்ட காத லானற், கரும்பெனிலங்கசன்வில்லங் கத்திழுப்பானெனப்புகலா ர் கவிவல்லோரோ.......... ............ .... .... ................... ..... (௧)

அந்ததிபோல்வாரி கடைந்தமரர்நாவிற்கினிய வமுதிந்தான் மால்,முந்ததிகந்தரம்புகழுங் குளத்தூர்வாழ்சவரிமுத்து முதல்வ ன்பெற்ற,சந்ததியாகியவேத நாயகமால்பலவுயிர்க டாலினேடு, வந்ததிகரதநீதி நூற்றேனைச்செவிக்குமன்றவார்த்திட்டானே(௨)

---

. பெங்களூர்-வ-தேவராசபிள்ளையவர்களியற்றியது.

சினத்தைவெல் பொறைசேர் வேதநாயக சேயேநீதி ..............*
யனைத்தையு நவிற்றிநின்சீ ராய்ந்துன்னப் பேசவான்றோர் ... *
மனத்தையு மேவல்கொண்டாய் வாக்கையு மேவல்கொண்டாய்*
தனத்தையு ஸ்ரீவாயாருன் றன்பணிமேற் கொள்ளாரோ.... .......(௧)

வெண்பா.

நன்னயமார்சீர்வேத நாயகமால்போலநர .... ............ *
னென்னவுநவுற்றோ மெனினுநெஞ்சே- யன்னனினூல்
கற்றேங்கோனீதி கனாந்தேங்கொலோங்குபுகழ்..... ..... *
பெற்றேங்கொலுற்றேங்கொல் பேறு ......... .... ..... (௨)

தேவைப்புகழ்கவென்று செப்புவான்போனீதிப் . *
பாவைப்புகழ்ந்து பலபாடி - மாவைமகிழ் ....*
நன்னைப்பொருவேத நாயகவள்ளாலறிஞர் ......... . *
நின்னைப்புகழவைத்தாய் நீ ....... .......... ... . . (௩)

நீதிநூல்செய்தமனு நேர்வேதநாயகப்பேர்ச் ... . . *
சோதியினைநன்கு துதிக்கமலர்-வேதியனே...... *
பென்னுவிறில்ல தெனலாவிரவலா...... .... ... . . *
நின்னுவிசற்றெனக்கு நீ......... ............., . . ...(௪)

மேவுநாவாய்நிறைந் தின்பவளந்தந்தம்ப ணிலமீதூர்ந்தேயா..*
சேர்வுமதி தோற்றிமஞ்சுற் றலையெறிந்து நீர்பெருக வுறைதலா லே,தாவுதவிர்நீயியற்று நீதிநூல்கடலேயாஞ் சார்ந்துதோய்ந்து, காவுநிகர்வேதநா யகமகிபாபாவவினை கழுவுவோமே... .... (௫)

அளவாவண்பொருளளவாற் கடலுமலைபுஃபரந்த தாற்றின் பூவு, முளவாமெவ் வகைப்பொருளு முடைமையிற்பே ரண்ட முமா யோங்குநன்மை, பிளவாநின்னீதிநூ லெனில்வேத நாயக ப்பேர்ப் பெரியாப்மிக்க,வளவாநின் னுண்மதிக்கு ளித்தனையுமட ங்கியதெவ் வாறுகூறே.... ......... ......... .................. . . . (௬)

ஆதிநாயகனிணை யடிக்குநீடுமெய்ச் ........................ *
சோதிஞானம்படாத் தோலுருவுனை ........................ *
வேதநாயகமதன் விலகுறுநய ........................ *
நீதிநூலுரைத்தன னிலம்வியக்கவே........................ (௭)

பெங்களூர்-ம-ா-ா-ஸ்ரீ,

ஆ - ஐயாசாமிமுதலியாரவர்களியற்றியது.

கற்றோருமற்றோருங் கண்டுமனமகிழ்வு ........................ *
பெற்றிடவோர் நீதிநூல் பேசினன் - குற்றமிலாச்........ *
சீர்வேதமுற்றுணர்ந்த செல்வன்செழுங்குவளைத் ........ *
தார்வேதநாயகமாமுன்........................ (௧)

பெங்களூர்-உபாத்தியாயர்- ம-ா-ா-ஸ்ரீ.

சி - இராமலிங்கமுதலியாரவர்களியற்றிது.

மலரயன்வகுத்த வியன்புவியதனுள் வாழ்தருபுலவர்கள்வியக்க, இலகுறுநீதி நூறன்னச்சொற்று னிரப்பவர்க் காசையைநிதமும், பலர்புகழ்கொண்ட ஞானுறவளிப்போன் பன்னருமியல்முழுதுணர்ந்தோன், நலமலிகுளத்தூர் வாழ்பவன்வேத நாயகசுகுணசேகரனே........................ (௧)

பெங்களூர்உபாத்தியாயர்-ம-ா-ா-ஸ்ரீ,

செ-சேஷாத்திரியையங்காரவர்களியற்றியது:

மதிதவழுஞ்சோலை வளருங்குளத்தூர்ப் ........................ *
பதிவேதநாயகமென் பண்பின்-முதியசீர்........ *
நாமமுடையோனியற்று நன்னீதி நூற்கென்றுற் ..*
சாமியமெங்கே சாற்றத்தான்........................ (௧)

புதுவைவித்துவான்-ம-ா-ா-ஸ்ரீ.

சவராயலு நாயகரவர்களியற்றியது.

நன்னெறிகள் வயக்குதலாற் கற்பனைகள் விளக்குதலா னலங்கொள்ளாருக், கன்னெறிகள் வகுத்திடலா னின்னீதி நூல்பரனைப் பாகுநாளும், பன்னெறிசால் வேதநா யகமகிபா வனையபராபரனையீன்ற, மன்னெறிசா லொருதெய்வ மொப்பாறுய் நீயிதற்கு மாறென்றின்றே........................ (௧)

வேதமுழுதுணர்ந்ததற்கு நாயகமாய் நீபொலியும் விதமோர்ந்தன்றே, போதமுழுதுளதினக்கு வேதநாயகமெனும்பேர் புனைந்துநந்தை, யேதமுழுதறநீசெய் நீதிநூலுணர்ந்துபெயரிடாவாறென்னேர், கோதமுழுதொழியதுவும்வேதமேயெனத்தெரிந்த குறிப்பானன்றே ........................(௨)

நேடுபொருள்சிதறவிடல் புதைத்தலோரீஇ வெளிப்படை யினிகழச்செய்து,பாடுபொருட்பெரும்புலவ ராதியர்க்குதல்குத ல்போற் பற்பனீதித்,தேடுபொருள்சிதறவிட்டார் சிலர்புதைத்தா ர்சிலரனைய செய்கைநீத்தக்,கூடுபொருள்வெளிப்படைசெய் தரு ள்வேதநாயகமால் குவ்விற்றேவே. ................................ (௩)

பாரகாவியம்புரிவார் பன்னூற்குமுறையிடுவார் பாரில்யார் க்குந், தாரகாவியமலிசீர் வேதநாயகமகிபா தழைசெல்வக்கு, பேரகாவியத்தொடையாய் நின்சீடரெனினீசெய் பெற்றியோர் நூற்,'கேரகாவியந்தனன்யா னெனமொழியினுண்டாகு மிலச் சைதானே................................................(௪)

யான்முந்தியேகுவன்மற் றியான்முந்தியேகுவனென் றெ ழுந்தெல்லாம்வாய்ப், பான்முந்திவரவடித்துக் கொளுநினக்குந் தமிழ்வளர்த்த பாண்டியாசெந் ,தேன்முந்தியளியுணுந்தார் வே தநாயகமகிபா தெளியோர்நீதி, நூன்முந்தியுரைத்தலரி தாமே யெப்பாடுபட்டு நவன்றுளாயே ................................ (௫)

புதுவை கவரன்மெண்டு இஸ்கூல் உபாத்தியாயர்-ம-ா-ா-ஸ்ரீ.
கோவிந்தபிள்ளையவர்களியற்றியது.

மலர்தலைபுலகில் வேதநாயகவேள் வகுத்தநன்னீதிநூனோக் கி,னலர்தலையீறி லனுதியிவ்வுலகி னுதிநூன் முறைதிறம்பினதெ ன்,றிலகுதன்னருட்கு வேதநாயகமென் றினியநற் பெயர்கொ டுத்திம்பர், நலமுறவிடுத்தந் நூலினைப்புதுக்க நன்குணைப்பித்த து போலும் ........................................................ (௧)

புதுவை சென்மவிராக்கினி மாதாகோவில் அச்சுக்கூடத்து எடிட்டர்
ம-ா-ா-ஸ்ரீ.
ஆரோக்கியசாமி பிள்ளையவர்களியற்றியது.

மாதரையிற்கலைஞான மில்லாருமெல்லாரு மனக்கணுற்ற*
வேதமெனுமிருட்படல மிற்றொழியமெய்யெனிருந் தகழியூடே
யோதரியவறத்தைலம் பெய்துந்தஞானமெனு முயர்கோலிட்டு
வேதநாயகக்குரவ னேற்றினனீதிநூல் விளக்கமாதோ ....(௧)

புதுவை-ம-ா-எ-ஸ்ரீ. சாமி,
பொன்னுசாமிமுதலியாரவர்களியற்றியது

சீலமருண்மானநலஞ் சேர்வேதநாயகமால்........*
ஞாலமிசையுரைத்த நன்னீதி - நூலதுதா..........*
னந்தணர்க்குவேத மறிஞர்க்கமுதுபவ ..............*
வெந்தணற்கு நீர்பகைக்குவேல்...........................(௧)

புதுவை இஸ்கூல் உபாத்தியார் - ம-ா-ா-ஸ்ரீ.
மலைப்பப்பிள்ளையவர்களியற்றியது.

எல்லாரும்வானவரு மிம்பர்வளர்மானவரு மினியகல்வி .*
வல்லாருமல்லாரும் வந்திக்கச்சிந்திக்க வாழ்த்தியேத்தச்.......... *
சொல்லாருந்தனைப்பயந்தகுரவர்தவமின்னதெனத்துலக்கிக்காட்டு...*
நல்லாருணலவேத நாயகமானீதி நூ னவின்றான்மாதோ..... (௧)

செயற்கரியசெய்பவனைப் பெரியனென்றுமல்லானைச் சிறியனென்று, மயக்கறியார்சொலுமுறைக்குச் சான்றாகமேன்மைசான் மனுநூல்செய்த, பயக்குரியநினக்கதிலு மற்றையர்வாய்ப் புகழ்க்காற்றுப் பரிவாந்தொல்லோ, கயப்பரிமாமுழங்குமுன்றில்வேதநாயகசுகுணக் கவிவல்லோனே .............................. (௨)

நீதமேயுருவாய்வந்த வேதநாயகனிகழ்த்து ................ *
மோதருநீதி நூலை யுள்ளமேசிந்திப்பாயேற் ............... *
போதமுமுடையாய்தேவ போகமுமுடையாயாதி..... .....*
வேதமுமுடையாயந்நூல் விரைந்துகல்விரைந்துகல்லே(௩)

---

புதுக்கோட்டை - ம-ா-ா-ஸ்ரீ, சாமி அய்யரவர்களியற்றியது.

இலைமறைகாய்போற்சுருதி யாதியநூலெங்கணுங் கரந்தநீதிகளை, விலைமறைதனது மதியெனும்வளியால் வெள்ளிடைமலையெனத் திரட்டித், தலைமறையிதென வியற்றினனொருநூ றண்ணளிவேததாயகமான். முலைமறையிளம்பெணின்பிற்நூலன்னான் முற்றுமோர்ந்தடைதருமின்பே ................................................................(௧)

காத்தல்கடவுட்கியற்கை கதிரவனுக்கொளியியற்கை கடிமலர்க்குப், பூத்தன்மணத்தலுமியற்கை நியாயாதிபதிக்கிழமை பூண்டமேலோன், ஏத்தரியவேதநா யகவெட்குநீதியெலா மெடுத்துப்பாவிற், கோத்தருள்வியற்கையெம்ம னோர்க்கியற்கை யவன்புகழைக்கூறன்மாதோ()

நிந்தாஸ்துதி.

மழைநிகர்கொடையான்வேத நாயகமால்செய்நீதி ............. *
தழைபுநன்னூலைப்பார்த்துத் தப்புதப்பென்பார்சில்லோர் ... *
பிழைபிழை யென்பார்சில்லோர் பெருமையின் றென்பார்சில்லோர், கழைமதனனையான்வாக்கைக் கவிஞர்சிசியென்பாரால்(௩)

---

நீதிநூலென்னும் புத்தகத்தை அச்சடிக்கிய
. எழும்பூர் ம - ா - ா-ஸ்ரீ.
தாண்டவராயமுதலியாரவர்கள் ஸ்துதிசெய்தது.

தேன்மருவும் பாமொழியுந் தியாகராஜப்புலவன்...............*
றான்பயிற்று நற்கலையின் றன்மையினல் - யானுமுயர்.....*
நன்குளத்தூர்வாழ்வேத நாயகமால்செய்தருளும்.............*
இன்பநூனீதி மகிழ்ந்தேன் ...................................(௨)

---

சாற்றுக்கவிகள் முற்றுப்பெற்றன.

# நீதிநூல்.

## அதிகாரஅட்டவணை.


| பக்கம். | ஆவது. | அதிகாரங்களின்பெயர். | விருத்தத்தொகை. |
|---|---|---|---|
| ௧ | — | அவையடக்கம் ........ ............ | ௬ |
| ௨ | ௧ | தெய்வமுண்டெனல்... ...... ....... | ௰ |
| ௩ | ௨ | தெய்வத்தன்மையும் வாழ்த்தும் .... | ௨௰ |
| ௬ | ௩ | அரசரியல்பு ........ ....... ........ .. | ௰ |
| ௮ | ௪ | குடிகளியல்பு .... ..................... | ௭ |
| ௯ | ௫ | ஞானசாரியன்பெருமை ... . ... .... | ௰௧ |
| ௰௧ | ௬ | பொய்க்குருவின் றன்மை ......... | ௯ |
| ௰௨ | ௭ | பிதா மாதாவைவணங்கல் ... ........ | ௰ |
| ௰௪ | ௮ | பாலனைவளர்த்தலும்படிப்பித்தலும் | ௰ |
| ௰௬ | ௯ | மாதனைப்படிப்பித்தல் ......... .. .... | ௰ |
| ௰௭ | ௰ | சகோதரரியல்பு .... .... ... ...... ..... | ௫ |
| ௰௮ | ௰௧ | புருடபாரியரியல்பு ........... ....... | ௩௮ |
| ௨௪ | ௰௨ | விபசாரம் ... ... ... .... ........ ... | ௰௫ |
| ௨௬ | ௰௩ | உயர்ந்தோர் தாழ்ந்தோரைத்தாங்கல். | ௰ |
| ௨௮ | ௰௪ | தாழ்ந்தோருயர்ந்தோர்க்கடங்கல்... | ௧ |
| ௨௮ | ௰௫ | பொய் ........ ................. .... .... | ௰௧ |
| ௩௰ | ௰௬ | களவு .............. ................. ........ | ௮ |
| ௩௨ | ௰௭ | கொலை.............. ..... .......... | ௰ |
| ௩௩ | ௰௮ | மது ............... .................... .. | ௰ |
| ௩௫ | ௰௯ | சூது ............ ........ ..... ........ | ௭ |
| ௩௬ | ௨௰ | பரிதானம் ..... ........ .... ............ | ௰௧ |
| ௩௮ | ௨௧ | புறங்கூறல்.................... . ... ... | ௭ |
| ௩௯ | ௨௨ | பெரியோரைத்தூறல்......... ......... | ௫ |
| ௪௰ | ௨௩ | உலோபம் .... ................ ......... | ௰௨ |
| ௪௨ | ௨௪ | சோம்பல் .... .......... ... ... ........ | ௬ |
| ௪௩ | ௨௫ | சினம் ........ ........................ ... | ௮ |
| ௪௪ | ௨௬ | பொறுமை ..... .... ................. ...... | ௮ |
| ௪௬ | ௨௭ | வித்தியாகர்வம் .......................... | ௩ |
| ௪௭ | ௨௮ | அழகாற்செருக்கல்........ .... .... .. | ௫ |
| ௪௮ | ௨௯ | செல்வச்செருக்கு ..... . ..... .. .... | ௭ |
| ௪௯ | ௩௰ | தீயரைச்சேராமை.... .... ........ .... | ௫ |

# நீதி நூல்.

## அதிகார அட்டவணை.


| பக்கம். | ஆவது. | அதிகாரங்களின் பெயர். | விருத்தத் தொகை. |
|---|---|---|---|
| ௫௰ | ௩௧ | பிழைபொறுத்தல் .... .... ... ... .... | ௭ |
| ௫௧ | ௩௨ | இனியசொற்கூறல் .... ... .... .... .. | ௫ |
| ௫௨ | ௩௩ | பிறர்க்குத்தீங்குசெய்யாமை ....... | ௫ |
| ௫௩ | ௩௪ | நெடுந்துயில் .... .................. .... | ௩ |
| ௫௪ | ௩௫ | பேருண்டி........................ ..... | ௧ |
| ௫௪ | ௩௬ | தற்புகழல் .... ... .... .... ......... | ௨ |
| ௫௫ | ௩௭ | புகழுமிகழு மறியாமை . ........ ... | ௩ |
| ௫௬ | ௩௮ | பரோபகாரம் .. .... .... ........ .... | ௰௫ |
| ௫௮ | ௩௯ | பொருளாசையொழித்தல். ......... | ௰௩ |
| ௬௰ | ௪௰ | சரீர நிலையாமை .......... .... ... | ௰௬ |
| ௬௩ | ௪௧ | துன்பம் ........................ ....... | ௬ |
| ௬௪ | ௪௨ | அறஞ்செய்தல். ....... ... ............. | ௰௬ |
| ௬௭ | ௪௩ | கணிகையரியல்பு .. .... ........... | ௪௰ |
| ௭௪ | ௪௪ | விலங்கினத்துக் கிடர்செய்யாமை.. | ௫ |
| ௭௫ | ௪௫ | பன்னெறி ..... ............... .. | ௰௪ |


ஆக அதிகாரம்-௪௫-இல் கூடிய திருவிருத்தம் - ௪௱௪௰

இஃது

புத்தகம்.

கடவுள் துணை.

# நீதி நூல்.

## காப்பு.

ஆதிநூ லொன்று மரும்பயன் யாருந்தெளிவா *
னீதிநூ லொன்று நிகழ்த்தவே - மாதிரமோ *
டித்தரையனைத்தையு மியற்றியினிதிற்றிதிசெய் *
கத்தன் மலரொத்தகழல் காப்பு (க)

மாதிரந்தனில் வாழ்பவர் யாவருந் *
தீதிகந்தறச் செய்கை முயலுவா *
னீதிநூலை நிகழ்த்த நிகரிலா *
வாதிதேவ னடியிணை யேத்துவாம் (உ)

## அவையடக்கம்.

வெயிலினைச் சோதிசெய்வான் விளக்கிடல் போலுங்காகங் *
குயிலினுக் கிசையுணர்த்துங் கொள்கையே போலுநட்ட *
மயிலினுக் குணர்த்துங்கான வாரண மெனவும்யாவும் *
பயிலுல கிற்குநீதி பகர்யான் றுணிவுற்றேனால் (க)

பானுவின் கதிரையுண்ட பளிங்கொளி செய்தல்போலும் *
வானுலாங் கொண்டல்பெய்யு மழையினைத் தழையிற்றூங்கித் *
தானும்பெய் தருவைப்போலுந் தமிழொரு மூன்றுமாராய்ந் *
தானுவார் கவிசொல்வோர்முன் னறிவிலேன் பாடலுற்றேன் (உ)

மூடவரோ யாடவந்தர் முன்னின்று பார்த்துவக்கத் *
திடமொடு மூகர்பாடச் செவிடர்கேட் டதிசயிக்கக் *
கடலுல கினிற்கண்டென்னக் கனவினுங் கலையைத்தேரா *
மடமையே னுலகநீதி வகுத்திடத் துணிந்தேன்மன்னோ (ங)

பயன்கொள்வோ ரதனைநல்கும் பசுவுரு விலதென்றோரார் *
வியன்சினை வளைவுநோக்கார் விளைந்ததீங் கனிபறிப்போர் *
கயங்கொள்சே றகற்றித்தெண்ணீர் கைக்கொள்வா ரொன்னநூலி *
னயன்கொள்வ தன்றிப்பாவி னவ்வையைநோக் கார்மேலோரே. (ச)

வேலைவா யுண்டநீரை மேகஞ்சிந்தினுமே சிந்தும் *
காவிடைக் கொண்டநீரைக் கழனியக் காற்குநல்கும் *
பாலர்கற் றவையாசான்பாற் பகர்வர்யா னூலுணர்ந்த *
சீலர்பாற் கற்றதன்னோர் செவியுற நவின்றேனம்மா (ரு)

கோவிலைப் பழிக்கின்றேனொன் குணனையும் பழித்ததொப்பாங் *
காவினைப் பழிக்கினுண்டார் கடிமலர்ப் பழித்ததொப்பாம் *
வாவியைப் பழிக்கிற்கொண்ட வண்புனற் பழித்ததாமென் *
பாவினைப் பழிக்கினீதிப் பயனையும் பழித்ததாமே (சா)

உ

கடவுள் துணை.

# நீ தி நூ ல்.

## முதல் - அதிகாரம்.

### தெய்வமுண்டெனல்.

மண்டப மாதிகண்டோர் மயனுள னென்னல்போலுங் ..........*
குண்டலமுதல்கண்டோர்பொற் கொல்லனுண்டென்னல்போலு
மொண்டுகில்கண்டோர்நெய்தோனொருவனுண்டென்னல்போலு
மண்டமற் றகண்டஞ்செய்தோ னுளனென வறிவாய்நெஞ்சே (௧)

தீட்டுவோ னின்றியாமோ சித்திரந் திகழ்பொற்பாவை ........*
யாட்டுவோ னின்றித்தானே யாடுமோ திவவியாழின்.............*
மீட்டுவோ னின்றிக்கீதம் விளையுமோ சராசரங்க..............*
ணாட்டுவோனொருவனின்றி நன்கமைந்தொழுகுங்கொல்லோ (௨)

மாமுத லசைதலாற்கா லுளதென மதிப்பாரெங்கும்.......*
பரவிய புகையாற்செந்தீ யுளதெனப் பகர்வார்சுற்றும்..........*
விரவிய மணத்தாற்பாங்கர் வீயுள தென்றுதேர்வார் ............*
பரனுளனெனுமுண்மைக்குப் பாலொலாஞ்சான் றுமன்றே (௩)

நாதனில் லாதவீடு நாடுமே நடவாதென்னில்........................*
வேதநா யகனிலானேல் விதுகதிர் மீனுதித்தல்.....................*
சீதநீர் பெயறருக்கள் சீவராசிகள் கதித்தல்.... ......................*
பூதபௌ திகமெல்லாம் புரையற வொழுகற்பாற்றோ ......(௪)

பூசம்யா வுக்குமேனுய்ப் பொருந்திய விசும்பைக்காற்றை ....*
வேதநூ லதனைமண்ணோர் மெய்யுறை யுயிரைநெஞ்சை ........*
யேதமிலறத்தைக்கண்ணாற் பார்த்திலோ மெனினுமுண்டென்..*
றோதல்போற் றெய்வந்தானொன் றுளதென றேற்றமம்மா...(௫)

வாசமூக் கறியுமன்றி வாய்செவி விழிமெய்தேரா ..............*
பேசவா யறியுமன்றிப் பின்னையோர் புலன்றேராது...............*
நேசமார் தொண்டர்ஞான நேத்திரங் கொண்டுகாணு ..........*
மீசனை முகத்தின்கண்ணா லிகத்தில்யார் காணவல்லார்.........(௬)

வானின்றி மழையுமில்லை வயலின்றி விளைவுமில்லை ............... *
யானின்றிக் கன்றுமில்லை யரியின்றி யொளியுமில்லை .... ...... *
கோனின்றிக் காவலில்லை குமரர்தா யின்றியில்லை ........ .... ..... *
மேனின்ற கடவுளின்றி மேதினி யில்லைமாதோ ............... (௭)

கதிரவற் கொளியின்றென்னக் கண்ணிலார் கழறல்போலும் *
வதிரர்பே ராழியோசை மாறிய தென்னல்போலு ... ........ .. *
மெதிருறு பொருளைக்காணு திடருறு பித்தர்போலு....... ... *
மதியிலார் தேவின்றென்ன மருளொடு மியம்புவாரே .........(௮)

அத்தன்றாய் முன்னோர்தம்மை யறிகிலா னிலனென்பானே... .*
சத்தமின் சுவைகந்தத்தைத் தரிசியா னிலவென்பானே....... *
நித்தனைக் கண்ணிற்காணு நீர்மையா லிலனென்றோதும்... . .... *
பித்தரிற் பித்தர்பாரிற் பேசிட வுளரோவம்மா................ (௯)

தேவனே யிலனேனென்மோக்கந் தீநர கில்லைவேதம்................. *
பாவபுண் ணியங்களில்லைப் பரனிலை யென்போனில்லின் ......*
மேவலர் தீயிட்டன்னோன் விபவமெல் லாஞ்சிதைத்துச் .........*
சீவனை வதைசெய்தாலென் செய்குவன் சிதடன்றானே ........(௰)

முதல்-அதிகாரம்-தெய்வமுண்டெனல்.

முற்றுப்பெற்றது.

௨-ம்-அதிகாரம்.

## தெய்வத்தன்மையும்வாழ்த்தும்.

ஆதியீ றில்லான்றன்னை யமைத்தகா ரணமொன்றில்லான்....... *
கோதிலான் கணத்துளண்டங் கோடிசெய் தழிக்கவல்லா .... . *
னோதிடு மொப்பொன்றில்லா னுருவிலா னிருவிண்டங்குஞ்.... *
சோதிதன் னிழலாக்கொண்ட சோதியைத் துதியாய்நெஞ்சே(௧)

ஆணலன் பெண்ணுமல்ல னஃறிணை யலன்பாரல்லன். . ..... ..*
சேணலன் புனல்காலல்லன் றீயல னைம்புலத்தாற் ...... ..... .... ...*
காணரும் வடிவனித்தன் கத்தனம் மத்தன்சுத்தன்...... ..... ...*
மாணுற முறநக்கொண்டன்ன மாட்சியான் கடவுணெஞ்சே (௨)

தணையெலா முளன்றுரும்பு தன்னினு முளனண்டாண்ட........*
திணையெலா முளன்மெய்யாவி நெஞ்சனு முளனியம்பு .... .... *
முணையெலா முளன்றன்மேவி யுறைபொருள்கெடக்கெடாதான்
புணாதபு தன்னைத்தானே பொருவ்வேர் றொருவனன்றே . . (௩)

உடுக்கணம் யாவும்வெவ்வே றுதயனு மொவ்வொன்றிற்கு .... *
நடுக்கட்பூ வலயஞ்சோம னபமொடும் வரம்பில்கோடி..... .....*
யடுக்கடுக் காச்செய்செல்லா மந்தரத் தமைந்துநிற்க ... .... *
விடுக்கவொன் றின்றிக்காக்கு மெம்பிரான் பெரியனன்றே (௪)

பண்ணிய புவனமெல்லாம் படர்கையிற் பரிக்குமேக......... ..*
னண்ணிய தரஞ்சற்றேபி னழீஇயொன்றோ டொன்றுமோதித்
திண்ணிய வகிலகோடி சிதைந்துகு மெனவறிந்தும் .... ...... *
புண்ணிய மனுவாற்றேவைப் போற்றிடா வாறென்னெஞ்சே (௫)

இதயந்தன் வேகத்தோடு மெண்ணிலவ் விபத்தகாலங்........ .... *
கதமொடு மீச்சென்றாலுங் கடவுண்மெய் நடுவையன்றி...... *
யிதரவங்கத்தைக்காணு தெனின்முடி யெவன்பொன்னெக்கும் *
பதமெவ ணகண்டாகாரப் பராபரற் குணைபீர்பாரீர் ... .... (௬)

விலகரு மருளின்மிக்கூர் விமலனை வாழ்த்தவேண்டி........ .... *
னலகில்கற் பங்களேநம் மாயுளாய் மும்மைத்தாய..... ... ...... ..*
வுலகமோ ருடம்பாயந்த வுடம்பெலாம் வாயாய்நித்தம் ..... .... *
பலகவி மாலைசூட்டிப் பரவினுமுடியுங் கொல்லோ ............(௭)

உருவில் சூனியமாபாது முணர்விலா திருந்தநம்மைத்..... ..... *
திருவுட லோடுஞானச் சிவனுகப் படைத்துச்..... ......... . . ... *
சருவநன் மையுமேதந்து தன்னையுந் தந்தநாதன்... .... ......... *
மருமல ரடிக்குநம்மை வழங்குதல் பெரிதோநெஞ்சே..... ..(௮)

பூமிநம் மில்லாமற்றைப் பூதங்கள் பணிசெய்வோராஞ் ......... *
சோமன்மீன் கதிர்விளக்காஞ் சூழ்மரம் பயிராகாரச் . . ... ... *
சேமவைப் பாநமக்கித் திரவிய மியாவுநல்குஞ்........ .......... *
சாமியை யுவமித்தேத்தச் சாமியம் யாதுநெஞ்சே.............. (௯)

தோன்றக விடமதென்னுந் துன்பசா கரத்திலத்தன்..... ......... *
றேன்றரு மலர்த்தாட்டெப்பஞ் சேர்கிலா தகன்றுநிற்போர்...*
வான்றனைப் பிரிந்தபுள்ளும் வாழுநீர் நீத்தமீனுங் ........ *
கான்றனை யகல்விலங்குங் காவறீர் நகருமொப்பார்.......(௰)

பாரெலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணையுண்டேற் ..... *
சாருமோர் துயருமுண்டோ தாயினு மினியவையன் .......... *
சீரரு ளின்றேலெண்ணி றேர்கரி பரிபதாதிப் ..... .. . . ..... .... *
பேரணி யுடையேமேனும் பிழைக்குமா றெவன்கொனெஞ்சே

இருநிதி பெற்றதின மொண்ணிடா திகழ்ந்ததொப்ப ... ...... *
வருவமா யுருவமாய்நம் மாருயிர்க் குயிராயண்டம் ... ..... .... *
பெருநில மெங்குமின்பப் பெருக்கெடுத் தோங்கிநிற்கும் .... .. *
கருணையந் கட்லாடாது கழித்தனை வாழ்நாணெஞ்சே ...... (௧௨)

முன்னவன் றனையுளத்து முன்னமுன் னத்தெவிட்டாக் . . ... *
கன்னலோ வமுதோபாகோ கற்கண்டோ வெனத்தித்திக்கு .... *
மின்னன்மே வாதவன்று னெங்கணு நிறைந்திருந்து ........ ...*
மன்னனை நீத்தசெய்பா லையனை நீத்தாய்நெஞ்சே ...... (௧௩)

ஆயுணாள் சிலவெங்காம மனந்தர்நோய் சோம்புகொண்ட ..... ..*
காயமே வளர்க்கவெண்ணில் கருமங்கள் செயலிவ்வாறே ....... *
தேயுநாள் கழியநிற்குஞ் சேடநா ளற்பமாகுந் .... ................*
தூயநா தனைத்தொழாமற் றொலைக்கின்று பதையுநெஞ்சே (௧௪)

பொங்கலை யாழிதாண்டிப் பொருப்புகள் கடந்தோயாம .... .. *
லங்குமிங் குந்திரிந்தே யழிந்துபோ முடலைக்காட்பா .... ....... *
யெங்கணு முள்ளோன்றுணன் னிருக்கையி னிருந்துபோற்றிப் *
பங்கமில் சுகம்பெற்றுய்யப் பாரமென் பகராய்நெஞ்சே. (௧௫)

மாசறு கடவுள்பாத மலரிணைத்தினமும் போற்றிப் . . .... ... .. *
பாசமில் சுகம்பெறுமற் பவஞ்சத்து டுழலல்வைம்பொ ...... . . *
ஞசனந் தன்னிலேறி யரசுசெய் தகைமைநீத்துக் ...... .... ..... .... *
காசனக் கழுவிலேறுங் கயமையே கடுக்குமாதோ ..... . . .. (௧௬)

போதநா யகனைபுன்னுப் புந்தியே வெந்தியொப்பாந் ...... .... . *
தாதல ரடிவணங்காத் தலைகுலை சிலையாஞ்சீர்சான் .... ..... ....... *
மாதலத் தவனைவாழ்த்தா வாயது தூயதன்று .... ..... ..... ... . ...... *
காதலன் பொடுநீர்தூவாக் கண்களே புண்களாமால் ..... .... (௧௭)

கதிரவன் கிரணக்கையாற் கடவுளைத் தொழுவான்புட்கள் ..... .. *
சுதிபொடு மாடிப்பாடித் துதிசெயுந் தருக்களெல்லாம் ... ..... *
பொதியலர் தூவிப்போற்றும் பூதந்தந் தொழில்செய்தேத்து *
மதிர்கட லொலியால்வாழ்த்து மகமேநீ வாழ்த்தாதென்னே (௧௮)

அறிவிலா ரரசனொன்றற் கமைச்சரோ சான்றுமன்னோர் ..........*
செறிபெருந் தானையான்மெய்த் திறலிலா னெனவறிந்தோம்.....*
வறியனொன் றிறையிரக்கும் வாய்மையா லறிந்தோமென்று ......*
நெறிவழா துலகந்தாங்கு நிருபனைத் துதியாய்நெஞ்சே....(மகூ)

இரவினு மற்றோர்பாரா விடையினும் பாவஞ்செய்வாய்.......*
கரதலா மலகம்போன்முக் காலமு முணர்வோனெங்குந் ... ... *
தரமொடு வீற்றிருக்குந் தன்மையெள் ளளவுமோராய் ..........*
பரனிலா விடமொன்றுண்டேற் பவமவண் செய்நீநெஞ்சே(உ0)

உ-ம்-அதிகாரம்-தெய்வத்தன்மையும் வாழ்த்தும்.

முற்றுப்பெற்றன.

ஆக அதிகாரம்-உ-இ திருவிருத்தம் - நஉ.

## ந-ம்-அதிகாரம்

## அ ர ச ரி ய ல் பு.

எந்தவேளையினு நொந்தவர் துயர்கேட் டிடரிழைப்பவன்ற னதேக, மைந்தனேயெனினும் வதைத்திடவொல்கான் மாக்களின் சுகநலமன்றிச், சிந்தனைமற்றோர் பொருளினிற் செலுத்தான் றீமொழி கனவினும்புகலான், றந்தைபோற்றுய்போ லெவரையு மோம்புந் தன்மையனேயிறையன்றே ...... .................... (க)

மன்னுயிரனைத்துந் தன்னுயிரென்ன மகிழ்வொடுதாங்கியா ளோனு, மின்னலுற்றபார்ந்தோ மெனக்கலுழ்ந்திடிற்றன் னிருவிழிநீரினையுகுப்பா, னன்னவெந்துயரை நீக்குமுன்றுன்ஞன் றரு ந்திடான்றுயின்றிடானெவரு, நன்னகரெங்கு முளனெனப்பகர நாடொறுமியங்குவோன்கோனே......... ......... ............... (உ)

தாயறியாத சேயிருந்தாலுந் தானறியாதவரில்லை ... ..*
யாயதன்மையினு லறவழிநிற்கு மறிஞரையறிந்தவர்க்குரிய ....*
தேயவாதிக்கந்தந்துநன்னீதிசெலுத்தியெங்கணுமருந்தினுக்குந்*
தீயவரிலனொன் றிசையுறவடக்குந் திறலுளோன்.பூதலவேந்தே ()

தன்புகழ்கருதி மருவலரோடுஞ் சமர்புரிந் துயிர்களை மாய்த்துத், துன்பமேசெய்ய விழைந்திடான் முற்போர் தொடுத்திடான் றன்னுயிரனைய, மன்பதைக்கிடுக்கண் யாவரோசெயினும் வாளமரியற்றிநீக் கிடுவா, னின்ப துன்பங்க டனக்குமற்றவர்க்கு மேகமென் றெண்ணுவோன்வேந்தே .................. ...... (௪)

தானினிதியற்று மனுநெறிப்படிமுன் னானடந்தறவழிகாட்டி, ஞானநற்குணத்தின் மேன்மையாலெவர்க்கு நாயகன்றானெனத் தெரித்துத், தானமுந்தயையு மெய்மையுந்தவமுந் தற்பரன்வணக்கமும் பொறையு, மானமுமிகுத்து நரரொலாஞ்செழிக்க மகியரசளிப்பவன் மன்னே............ ........ .......... ....... (௫)

சத்திரஞ்சோலை சாலைகள்குளங்க டண்ணதி மதகொடாலயங்கள், வித்தியாசாலை மாடகூடங்கள் வேறுவேறமைத்து வேளாண்மை, சத்தியமகலா வாணிகமாதி சகலநற் றொழிலவரவர்க, ணித்தியமுயல வித்திசைபுரக்கு நிருபனே நிருபனுமன்றே .. (௬)

காதிறைவனுக்குக் கண்ணெனலான்மெய் காண்குறு னெனுமொழிமாற்றி, வாதிகள்சாட்சி சாதகமெல்லாம் வகைவகைப்பினிதுகேட்டமைந்த, மேதினிக் கிழமை நீங்கிடுந்தன்மை வினையினு நடுவினீங்காது, பாதியாவணுவும் பகுந்துதீர்ப்பதுவே பார்த்திபன் கடமையாமன்றே ................................(௭)

மன்னவன் வலிசெங் கோலினாலன்றி வாளினாற் சேனைபாலில்லை, நன்னெறிவழுவா மன்னவன்றனக்கு நாடெலாம் பேரரணுலகின், மன்னுயிரெல்லா மவன்படையன்னோர் மனமெலா மவனுறைவீட, மின்னதன்மையனா யரசளிப்பவனை யிகல்செயுந் தெறுநருமுளரோ............................. ... ............... . (௮)

கைப்புனையேற்றுப் பொய்ப்புகழ்மேலாக் காதினனருள்பொழி கண்ணன், றப்புரைவழங்கா நாவினன்புவியோர் தாசன்றானெனவுணர் மனத்தன், செப்பயன்மடவார் காணருமுரத்தன் றிருந்தலர்காணரும் புறத்த, னெப்பொழுதினுஞ்சென் றியாருங்காண்முகத்த னீசனன்புடையவ னிறையே .... ......... .... . (௯)

## கொடுங்கோலரசன்.

கொடியமன்னவர்க்குக் குடிகளேயொன்னார் கோட்டையேயமர்க்களமவர்த மடிகடோய்நிலமெங் கணும்படுகுழியாமவி

ன்றிடு மன்னமும்விடமா, நெடியவாசனமே காசனமேடை நீ
மி நழை யோர்நமன் றூதர், கடிமனைமயானக் காடெனிற்கொடு
ங்கோற் காரணருப்புமாறுளதோ ............................... (௰)

௩-ம்-அதிகாரம்-அரசரியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் - ௩ - க்கு திருவிருத்தம்-௪௰.

௪-ம்-அதிகாரம்.

## குடிகளியல்பு.

வேந்தனேயில்லா விடினுலகத்து மேலதுகீழ்தா மணுஞ்செப், காந்தனுக்கடங்கிக் களத்திரநடவாள் காதலர்தந்தைசொற்கேளார், மாந்தர்வேளாண்மை முதற்றமக்குரிய வளமைகூர்தொழில்களின் முயலார், சாந்தருந்திய ராவரோற்றீயர் தன்மையைச்சாற்றுமாறெவனே. ............................... (௧)

நம்மன்னமைந்தர் கிரகம்வாழ்வெல்லா நரபதியால்வனிலனே, லம்மன்னதீயர் கைவசமாவ னருநிதிகொள்ளையா நாளும், வெம்மையோடொருவ ரொருவரையுண்பார் மேலவரசடரான்மெலிவா, ரம்மவீதெல்லா முணர்ந்தரசாண்ணக் கமைதனற்குடிகளினியல்பே ............................... (௨)

வேறு.

நதியினு முயர்பண்ணை நந்துங் காருலாந் ............ *
கதியினு முயர்வனாத் தருக்கள் காயுமால் ............ *
பதியினு முயர்ந்தடங் காப்பைஞ் ஞீலங்கள் ............ *
விதிசெயல் சிதைந்தக மெலிந்து நையுமே ............ (௩)

தனையெனுமுடற்கொரு தலைவனே தலை ............ *
நரர்பல வுறுப்புக ளலங்கொண் மெய்யது ............ *
சிரமுறும் பொறிவழிச் செல்லுந் தன்மைபோ ............ *
லரவர சனுக்கமைந் தொழுகும் வையமே ............ (௪)

பானுவெப் புடையவ னெனினும் பானுவே ........ .... ........ *
வானுல வானெனில் வைய முய்யுமோ ...... .. . ....... ...... ......... *
கோனருங் கொடியனே யெனினுங் கோனின்றி..... ..... ... ...... *
மானவ ருய்ப்பவோர் வழியு மில்லையே ...... .... ..................... (௫)

படியின்மன் னுயிர்க்கெலாம் பாது செய்கின்ற ... .... ....... ..... *
நெடியமா சேனையை நெறிசெய் மாந்தனைக் ... .... ......... ..... *
கடியொடுந் தாங்கவூர்க் காரியஞ் செயக் .... ...................... ... *
குடியிறை யிறையவன் கொள்ளுங் கொள்கையே.......... ..... (௬)

வேறு.

கோவரிய சீவன் குடிகளுட லாவார் .... ... ...................... . *
சீவன்சும் மாவிருக்கத் தேகமுழைத் தோம்புதல்போற் .... .... *
பூவலய மீதினிற்றம் பூட்சிகளி னுழைத்துக் .... .............. ... *
காவலனைக் காக்கக் கடனுங் குடிகளுக்கே ........ ..... .... ......... (௭)

௪-ம்-அதிகாரம்-குடிகளியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௪-இல் திருவிருத்தம்-௪௭.

## ௫-ம்-அதிகாரம்.

## ஞானசாரியன் பெருமை.

அகவிரு ளகலஞான விளக்கினை யருளி னேற்றிச் ............... ...*
சகலமு நல்குங் கேள்வித் தனத்தினை நல்கியாதிப் ......... ..... ... *
பகவன்றன் சொரூபங் காட்டிப் பவமற் றிரண்டுங்காட்டிச் ... *
சுகநிலை காட்டுந் தியாகத் தோன்றலை மறவனெஞ்சே.... . .....(௧)

வேறு.

கானலெ னப்படு காயமி தப்பன் ........... ......... ......... ..... *
ஞானவ மேபுவி தங்க வளித்தா ........ ......... ........ ......... *
னீனமி லாரிய னென்று மொருங்கா ............. ........ .......... *
ஞான வுடம்பினை நல்கின னன்றே ........................... ..... (௨)

வேறு.

நாட்டமின்றி யொளி யெப்பயனை நல்குமனையிற் ... *
பூட்டிப்பொன்றிறவு கோலினையலாது புகுமோ ... *
எட்டகத்தரிய நூல்களுள்ளவேனு மினிதாக் ... *
காட்டருட் குரவனின்றி யெவர்காண்பர் பயனே ... (௩)

ஞானசூரிய னெனுங்குரவனின்றி நரர்த ... *
மனமெய்ம்பவ விராவை யகலா ரெவருமே ... *
கானம்வாழ் மிருகமாவர் கதிவாயில் பொதியு ... *
மானவர்க் குறையுளாய் நிரயம்வாய் விரியுமே ... (௪)

மண்ணிறைக் கடியராயுயிர் வளர்ப்பர் பலரும் ... *
விண்ணிறைக் கடியரா யெவரும் வீடும்பெறவே ... *
புண்ணியத் திருமறைப் பொருளை யோதுபுனித ... *
ரெண்ணிடற் கரியபெற்றியை யியம்ப வெளிதே ... (௫)

ஐம்புலக்கத வடைத்து மனமாவை யறிவாங் ... *
கம்பம்வீக்கி யனுநுஞ் சுகமெனக் கருதியே ... *
செம்பொனைத் திரணமா மதித்துறத் தகுதியோர் ... *
தம்பெரும் புகழியம் புதற்குத் தரமதோ ... (௬)

வேறு.

கலைசிறூறச்செய்யினுந் தீபம்வின் டன்னைநோக்குங் ... *
கலைதேயினுந்தண் கதிர்வீசுமக் கங்குற்றிங்கள் ... *
விலைமாமணியைப் பொடிசெய்யினு மின்னறுது ... *
நிலைநீங்குவரோ துயர்மேவினு நீர்மையோரோ ... (௭)

லைநத்திட்டமருந்தி லக்காரங் கலந்துகூட்டி ... *
மத்தித்தருள்பண் டிதர்போன்மற நோய்தவிர்ப்பா ... *
னெத்திக்கினுங் கேட்பவர்காதுள மின்பமேவித் ... *
தித்தித்திட வாரியர்நன்மறை செட்புவாரோ ... (௮)

சிறுவாய்க்கலத்துட் டுளியாகச் செலுத்துநீர்போ ... *
லறியாச்சிறுவர்க்கு முணர்ந்தறி யாதவர்க்கும் ... *
வறியார்க்கும் விளங்கிடவே தெளிவாவசத்து ... *
நெறியைத்தெரி விப்பர்நன்னூனெறி நின்றமேலோர் ... (௯)

வைவார்தமை வாழ்த்தியுநெஞ்சில் வருத்தமுற்று ... *
நைவாருடனைந் தழுதுந்தமை நண்ணித்துன்பஞ் ... *

செய்வாருறு பிழைநினைந்துதஞ் சிந்தைநொந்து ....... .... *
மெய்ம்மாமறையின் பயனோதுவர் மேன்மையோரே ....... (௯)

வேறு.

பரிதியின் கிரணமங் கணைமதிப் படியினு ... ........... .... ... *
மரிதின்மா சணுகுறு தகலல்போ லினியநற் ....... ........ *
சரிதமில்லவர்குழாஞ் சார்ந்துபோ திக்கினுந் ... ....... ...... *
துரிதவெம் பவமுறூர் தொன்மறைக் கிழவரோ....... ...... (௰)

௫-ம்-அதிகாரம்-ஞானசாரியன்பெருமை முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௫-இ திருவிருத்தம்-௫௮.

௬-ம்-அதிகாரம்.

## பொய்க்குருவின் றன்மை.

திருடன்பொருட் காவலனாதலுஞ் செல்வழிக்குக்............ *
குருடன் குருடன் றனையே துணைகொள்ளல்போலு ....... ... *
மிருடங்குளமாந் தனைவான்கதி பெற்றவென்று .... ......... .... *
வருடங்கிய நெஞ்சமிலான்குரு வாயவாறே ... ........ ....... (௧)

பெருவெம்பிணி யாளன்மற்றோர்பிணி பேரும்வண்ணந் ..... *
திருமந்திரஞ் சொல்வனென்றோதிடிற் றிண்மையாமோ .... .. *
தருமந்தனை நாட்டவந்தோன் குறைதானுளானே.... .. ... ... *
விருமண்டல மீதவன்சொல்லெவ ரேற்பர்மாதோ ... .......... (௨)

பாவச்சலதிக்கு ளுருவகை பாருளோர்க்குக் ...... ......... .... *
காவற்றுணையாங் குரவன்குணங் கல்வியின்றி............ ...... ... *
யாவற்றினைபூண் டவனேயெனி லாருங்கொள்ளா.... ....... . .. *
ரேவத்தெரியான் றிமின்மீதெவ ரேறுவாரோ ......... ......... (௩)

பழிதீர்கலையாவு முணர்ந்தும் பலர்க்குரைத்து .... .......... *
மிழிவேயுறத்தா மடங்காமதி யீனரார்க்கும் .... ..... ..... .... .... *
வழிகாட்டிட நாட்டுமரத்தையும் வையமேச .. .... ..... ...... *
விழியற்றவன் கையினில்வைத்த விளக்குநேர்வார் .. .. ... (௪)

சொன்னத்திருடன் சிறுகள்வனைத் தூறியேச .... .... ... ...*
லென்னப்பொரு ளாசையுளான்பிற ரிச்சைதீர்ந்து ... .. .. *
மன்னத்திரு ஞானமுணாத்தன் மற்றோர்துறக்கும் ... .... .... *
பொன்னைக்கவரச் செயும்வஞ்சனை பேரினுமாதோ....... ....(௫)

வேறு.

வாயிற் றேனுந்தன் வாலிற் கொடுக்குஞ்சே ........... ..... .... *
ரீயின் வாயினி லிங்கிதச் சொல்லொடுந் ........... ...... .. .... *
தீய செய்கை யுளானைத் தினஞ்சிறு ... ... ............ .... .....*
சேயு மெள்ளுந்தன் சிந்தையு மெள்ளுமே .. ...... ... .... (௬)

இகத்தின் வாழ்வினி லிச்சை யறுன்றனைச்.... ......... ..... .. *
சகத்தி னிற்குரு சாமியென் றோதுதல் ...... ... .... .. ...... *
சகத்தை நீங்கித் துபரஞ் செறிநர .. .......... ........ ..... *
ரகத்தை வீடென் றனறதல் சிவனுமே ........ ....... ........ (௭)

ஆதிதேவ னறிவில் லவர் செயுங் ... ........ ....... ....... ... *
கோதினைக் கமை கொண்டு பொறுக்கினு ....... ....... .... . *
நீதிநூலை யுணர்ந்து நெறிதவிர் ....... ..... ....... .... .. *
வேதி யர்க்கு விமோசன மில்லையே . ........... ..... ....(௮)

ஒருமை யாய்த்தன் னுதர நிமித்தமே ..................... .... *
தரும வேடந் தரிக்குதல் வெய்புலி ....... ..... .... .. .... ........ *
புருவை தன்னைப் புசிக்கப் புருவையின் ........... .... .... .. *
சருமம் பூண்டங்கு சார்த னிகர்க்குமே .. ............ .... ......(௯)

௬-ம் - அதிகாரம்- பொய்க்குருவின்றன்மை முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௬-க்கு திருவிருத்தம்-௬௭.

௭-ம்-அதிகாரம்.

## பிதாமாதாவைவணங்கல்.

சின்னவோர் பொருடந்தோளைச் சிவனுள் ளளவுமுள்ளத் .... *
துன்னவே யவண்டுமென்ன வுணர்த்தனர் பெரியோர்தேகந் .. *
தன்னையா ருயிரைச்சீரார் தரணியின் வாழ்வைத்தந்த .. ..... *
வன்னைதந் தைக்குச்செய்யு மருங்கைம்மா றுளதோவம்மா...(௧)

கடவுளை வருந்திச்சூலாய்க் கைப்புறை யுண்டனந்த ..... ..... .....*
மிடர்களுற் றுதரந்தன்னி லீரைந்து திங்கடாங்கிப் .......... ....... *
புடவியி லீன்றுபன்னாட் பொற்றனப் பாலையூட்டித் ..... ..... *
திடமுற வளர்த்துவிட்ட செல்வியை வணங்காய்நெஞ்சே . . (௨)

எப்புவி களும்புரக்கு மீசனைத் துதிக்கவேண்டி ......... . . ..... *
னப்பனே தாயேயென்போ மவனையே துதிக்கவேண்டி ....... *
னொப்பனை யுளதோவேலை யுலகிற்கட் புலனிற்றோன்றுஞ் ... *
செப்பருந் தெய்வமன்னார் சேவடி போற்றாய்நெஞ்சே ..... (௩)

வைத்தவ ருளமுவப்ப மலர்நிழல் கனியீயாத ............ ........ *
வத்தருத் தன்னைவெட்டி யழலிடு மாபோலீன்று ............ *
கைத்தலத் தேந்திக்காத்த காதற்றாய் பிதாவையோம்பாப் ....... *
பித்தரை யத்தன்கொன்று பெருநர கழற்சேர்ப்பானே .......(௪)

ஈன்றவர் நம்மா லுற்ற வெண்ணரு மிடர்கட்கான்ற ........ ... *
மூன்றுல கழுமொப்பாமோ மூப்பினா லிளைப்பாலன்னார் ... *
கான்றவன் சொற்கள்கன்னல் கான்றவின் பாகெனக்கொண் .... *
டேன்றுகோ லென்னத்தாங்கி யூழியஞ் செய்யாய்நெஞ்சே.... (௫)

ஈங்கெதி ருதவிவெஃகா தெவருமோ ருதவிசெய்யா ..... ..... .. *
ரோங்குசேய் வாழ்வீயு முடலெய்க்கும் பொழுதுதம்மைத் . *
தாங்கிடுந் தாங்காதென்னுந் தன்மைநோக் காதுபெற்றோர் .... *
பாங்குடன் வளர்க்குமன்பு பரவலாந் தகைமைத்தன்றே .... (௬)

மண்ணினி லன்னைதந்தை மறமறஞ் செயினுநோன்பு .... .... *
பண்ணினு முடல்வருந்தப் பணிபுரி யினுமருந்தொன் ..... .... *
றுண்ணினுங் களிக்கினுந்துன் புற்றய ரினுமனத்தொன் ... ... *
றெண்ணினுந் தம்பொருட்டன் றின்சுதர் பொருட்டாலன்றே.(௭)

ஐயமெய் யம்மணத்தோ டழுவதை யன்றிப்பேசச் .... ..... ..... *
செய்யவொன் றறியாநொய்ய சிற்றுடற் சேய்வளர்ந்திங் . ... .. *
குய்யவேண் டுவனசெய்தா ருயிரினு மினிதாக்காக்கும் ......... *
பொய்யிலன் புடைத்தாய்தந்தை போல்பவ ருளரோநெஞ்சே (௮)

மனையவள் வீயின்வேறோர் மனைவியைக் கொளலாம்பெற்ற .. *
தனயரா தியரிறப்பிற் றனித்தனி பெறலாம்பின்னும் ....... .... *
புனைபொரு ணீங்கின்மற்றோர் பொருளையும் பெறலாமத்த ... *
னனையிறந் திடின்வேறத்த னன்னவரு வாரோநெஞ்சே... .... (௯)

வேறு.

ஒருத்திபஞ்ச காலமதிற் றூதைக்குத் தன்முலைப்பா லூட்டிக்காத்தா, ளொருத்தமிலைச தந்தைதனைச் சுமந்தோடி யொருவெண்ணொன்று ரிடணாத்தீர்த்தா, னொருத்தன்றன் றந்தைக்கே யுயிர்கொடுத்தா னெனப்பலவா வுரோனைமநாட்டின், சரித்திரஞ்சொல் வதையறிவாய் நெஞ்சமேயீன்றோரைத் தாங்குவாயே.... ..... ..... ..... (௰)

௭-ம்- அதிகாரம் - பிதாமாதாவைவணங்கல் முற்றுப்பெற்றது.

ஆ. அதிகாரம்-௭-இ திருவிருத்தம் - ௭௭.

## ௮-ம்- அதிகாரம்.

### பாலரைவளர்த்தலும் படிப்பித்தலும்.

அயற்பொரு ணிறங்கவ ரரத னங்கள்போற் .. ...... ......... ...... *
செயப்பிறி தறிகிலாச் சேயர் சுற்றுளோர் ......... ......... ..... *
கயப்புறுந் தீச்செயல் கற்கையா லவர் .... ....... ....... .... . *
நயப்புறுஞ் சேர்க்கையை விலக்க னன்றரோ ... .... .... ..... (௧)

வளையிள மரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும்பொன் ................ *
விளகிய பொழுதணி யியற்ற லாகுநல் ......................... ....... *
வளமுறு கேள்விநூன் மாண்பு நற்குண ..... .......... ... ....... *
மிளமையி லன்றிமூப் பெய்தி னெய்துமோ .... ..... ........(௨)

மாவினு விருவரு மருவி மாசிலாப்... ........ ... ..... ........ .. *
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர் .... ............ ... ...... .. *
தாலமேற் செல்வமா வளர்த்தறங் கட்கோர் .... ...... ......... *
சாலனை வளர்க்கின்ற காட்சி போலுமே ......................... . (௩)

தீதுநன் றறிகிலாச் சேய னொன்செய்வார் ...... .... ..... .... .....*
கோதற யவனைநன் னெறியிற் கூட்டிடா ....... .. ............. *
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்குந் ........ ....... *
தாதை தாய் புதல்வர்க்குச் சத்துருக்களே............ ............(௪)

சுகமுறு வாழ்வில வெனினுந் தோன்றற்குச் ... *
சகமகிழ் கலையறந் தனைப் பயிற்றுத ... *
லகநினைந் ததுதரு மரத னந்தலை ... *
யிகபர மிரண்டினை யீதலொக்குமே ... (௫)

கலைபயிற் றுதுகா தலர்க்கு மாநிதி ... *
நிலையென வளிக்குத னெறியில் பித்தர்க்குக் ... *
கொலைசெய்வா ளீவதுங் குழவி தன்னைமா ... *
மலையினே ரத்துவைப் பதுவு மானுமே ... (௬)

பயிர்களை யெடுத்திடப் பல னளித்தல்போற் ... *
செயிரினைக் கடிந்துநற் செயல் வியந்தருந் ... *
தயையொடுஞ் சேயினை வளர்க்குந் தந்தைதாய் ... *
துயருறு வண்ணமத் தோன்றல் காக்குமே ... (௭)

நிதிசெல வீய்க்கெடு நீசர் வவ்வுவர் ... *
மதியினை மயக்கிவெம் மறம் விளைத்திடுங் ... *
கொதியழ ன்ரகிடுங் குணமுங் கல்வியும் ... *
விதிதரும் பதிதரும் வீடு நல்குமே ... (௮)

புவிநடை கடவுண்மெய்ப் போத மன்பறஞ் ... *
செவியினே தாமொரு சேயைப் பார்விட ... *
லவியென வூருமா றறிகிலான் றனைக் ... *
கவியமில் புரவிவைத் தோட்டுங் காட்சியே ... (௯)

தீயராய் வறியராய்ச் சிலர் வருந்தலுந் ... *
தூயராய்ச் சிலர்புவி துதிக்க வாழ்தலுந் ... *
தாயினாற் றந்தையாற் சமைந்த தன்மையாற் ... *
சேயரை நன்னெறி செலுத்தன் மேன்மையே ... (௰)

௮-ம்-அதிகாரம்-பாலனைவளர்த்தலும் படிப்பித்தலும்

முற்றுப்பெற்றன.

௯-அதிகாரம்-௮-இ திருவிருத்தம்-௮௭.

௯-ம்-அதிகாரம்.

## மாதரைப்படிப்பித்தல்.

கல்வியே யறவழி காட்டு மாண்மகன் ....... *
செல்வழி யறிந்திடான் வித்தைதேருமுன் ....... *
அல்வளர் கூந்தலா ரரிய நூலின்றி ....... *
நல்வழி யுணர்ந்ததி னடக்கற் பாலரோ ....... (௧)

பெண்மகள் கெடுவளென் றஞ்சிப் பெற்றவன் ....... *
உண்மைநூ லவட் குணர்த் தாமை தன்மனைக் ....... *
கண்மறு புருடனைக் காணு மென்றதை ....... *
யெண்மையாத் தவன்பறித் தெறித லொக்குமே ....... (௨)

காவலன் பயத்தினாற் கற்பைக் காக்கின்ற ....... *
பாவைய ரரியநூற் பயன் றெரிந்திடிற் ....... *
பாவபுண் ணியநெறி யறியும் பண்பினாற் ....... *
சீவனீங் கினும்பல வனைச் சேர்வரோ ....... (௩)

பொருந்துநற் கலைதெரி பூவை கற்பது ....... *
திருந்தியே மிகுமலாற் றேய்ந்து போமெனல் ....... *
வருந்திடா துயிர்தரு மருந்தை மானிட ....... *
ரருந்திடிற் சாவொன் றறைத லொக்குமே ....... (௪)

முடவரோ நடக்கினு மூங்கை பேசினுந் ....... *
திடமொடந் தகர்வழி தெரிந்து செல்லினு ....... *
மடமயி லனையர்நூல் வாசியா ரெனி ....... *
னடமினன் னெறிதெரிந் தமையற் பாலரோ ....... (௫)

அரிவைய ரோசமு சார வல்லினில் ....... *
விரிசுடர் விளக்கென விளங்குவா ரவர்க் ....... *
குரியநன் னூலுணர்த் தாமை கூடையா ....... *
லெரியொளி விளக்கினை மறைத்தலேய்க்குமே ....... (௬)

நீதிநூன் மைந்தர்க்கு நிகழ்த்தி மென்மல ....... *
ரோதியர்க் கோதிடா தொழித்தன் மெய்யினிற் ....... *
பாதியை யேயலங் கரித்துப் பாதிமெய் ....... *
மீதினி லணியின்றி விடுத்தலொக்குமே ....... (௭)

இக்கிளை நகுமொழி யெழின்மின் னுரிறண் ........ *
மக்கண்மிக் கோனென் மடமையா மிரண் ........ *
டக்கமு மொக்குமே யன்றி நல்லக ........ *
ணெக்கண்மற் றெக்கணே யிழிவுடைக் கணே ........ (அ)

வேறு.

கலைபுணர்ந் தறி யாதவோர் கன்னிகைய ........ *
புலைவுறுஞ்சமு சாரத்தி னுய்க்குத ........ *
னிலைபுணர்ந்தற நீந்தறி யான்றனை ........ *
யலைகடற்க ணமிழ்த்தலை யொக்குமே ........ (௯)

வேறு.

நல்லறி வேயணி நன்னுத லார்க்கலீ ........ *
தில்லவ ரோடு மியைந்து கலத்தல் ........ *
புல்லுயிர் நீங்கு புழுக்கொள் சவத்தைக் ........ *
கல்லுரு வைப்புணர் காம நிகர்த்தே ........ (௰)

௯-ம்-அதிகாரம்-மாதனைப்படிப்பித்தல் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௯-இ திருவிருத்தம் - ௯௭.

## ௰-ம்-அதிகாரம்.

## சகோதரரியல்பு.

தந்தைதா யொருவர் தம்மைத் தாங்கிய வுதர மொன்று .... *
முந்தவின் பாலருந்து முலையொன்று வளரு மில்லொன் ..... *
றிந்தவா றெல்லா மொன்று மியைந்தசோ தரரன் புற்றுச் ... *
சிந்தையு மொன்றிப் பாலுந் தேனும்போல் விளங்க னன்றே (௧)

வேறு.

ஆதனா மிசைநர ராய யாவருஞ் ........ *
சோதர ரெனமிகத் துன்ன னன்றெனை ........ *
வேதமே யோதுமேல் விளங்குஞ் சோதரர் ........ *
மீதமை நட்பினை விளம்பல் வேண்டுமோ ........ (௨)

பயந்தவர் சோதரர் தமனாப் பண்பொடு ............ *
வியந்து பேணுதவன் வேறு ளோர்களை ............ *
யியைந்து பேணுமெனன வெண்ணி நீக்குவ ............ *
ருயர்ந்தவ ரவமுறு முறவு தன்னையே ............ (௫)

ஒற்றையொண் சுடரினை யொழிக்கு மெல்வளி ............ *
கற்றைபாப் பலசுடர் கலப்பின் மாவளி ............ *
சற்றும்வெல் லாதுசூழ் தமர் சகோதரர் ............ *
பற்றொருநி மருவிடிற் படரு றூர்களே ............ (௬)

ஒரிழை யறுத்திட லெளிதொன் றாகவே ............ *
சேரிழை பலவுறத் திரித்த தாம்பினை ............ *
யாருமே சிதைத்திடா ரமை சகோதரர் ............ *
சீரொடு பொருந்திடிற் றிறல்கொள் வாரரோ ............ (௭)

௰-ம்-அதிகாரம்-சகோதரரியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௰-இ திருவிருத்தம்-௱௨.

௰௧-ம்-அதிகாரம்.

## புருடபாரியரியல்பு.

ஆவியின்றி யுடலில்லை யுடலின்றி யாவியிலை யதுபோற் பத்தா, தேவியெனு மிருவர்சேர்ந் தோருருவாஞ் செழுமலருந் தேனும்போல, மேவியவ ரிருவருமே நள்ளாது முரண்செய்யல் விளங்கு மெய்யுஞ், சீவனுமொன் றோடொன்று போராடி யழிந்தொக்குஞ் செப்புங்காலே ............ (௧)

மணியுமொளி யும்போலான் மகனுமனை வியும்பொருந்தி வாழுவாரோற், பிணியுறுமா தலொனினும் பெருஞ்செல்வர் நகுலமும்வெம் பெரும்பாம் பும்போற், றணியாத பகையுற்று நள்ளாரே லுயிரற்ற சவத்தின்மீது, பணிநன் மிகப் பூட்டி யலங்கரித்தலொக்கு மவர்செல்வப் பயன்றானம்மா ............ (௨)

தந்தைதாய் சோதரருற் றாரெலாங் கைவிடுத்துத் தன்னை
ச்சார்ந்த, பைந்தொடியைப் பனையவர்போ லாதரிக்கக் கணவனுக்
கேபரமா மாதி, யந்தமிலான் முகத்தெய்வம் பதியிரண்டாந் தெ
ய்வமெண வன்பி னோடு, சிந்தைதனி னினைந்தருளுஞ் சேயிழை
பூவையர்க் கெல்லாந் தெய்வமாமால் ... ... ... ... ... ... (௩)

தவறுட்டி யிருவரினற் குணமுளா ரிலரென்னுந் தன்மை
நோக்க, னவமணஞ்செய் புன்னன்றிப் பின்னுன்னிற் பயனுள
தோ நாவாய்த் தன்னை, யுவராழி நடுவினினன் றன்றெனக்கை விட
த்தகுமோ வுடல்பன் னோய்சேர்ந், தவயவங்கள் குறைந்தாலு ம
தையோம்பா தெறிவரோ வவனி மீதே ... ... ... ... ... (௪)

கொழுநனை யினுமனையா யினுமியல்பில் லாரொன்னிற் கூறி
ன் சொல்லாற், செழுமைநெறி யினிற்றிருப்ப வேண்டுமிதத்
தால்வசமாஞ் சின விலங்கு, மழல்வதினுற் றுன்பமிகு மல்லாது
பபனுளதோ வருநோ யுற்ற, விழிமிசைநன் மருந்திடா தழற்பி
ழம்பை விடிலந்நோய் விலகுங் கொல்லோ ... ... ... ... (௫)

தந்தைதாய் சோதரனை நீங்கியின்னு ரொருவன்கை தன்னை
ப் பற்றிப், பந்தமுற லாலவனொல் லாரினுமிக் குரிமையுளோன் பத்
தா வன்றோ, இந்தநிலை யுணராம லவனையிகல் செயுமேழை யிக
பரத்தை, நிந்தையுற வழித்தலாற் றன்னைத்தான் கொலைசெய்த
னிகர்க்கு மாதோ ... ... ... ... ... ... ... ... ... (௬)

பொய்யான நாடகத்திற் பதியனைபோல் வேடமுற்றோர் பூ
ண்ட கன்மஞ், செய்யாரோ னைக்கிடமா முலைதறிய மணவாளன்
றேவி யென்ன, மெய்ப்பாவுற் றோர்தம்மு ணட்பிலரோற் பிரப
ஞ்ச விநோதக் கூத்தைக், கையாற்கொண் டாட்டுவிக்கும் பரன
வரை யழற்புகுத்திக் காய்வா னப்பா ... ... ... ... ... (௭)

பரவுசமு சாரமெனும் பண்டியில்வாழ் வெனும்பொருளை
ப் பரப்பிப்பூண்ட, புரவிகள்போற் காந்தனுங் காந்தையு மமை
ந்தார் மனமொத்தோர் போக்கைநாடி, விரவொடுமே காரொன்
னி னூர்திபொடப் பொருள்விளியும் விண் புரக்கும், பரமனெ
னுஞ் சாரதிபப் பரிகண்மேற் சினமுற்றுப் படர் செய்வானே()

உறவின ரெல்லாங்கூடி மணவிழாச் செய்தரியோ, னுரி
மை யென்னப், பெறலரும்பேர் பெற்றுமொரு வனாயொரு

வர் பேணுறோர் பெருமை யென்னே, அறமறிவி லாவெனினும் விடாநட்புற் றாண்பெண்ணு மமைந்து வாழும், பறவைமிரு கங்களைப்பார்த் தாயினுநன் னேயமன்னோர் பயில னன்றே (௯)

தாங்குபொருட் சுட்டழித்துத் தானுமழி யுங்கனல்போற் றலைவ னெஞ்சைத், தீங்குகளாற் சுடுமனைவி தன்வாழ்வைக் கெடுத்தலாற் செழுங்கண் டத்திற், றூங்கு திருநாணினா லென்னபய னதைக்கழுத்திற் சுருக்கிக் கொண்டு, தேங்குமுயிர்ப் பொறை நீக்கிற் பூமகடன் பெரும்பொறையுந் தீரு மன்றே ......... (௰)

அனைதந்தை யில்லத்துஞ் சுகமில்லை நமக்குரியா ளான பின்னர், மனைதாங்கல் சூதகஞ்சூல் சேய்பெறுதல் வளர்த்த லொடு மாமனமாமி, யினையவரை யுபசரித்தல் விருந்தோம்ப னம்பணிக ளியற்ற லென்னும், வினைகளினா லயர்மனையைப் பரிவுடனா தரவுசெய்ய வேண்டு நெஞ்சே ............ (௰௧)

தந்துணைவர் வடிவிலா முடவரெனி னுந்திருவின் றனைய னெப்பா, மந்தமுளா ரயற்குமர ரெனினும்விட மனையரா மருமணாளர், வந்தமுதுண் டுறங்கியபின் றாமுண்டு துயின்று முன்னம் வல்லெழுந்து, பந்தமுறுங் கருமமெலா முடிப்பர்கற்பி னணிபூண்ட படைக்கண்ணாரே ............ (௰௨)

வினைப்பகைதீர் பெரியரில்வாழ் வினிற்கலந்து நின்றாலும் வேதநாதன், றனைப்பரவி நினைத்தலென்று மொழியார்போற் கற்பின்மிக்க மாதய லார்தம், மனைப்பணிகள் செய்தாலுந் துயின்றாலுங் கனவினுந்தம் மணாளர் மாட்டு, நினைப்பொழியார் கணவருட னவர்மனமொன் றாய்க்கலந்து நிற்கு மாதோ . .... (௰௩)

எந்தலாந் தந்தையைத்தாய் சகியர்தோ யிலைவிட்டோ ரெளியர் சிற்றிற், சார்ந்தனனென் றிகழுமின்னே சிற்றில்லா லவரருகே தங்கப் பெற்றேன், சேர்ந்தமிடி யாலவர்தம் பணியாவு மென்கையாற் செய்யப் பெற்றேன், பாந்தவமீ தின்றியெந்தை யன்னையவே றாக்குநிதி பாழ்த்த தன்றோ ............... (௰௪)

முதல்வியிவ டுணைவனே தெய்வமென்று ளவன்சித்தின் மோக்கமென்றாள், அதிலவனோ டுறைதல்சா லோகசா மீபமென்றா ளவனைத் தீண்டி, மதமொடுமே யடித்தல்சா ரூபசா யுச்சியமென்றுண் மயற்பேய் கொண்டாள், பதவியெலா மீன்றோர்பா லிருக்கநண்ப னொடுமெலிந்தாள் பசிநோ யுற்றே ..... (௰௫)

வேறு.

உண்ணல் பூச்சூடனெஞ் சுவத்த லொப்பனை ...... *
பண்ணலெலாமவர் பார்க்கவே யன்றோ ...... *
அண்ணறன் பிரிவினை யறிந்துந் தோழிநீ ...... *
மண்ணவந் தனையிது மடமை யாகுமே...... (௧௬)

கதிரவ னனையதங் கணவ ரோர்முக ...... *
மெதிருற மலருமற் றேதி லார்முக ...... *
மதியநோக் கிடவிதழ் வாடிக் கூம்புமால் ...... *
சதியர்வாண் முகமெனுஞ் சலசப் பூவரோ...... (௧௭)

மிடியுளார் கேள்வனொன் றுரைத்த மின்னனாய்...... *
கடிநகர் சிறுகுடில் காந்தர் வேந்தரா ...... *
மடிபளே குடிபவ ரன்பென் செல்வமாங் ...... *
குடியிறையென்னிறை குறையுண்டோ சொலாய்...... (௧௮)

தோழிகே ளுனக்குமோர் துணைவ னுண்டவன்...... *
வாழித யத்திறான் மற்ற மைந்தரைப் ...... *
பாழினி னினைக்கின்றாய் பாவி நெஞ்சுனக்...... *
காழிசூ முலகினி லனந்தமோ சொலாய்...... (௧௯)

இங்கிரு பொருள்வயி னேகுவே னென்றீர் ...... *
தங்குவ துடலொன்றே தளர்நெஞ் சோடுயி ...... *
ரங்குறு நாசமே யபல மெய்யிதன்...... *
பங்கதாம் பழியுநின் பங்க தாகுமே...... (௨௰)

விரியுல கழியினு மிறைகள் சூழினுஞ்...... *
சரிகுழற் கற்பினர் துணைவ னேயமும் ...... *
பிரிவிலா வாழ்க்கையும் பெறுவ ரேலவர் ...... *
பரிவெலா மிரவிமுன் பனியி னீங்குமே ...... (௨௧)

தினவினை செயவகல் செல்வ முன்னந்தா ...... *
தனம்வரு மதிநெடு மடைகி லீரொனின் ...... *
மனம்வரு முயிர்வரும் வராத மெய்யிலங் ...... *
கின்முறு வனமுறு மினம் வருந்தவே ...... (௨௨)

வேறு.

இந்தவுட லுள மைம்பொறி யின்னுயிர் யாவுமணஞ்செயு ...... *
மந்தநன் னாளினி லில்லவட் கன்போ டளித்தனன் யான்பொதுப் *

பைந்தொடியேயுனைச் சேர்ந்திடப்பாரி லெனக்குடல் வேறிலைச்
சிந்தைபுலன்களும் வேறிலைசிவனும் வேறிலைசெல்வவையே. (உங)

வேறு.

அந்தநா ணடந்திலர்த யானகன்ற நெறிவழி ……… *
யெந்தவாறு சென்றதென்ன வெனவிளவு சிலதிகேள் …… *
பந்தவூர்தி யேறியே படர்ந்தனன் படர்ந்தநாள் …… *
வந்தபீழை யாவுமன்பர் மந்தஹாசந் தீர்த்ததே …… (உச)

திருவனு யெனப்புகழ்ந்து தேவியை விளிக்கமா …… *
மருமலர்த் துறந்துநெஞ்சின் வாழ்ந்ததென்ன வழுதன …… *
ளருவமாதை யொப்புளாக்க வழுதுவாடு நங்கையா …… *
முருவமாதர் பெயருனாக்கி னுயிர்துறப்ப னெஞ்சமே (உரு)

பூணலங்கன் மார்பினுனை யன்றிவேறு புருடனைக் …… *
காணநோக்கி லேனினைந்து கழறநெஞ்சு வாயிலேன் …… *
பாணவேறு பொறியிலேனை நடனம்பார்க்க வரவெனு …… *
நாணமின்றியேயழைத்த நண்பர்வம்ப ரோகொலாம் …… (உகா)

வேறு.

ஓவியர்நீள் சுவரொழுது மோவியத்தைக் கண்ணுறுவான் …… *
றேவிபையா மழைத்திடவாண் சித்திரமே ஞன்பாரோன் …… *
பாவைபர்தம் முருவெனினீர் பார்க்கமனம் பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால் …… (உஎ)

திருவென்ன வெனைநினையார் சீர்கேடி யெனநினைந்து …… *
பொருள்வயினே கிடச்சீவன் போல்வாரோ புன்னுதலா …… *
லொருதரமோ பலதரநீ ஓ அக்கா ளக்காளென் …… *
றிருவினையேன் றனையழைத்த விழுக்கன்று பைங்கிளியே (உஅ)

நள்ளிரவிற் றமயந்தி நளன்றனையே பிரிந்தபின்னுந் …… *
தெள்ளுயிர்நீங் கிலளென்னச் சேடிநீ பொய்யுரைத்தா …… *
யுள்ளுயிரோ பத்தாவா வுடையகற்பி னார்க்கவன்றான் …… *
றள்ளியகன் றால்வேறு தனியுயிரோ துணையாயே …… (உகூ)

நரபதிநீ யாருவு நண்பரின்பா தத்துகட்குன் …… *
சிரமுடை நிகராமோ சேர்கிலையேற் கொல்வனெனக் …… *

கரவாளை யுருவிநின்றாய் கற்பினுக்கோர் குறையின்றித் ......... *
தரமாநீ யெனைக்கொல்லிற் றந்தைதாய் குருநீயே ......., . (௩௰)

அன்பருண்ணி லென்பசிபோ மவர்களிக்க யான்களிப்பேன் . *
றுன்பமவ ருறில்யானுந் துன்புறுவே னுதலினு ... [தேன்
லென்புடல்வே றெனினு மெமக் கின்னுயிரொன் றெனவுறிந்
பின்பவர்தா னென்னைவிட்டுப் பிரிவதெவ்வா றுலாசகியே (௩௧)

பொன்னகையி லாவெனச்சொல் பொற்றொடிபே பரத்தையர்க்
யன்னகைக ளரிபவையா மச்சநாண் மடப்பயிர்ப்பு .... [ச்ச.
மின்னகையாங் கற்பினர்க்கு மேதினியு நீசொலுமப் ...... *
புன்னகையு நண்பரினேர் புன்னகைக்கு நிகராமோ . . (௩௨)

செழுமுளரி புனனீங்கிற் செழிக்குமோ படர்கொடிகள் ...... *
கொழுகொம்பைப் பிரியின்வளங் கொண்டுய்யுமோ கணவ .... *
ரழுதயர வவதாலு மரந்தைபல வியற்றிடினுந் ... .... .... .... *
தொழுதகுகற் புடையார்தந் துணைவரைவிட் டகல்வாரோ (௩௩)

பேதைமதி யுற்றனையென் றெனையிகழும் பெருந்தகையென்.. *
காதலியைப் பிரிந்ததிந்தக் காயமொன்றே யுயிருரெஞ்சு..... ... *
மாதவள்பா லுறையுமன்னுண் மனமுயிரொன் பாலுறையு... ... *
மாதலினுன் பேதைமதி யாயினனென் பதுநிசமால் ........ (௩௪)

உரனெறுமா மதுரையினை யுலகமெலாந் துதித்தாலும் ........... *
பெருமிகங்கொள் ளேமறியாப் பேதையெனு நந்துணைவி .... *
யொருசிரக்கம் பிதஞ்செய்பி னுடலெல்லாம் பரவசமாம் .... .... *
பருவமதிற் சிறியாளிவ் வசியமெவண் படித்தனளால்.... ...(௩௫)

வேறு.

வினையில் வென்றியி லாதிந்த மீண்டதற் ........ ..... .......... .... *
இன்ன முனிந்திடு மென்றஞ்சி லேம்வசை.... ............ .... .... *
தனையு மெண்ணிலந் தாரந் திறலிலே ........ ........ ........ .... *
மென நகிற் செய்வ தென்சொ லிதயமே........ ............... (௩௬)

இரிஞ ராலுறு மெவ்வமுந் தேகமார் ..... ... ...... .... .......... *
பெரிய புண்களும் பேசநந் தின்பமு ........ .... ... ...... ... .. *
முரிமை வான்முக நோக்க வொழிதலாற் ..... ..... ... ....... ... *
பிரியை நோக்கம் பெருமருந் தாமரோ ..... ..... ....... ..... (௩௭)

எழிலிலா ளில்லவளெனும் வேசிதேன் ............ *
மொழிமுகத்தை மதியைமுன் னான்முகன் ............ *
சுழி தராசினிற் றூக்கநத்தட் டோடும்ப ............ *
ரொழு திசாபதி யின்னுமிங் கெய்திலான் ............ (௩௮)

௯௧-ம்- அதிகாரம் - புருட பாரியரியல்பு முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம்-௯௧-இ திருவிருத்தம் ௩௪௰.

## ௯௨-ம்-அதிகாரம்.

## விபசாரம்.

பண்டோரான் பெண்ணமைத்தவ் விருவர்க்கு மணமியற்றிப் பர னிரக்கந், தொண்டளித்த முறைகடந்து கள்ளவழிப் புணர்ச்சிசெய்யுங் கொடியோர் தம்மை, மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ வவர்தலைமேல் வானு லாவுங், கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ விதுசெய்யிற் குற்ற முண்டோ ............ (௧)

வேறு.

ஒருவரு மறிகிலா ரெனவோ ரொண்ணுதல் ............ *
கரவயற் குமரனைக் கலத்தல் பூசைதன் ............ *
னிருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையுந் ............ *
தெரிகிலா தெனப்பயன் றிருட லொக்குமே ............ (௨)

அன்னிய ரெம்மனை பன்றிச் சேர்ந்தன ............ *
ரென்னமின் னிடையவ ரியம்பல் சோரர்கள் ............ *
பொன்னையாம் வவ்விலேம் பொருள்வந் தெங்களை ............ *
முன்னை வவ்வியதென மொழித லொக்குமே ............ (௩)

மணமகிழ் வாயயன் மைந்தர் தம்மொடுந் ............ *
தினமுனை யாடிடுந் தெரிவை கற்பது ............ *
புனலுறு முப்பினைப் போலு மென்மெழு ............ *
கனலுற லென்னவு மழிவ துண்மையே ............ (௪)

வலதுணை துணைவரு மற்றோர் கைமனை *
தலைவன்செய் தொழிலெலாந் தார மாற்றுத *
லொறுலைவிலா வலக்கையின் றொழி லிடக்கர *
நிலமிசை செய்தென நிந்தை மேவுமே (ரு)

உண்டவர் தமைக்கொலு மோத வெவ்விட *
மண்டினோர் தமைக்கொலு மாளி கையினாற் *
றண்டினோர் தமைக்கொலுஞ் சர்ப்பந் தையலார் *
கண்டவர் நினைப்பவர் தமைக்கொல் காளமே (சா)

நிலையில்சிற் றின்பத்தி னேபத் தாற்றின *
மலைவுசெய் பவந்தனை யாற்றல் கொள்ளியாற் *
றலையினைச் சொறிதலுந் தகிக்குந் தியினை *
யெலியினுக் கஞ்சியில் விடலு மேய்க்குமே (எ)

மின்னெரி மூட்டிடு விறகுபோற் சுவைக் *
கன்னலைப் பழித்தசொல் லானாக் காணலுந் *
துன்னலு முன்னலுஞ் சுடுவெங் காமத்தீ *
தன்னையே மூட்டிடுஞ் சமிதை போலுமே (அ)

உணர்வறுஞ் செல்வமு முயர்வு மோபறுங் *
குணமறுங் குலமறுங் கொடிய நோயெலா *
மணவுறு நரகுறு மாயு டேயுமால் *
கணமறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே (கூ)

வேறு.

உவந்து தன்னுளத் தோங்கிய கற்பிலாச் *
சிவந்த வாயுடைச் சேயிழை யைப்பதி *
யிவர்ந்து சேமஞ்செய் தெய்க்குதல் பட்டிகள் *
கவர்ந்த பின்பொருட் காவலை யொக்குமே (௰)

ஒயப்பாரி லூறுந் தெவ்வர் தம்மொடு *
மேபப் போரி லெதிர்ந்திட வென்றியா *
மாயப் போர்செய் மடந்தையர்க் குப்புற *
மாய்ப் பாற்செல வென்றி யமையுமே. (௰௧)

வேறு.

கொழுநனறியி லுயிர்க்கொலையாங் கோளாக் கிளையாம் பெ
ரும்பழியா, மழல்போ னெஞ்சைச் சுடும்பயத்தோ டயலாடவ

ணா யொருபேதை, தழுவியின்ப முறன்மதமா தானுண்டகல்
வா யிடையொழுகுங், கழையின்சாற்றை விழைந்ததன்பாத் கடு
கிநக்க லேய்க்குமால்...................................... (௰௨)

வேறு.

மற்றொரு வனைச்சேர் மாதிறந்தாலும் வசைநிற்கு முலகமு
ள்ளளவுஞ், சுற்றமும் வாழ்வுந் துணையுமே நீங்குஞ் சோரநாயக
னுமே மதியான், பெற்றசந் ததியு மிழிவுறு மாண்ட பின்னவி
யாவெரி நரகஞ், சற்றுநே ரங்கொள் சுகத்தினால் விளையுந் தன்
மையீ தறிவையீ ருணர்வீர்.......................................... (௰௩)

வேறு.

ஓர்பிழை குருவேசெய்யி னொன்பது பிழைகள் செய்ய......... *
நேர்சிறு சீடனென்ன நிதம்பதி பலமின் னூர்தோள்.................. *
சேர்வது காணுமில்லா டினம்பல புருடர்ச்சேர்தல் .... ....... *
சோன வுன்னி யன்னான் செலவுபார்த் திருப்பண்மாதோ (௰௪)

தன்னைப்போற் பிறரையெண்ண றுறுதியாந் தான் மணந்த ..... *
மின்னைப்போ லிடையினாளை விழியினா னோக்குவோரைத் ... *
தின்னல்போன் முனிவுகொள்வோ ரயலவன் றேவி தன்னை .. *
யன்னைசோ தரிபோலெண்ணு தணைந்திட விரும்ப லென்னே. ()

௰௨-ம்-அதிகாரம் - விபசாரம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௰௨-இதிருவிருத்தம்-௱௫.

## ௰௩-ம்-அதிகாரம்.

## உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாங்கல்.

வாழகமும்புனை தூசணியும்பல வாகன மஞ்சமொடுஞ் ........ *
சூழ்பொருளுஞ்சுவை சேரமுதுங்கமழ் சோலையு மாசுகமுங் *
கீழவராலவர் தாமிலரோன்மிகு கேவலமா யுலகம் ........ ....... *
பாழதுவாமத னாலருடானவர் பாலுறுவாய் மனனே .... ..... (௧)

வேறு.

நாதனே யுயர்வாந் தந்தை நரரெலா மன்னுன் சேயர்............*
பூதலப் பொருள்கள் யார்க்கும் பொதுமை யல்லாது சொந்தச்

சாதனப் பொருள்போற் செப்புச் சாசனம் பெற்றோரில்லை *
யாதலிற் றாழ்ந்தோர் தம்மை யருஞ்செல்வர் தாங்கன் மாண்பே.

நயமறங் கல்வியின்றி நனிநிதியாற் குலத்தால்..... ..*
வயதினாற் பெரியனென்னன் மைந்தர்தந் தையின்றோ ளேறி...*
யிபலித்தாம் பெரியோ னென்ன வியம்பலுங் காலைமாலை.. ...*
யுயர்நிழ லுள்ளோர் தம்மை யுயர்ந்தவ னெனலுமொப்பே...(௫)

எபிராட் டினவூசற்ந ணேறியே சுற்றுங்காலை.........*
மேலவர் கீழுங்கீழோர் மேலுமாய்ச் சுழலல்போல .... .....*
ஞாலமீ தின்றுபர்ந்தோர் நாளையே வறியராவர் ...... .... ....*
சீலநெஞ் சினர்கீழோரைச் சினந்திக ழார்கண் மாதோ ...(௬)

மக்கள்யா வருமோரன்னை வயிற்றிடை யுதித்ததாலிச்...........*
சக்கரந் தனிலெல்லாருஞ் சகோதர ராவர்சீரின்...... [ன்ப
மிக்கவர் தாழ்ந்தோரென்னல் வெறும்பொய்யர் மேன்மையெ}
தொக்கவே பிறப்பிறப்பி லுறுங்கொலோ வுணராய்நெஞ்சே ()

சிலதரு நர்ரோயங்கஞ் சிவனெஞ் சவர்க்கு முண்டா........ ......*
நலநனவ யின்பதுன்ப நானிலத் துள வவர்க்கு....... ..........*
நிலமிசை யவனைச் செய்தோ னித்தனே யவனையேதும் ..... ..*
புலனிலாப் பொருள்போ லெள்ளும் புல்லர்வீ டில்லர்மாதோ()

கொற்றவர் நரர்க்குழைத்துக் கூலியா மிறையைக் கொள்வர்..*
மற்றவ ரெவருந்தம்மெய் வருந்தவே யுழைப்பர் செல்வம் .....*
பெற்றவர் களுமுழைப்பர் பின்னவர்க் குழைப்பர் சேட.....*
ருற்றவித் தன்மைபுன்னி னுழைபரார் தலைவராரே......... ....(௭)

உடலுறுப் புகண்மேல் கீழென் றுன்னிடா தோம்பல்போலுந்*
தடமலை கொண்டநீரைத் தாழ்தரைக் களித்தல் போலுந் .... ...*
தொடர்புறு மேலோர்தங்கைத் தோய்நிதி யாவுந்தாழ்ந்தோர்க்*
கிடவெனக் கடவுளீந்தா னெனநினைந் திடுவர் மாதோ ........(௮)

என்றுமெய் வருந்தவேலை யிபற்றுவோர்க் குயர்ந்தோர் சொந்ப
பொன்றனை யீவர்செட்டுப் புரிகின்ற வணிகரென்ன....... [ப்.
வொன்றுகொண் டொன்றையீவோ ருழைபரிற் றாழுயர்ந்தோ
ரொன்றுகொள் ளெண்ணந்தின்ன மென்னலெவ் வண்ணமம்மா.

ஒளிமுடி யொடும்பிறந்தே யுலகமாண்டவரு மில்லை............ *
யெளியரா யோடொன்றேந்தி யிங்குதித் தவருமில்லை.. ...... ..... *
குளிர்கட லுடுத்தபாரிற் குறைந்தவர் மேலோரென்னல் ... .... *
வெளிமயக் கன்றிச் சற்று மெய்யுலவுணர் வாய்நெஞ்சே.... ..(ம)

௱௩-ம்-அதிகாரம்-உயர்ந்தோர் தாழ்ந்தோரைத்தாங்கல்
முற்றுப்பெற்றது.
ஆ அதிகாரம்-௱௩-இ திருவிருத்தம்-௱௬௫.

௱௪-ம்-அதிகாரம்.

## தாழ்ந்தோருயர்ந்தோர்க்கடங்கல்.

விரிசுடர்க்கதி ரோன்மதிதாரகை விலங்குபக் கிமாமலை மா
வினும், பெரிதுசின்னதென் றாகியதன்மைபோற் பிழையிலான்
வகுத் திட்டவுலகிய, றிரிதலின்றி நடப்பதற்காகவே சிறியர்மேல
வ ரென்னவிங்காயினு, ருரியவிம்முறை யின்படிதாழ்ந்தவ ருயர்
ந்தவர்க்குள் ளடங்கலொழுக்கமே... .... .... ........ . . : . .... (க)

௱௪-ம்-அதிகாரம் - தாழ்ந்தோ ருயர்ந்தோர்க் கடங்கல்
முற்றுப்பெற்றது.
ஆ அதிகாரம்-௱௪-இ திருவிருத்தம்-௱௬௬.

௱௫-ம்-அதிகாரம்.

## பொய்.

முன்னமோர் பொய்யுரைக்க வப்பொய்வெளி யாகாமன்
மூடும்வண்ணம், பின்னுமோர் பொய்யுரைக்க வதையுநிலை நிறு
த்தவோர் பெரும்பொய்சொல்ல, வின்னவகை கைதவமொன்
றிருநூறு கைதவத்துக் கிடமாம் வாய்மை, தன்னையே முன்பற
றிச் சிப்படமொன் றிலையதுவே தகைமைநெஞ்சே ........ . (க)

இழுதைசொல்லி மறைக்கலா மெனுந்திடத்தாற் பாதகங்க ளெல்லாந்தீயர், பொழுதெலாம் புரிதலாற் குற்றங்கள் யாவுக்கும் பொய் பிதாவாம், வழுவொன்றை நீக்கிடிற்றீ வினைகளெலா நீங்கிநிற்றல் வண்மையொன்றே, முழுதுமுண ரறிஞர்க்குத் தோழனும் வர்க்கதனுன் மேலோசமுண்டோ.... .............. ..... .... (௨)

அந்ததமே பொருளென்னக் கைக்கொண்டோர் மறந்தொரு மெய் யறைந்திட்டாலு, மிந்ததன்னை யெவருநம்பார் துணைவியர்புத் திரர்தமரு மிகஞ்சிசெய்வா, ரங்கனுல கெங்கணுமே வசையாகு நரரெலா மகிதராவார், பங்கமுறும் பொய்யனைப் பொய் யருஞ்சோரர் தம்முளமும் பழிக்குமன்றே .... ...(௩)

ஏதேனும் பயன்வேண்டிப் பொய்சொல்லி னப்பொய்தா னெவ்விதத்து, மாதனையில் வெளியாகு மப்பொழுதப் பயனழியும் வளர்ந்துன்பஞ், சாதலின்மை வேண்டிவிட முண்ணலொக்கும் பயன்கருதிச் சலமுரைத்த, லாதலினாலுண்மைதனைத் துணைக்கொள்ளி னெப்பயனு மடைவாய்நெஞ்சே ........(௪)

மெய்யனெனப் பெயர்கொண்டார் வறிஞரேயெனினுநிதி மிகவுமன்னர், கையதனிற் கொடுத்துவைக்க வெவருமஞ்சார் பொய்யனெனக் கவ்வைபூண்டார், செய்யபொருண் மிகவுளா ரெனினுமவர் கையிலொரு செல்லாக்காசு, மையமின்றி யொருவர்கொடா ரெனிற்படிறின் றன்மைதனை யறைவதென்னே()

விலங்குபற வையினுநரர் வாக்கொன்றாற் சிறப்புடையர் விளங்குந்திண்மை, யிலங்குவா யாலுலாயா தவத்தமுனைப் போருலக மிகழ்விலங்கின், குலங்களினுங் கடையராஞ் சாணமதை யழுதுவைக்குங் கோல்ச்செம்பொற், கலங்களின்வைத் தலையொக்கு மெய்க்குரிய வாயாற்பொய் கழறலன்றே ..... ....... (௬)

பழியிலா ரொருவர்க்கு மஞ்சாது நேர்வழியே படர்வார் வவ்வுந், தொழிலுளார் பகற்கஞ்சுந் துரிஞ்சில்போ லிட்டிடுக்கை யிற்றொடர்ந்துசெல்வா, ரிழிவுளா ரென்பதற்குப் பொய்த்தலேசான்றாகுமேசிறாய, வழியுளா ரென்பதற்குச் சரதமேசாட்சியா மகிலின்கண்ணே... ......................... ... ..........(௭)

அயலார்செய் குற்றங்கள் கூறுமன் மறைத்தலே யறமாம
ன்னுர், துயருருவண்ணநாம் பொய்த்தாலும் பிழையன்று சொ
ந்தமாவோர், பயன்வேண்டிச் , சிறியதோர் பொய்சொலினும்
பெரும்பழியாம் பார்மேல்கீழா, யயர்வாகப்புரண்டாலும் பிற
ரீக்கின்ற தரும்பொய்யை யகறயனெஞ்சே.................(௮)

வேறு.

பாரினிற்பொய்த்திடல் பொய்க்கவுன்னுதல் பொய்யினைப்
பிறர்க்குப் பயிற்றலியாதோர், காரியஞ்செய்வேனென்னச் சொ
லித்தவிர்தறனக்கேலாக் கருமந்தன்னை, வீரியமாச்செய்வனென
லற்பனையே துதித்தல்பொய்யை வியந்துகொள்ளல், சீரியனாயி
கழ்தல்பிறர் மீதொருவன் சொலும்பழியைச் செவியிற்கோடல்.

தற்புகழ்தல்புறங்கூறன் மிகவிருணம் வாங்குதல்பொய்ச் சா
ன்றுரைத்தல்,பற்பலவாக்கட்சாடை சிரகரகம்பிதஞ்செய்து பசு
மைபொய்போற், பிற்பயன்றேன் றிடச்செய்தன், மெய்புனை
க்க வஞ்சிவாய் பேசிடாமற், சற்பனையா யிருத்தல்பொய்க் கதை
கூறல் கேட்டலெலாஞ் சலங்களாமே..............................(௰)

வேறு.

வியனுலகெங்கணும் வீற்றிருக்குமோர் .......................*
வயமுளான்முனிவிற் கஞ்சாதுமாக்கட்குப்........ ..........*
பயமொழிமறுத்தமே பகர்தறேவினுங் ..... ................*
கயவுளார்நரரெனக் கருதல்போலுமே ..... ........ .... (௰௧)

௰ரு-ம்-அதிகாரம் - பொய் - முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம்-௰ரு-இ திருவிருத்தம்-௱௭௭.

௰சு-ம்-அதிகாரம்.

## களவு.

களவுசெய்குதன். மனத்தினி னினைக்குதல் கவரொன்.... ..........*
றுளமகிழ்ந்துப தேசித்த லுதவிசெய் தொழுகல்.....................*
வளமிலாப் பொருண் மாறுதன் மிகுவிலைவாங்க .......... ........*
லளவினுநிறை தனினும்வஞ் சித்தப கரித்தல்.. ............... ....(௧)

★ தஞ்சை ...

கண்டெடுத்தவோர் பொருளனு பவித்தலுங் களவின் ...... *
பண்டம் வாங்கலும் வாங்கிய கடன்கொடாப் பழியு ...... *
மண்டும்வ ண்பொரு ளாசையாற் பொய்வழக் கிடலுந் ...... *
தொண்டு செய்பவர் கூலியைக் குறைக்கின்ற தொழிலும் ... (௨)

நட்டமே பிறர்க் கெய்திடச் செய்தலு நம்பி ...... *
யிட்டர் வைத்தநற் பொருளப கரித்தலு மிறப்ப ...... *
வட்டம் வட்டிகள் வாங்கலுஞ் சூதிற் பொன்பெறலு ...... *
மிட்ட வேலைசெய் யாதுகைக் கூலிகொள் ளியல்பும் ... ...... (௩)

கன்னம் வைத்தல்செல் லாப்பணம் வழங்குதல் கள்ள .... . . ... *
மன்னு சீட்டையுண் டாக்குதல் லைலஞ்சம் வாங்க .... ... .... ... *
லென்னு மிபாவுமே களவதா மித்தொழிற் கிசைவோர் .... .... *
மன்னராக்கினை வசைநர கடைந்து வாடுவரால் .................. (௪)

திலக வாணுதற் றேவியைச் சேயனைப் பிரிந்து ... ........ .... *
கலகலென்னவே யொலி செய்மா விலங்குகாற் பூண்டிவ் ... .. *
வுலக மேசிடச் சிறையகத் துற்றுமண் கடந்து .. ... .... ..... *
சிலுகெலா முறல் சிறிதுபொன் திருடலா லன்றோ ......... (௫)

தள்ளரும் பெரும் பழியுளா ரென்னினுந் தனாயி .... ......... .. *
லெள்ளல் சேரிழி குலத்தரே யென்னினு மேசிக் ........... .... *
கள்ள ரென்றுவர்ப் பழித்திடப் பொருளெனிற் களவிற் . . ..... *
குள்ள பேரவ மானத்தை யுணாட்பதென் னுளமே..... ... .... (௬)

வேறு.

அரிமுழை நுழைதல்போல வயலகம் புகும்போ தச்சம் .... ... *
பொருடிருடும்போ தச்சம் புறப்பட்டோ டுங்காலச்சந் .... .. *
தெருவினி லெவர்க்கு மச்சங் கவர்ந்தன திளைக்கவச்ச ... . .... . *
முருமுருக் கொண்டுகள்வ ருளங்குடி கொண்ட போலும் ....(௭)

நிரந்தரம் பலநோயுற்று நெடிதய ரினுங்கை யேந்தி ..... .. ...., *
யிரந்துண்ணப் பெருநிரப்பே யெய்தினும் பகர வொண்ணா . *
வரந்தைசூ ழினும்பொன்வவ்வு மத்தொழிற் கியையா வண்ணம் *
வரந்தர வேண்டுமென்னக் கடவுளை வழுத்தாய் நெஞ்சே ... (௮)

௰௬-ம்-அதிகாரம்-களவு-முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்- ௰௬- இ திருவிருத்தம் - ௱௮௫.

23 JUN 1914
SHIYALI.

௰௭-ம் அதிகாரம்.

## கொலை.

உயிரினை வதைத்திடல் வதைக்க வுன்னுத ........ *
லியிலெனக் கொடியசொல் லறைத லெற்றற்லெண் ........ *
டுயிருடை மத்தெனத் தாபம் பல்புரிந் ........ *
தயலவ ராயுளுட் கழிவுண் டாக்குதல் ........ (௧)

கருவினை யழிக்குதல் கயமிங் கேனையார் ........ *
மருவிட விரும்புதன் மற்றன் னேரிட ........ *
லொருவிட வகைசெயா தொழிதல் வெவ்விடங் ........ *
கருவினி லிடல்கொடுஞ் சமர்க்குடன்படல் ........ (௨)

முனைவுகட் காமம்வெம் முரண் முதற்கொலை ........ *
வினையினுக் கேதுவாம் வினைக் கமைந்திடன் ........ *
மனையினிற் றீயிடன் மண்ணிற் றற்கொல ........ *
வினைய யாவுங் கொலையென்னும் வேதமே ........ (௩)

பெறலரு முயிர்தரும் பிறப்பி லானதை ........ *
யறவொரு வழிசெய வாண்மை பூண்டனன் ........ *
பறவையை நார்விலங் கினைப் பயிக்குமோர் ........ *
மறவனுக் குலவெலா மறவி யென்பமே ........ (௪)

கொலைபுரி வோனையுங் குடி வருந்தவே ........ *
யலைவுசெய் பவனையு மாவி நீக்கிடத் ........ *
தலைமுடி தரித்தவர் தமக்கு நீதியா ........ *
யிலைகொலை செயுமுறை யிதர ரார்க்குமே ........ (௫)

சுதமுறு முகத்தொடு சொல்லு மாற்றமும் ........ *
பதமறு கறைக்கறை படிந்த வாடையும் ........ *
வதனையே காட்டலால் வதை மறைக்குத ........ *
லுதயனைக் கரத்தினன் மறைத்த லொக்குமே ........ (௬)

பவமற மாயினும் பவர்க்க முத்தியாய்ச் ........ *
சிவமுறப் பொலிபினுஞ் சிதைந் தழிந்தவோர் ........ *
சவமுயிர் மேவினுந் தகையில் காதக ........ *
ரவனியி லுய்ந்திட லரிது நெஞ்சமே ........ (௭)

பத்தினி சேயரும் பரி சனங்களுந்................*
தத்தம நிலைகெடத் தலைவ னைச்சம...............*
ஞெத்தவ னியிற்கொல லொருவன் றன்னையன்...........*
றத்தனை பேறாயு மடுதல் போலுமே.................(௮)

தீயிடை மூழ்கினேன் சிங்கி யுண்டவன்...............*
மாய்விலா துய்யினும் வதனுய் யானம...............*
ஞயதன் றெழில்புரி வோனை யன்பொடு...............*
மேயதன் னுலகினுக் கீண் டழைக்குமே...............(௯)

சீவனை வதைசெயல் சிறந்த தாயுங்காற்...............*
பாவமோ ரைந்தினுங் கொலைசெய் பாவியைப்...........*
பூவல யம்பொறு தெறியும் பூதிதா...................*
ஞமெவன வாய்திறந் தவனை நுங்குமே...............(௰)

௰எ-ம்-அதிகாரம்-கொலை-முற்றுப்பெற்றது.

ஆ. அதிகாரம்- ௰எ- இ திருவிருத்தம் - ௱௯௫.

௰அ-ம்- அதிகாரம்.

மது.

ஞானமெய்ச் சுகம்புகழ் நலம்பெறத் தனந்...............*
தானமே செய்குவர் தகுதி யோரறி...................*
வீனமெய் மறதிநோ யிழிவுறப் பொருள்...............*
வானென வழங்குவர் மதுவுண் போர்களே...............(௧)

மருந்தநேர் மதுவுண்போர் மாண்ட பான்மையா...........*
லருந்த வப்பாலருக் கப்ப னில்லையால்...............*
பொருந்திய மனையவள் பூண்ட நாண்களத்.............*
திருந்தகே யென்னினு மிழந்த தொக்குமே.............(௨)

சித்தமு மவசமாஞ் செயல் விகற்பமா...............*
நித்தமு மரணமா நெடிய துன்பமா.................*
மத்தமு நாசமா மவிழ்ந்த பின்மையாற்...............*
பித்தினு நஞ்சினும் பெரிது கள்ளரோ.................(௩)

பாலினைத் தேனையின் பாகை நீத்துவெண் ...... *
மாலியை மாந்துவோர் மலர்க்க ணீத்துமெய்த் ...... *
தோலிர ணந்தனைச் சூதகந் தனைக் ...... *
கோலியுண் டுவக்குமீக் கூட்ட மொப்பரே ...... (௪)

ஓியென விகழ்தரு தேனுண் போர்களை ...... *
நாயெனக் கோவென வாக்கு நாடொறு ...... *
மாயினை மகளையில் லாக்குந் தான்கொண்ட ...... *
சேயிழை யையும்விலை செய்யச் செய்யுமால் ...... (௫)

மலந்தனை யமுதென மாந்தச் செய்திடும் ...... *
அலர்ந்தபூ வெனவன லள்ளச் செய்யும்வெஞ் ...... *
சலந்தரும் பகைவர்கை தனக்குள் ளாக்குநன் ...... *
னலந்தனை யழித்திடு நறவு நெஞ்சமே ...... (௬)

அலருற விசையறும் பரவு தேளொடும் ...... *
பலவிலங் கணுகுறப் படுத்த பாயலின் ...... *
மலசல வாந்தியு மயக்குங் கோடலா ...... *
னிலமதி னாகமா நிதங்கள் ளூண்பர்க்கே ...... (௭)

கொஞ்சமுஞ் சுவையிலை குளத்தைக் கோணியே ...... *
நஞ்செ ன நுகர்வர்மெய் நலிய மூப்புற ...... *
விஞ்சிய வாவறீ வினைகள் யாவுமே ...... *
குஞ்சுகள் கள்ளெனுங் கொடிய பக்கிக்கே ...... (௮)

வேறு.

வறுமையாற் களவுசெய்வர் மையலாற் காமத்தாழ்வர் ...... *
குறுமைசேர் பகையினால்வெங் கொலைசெய்வர் வசையினோடுஞ்
சிறுமைதந் துயிரிருந்துஞ் செத்தவ ராக்கியிம்மை ...... *
மறுமையை யழிக்குங்கள்ளை மாந்தலெப் பயன்வேட்டம்மா (௯)

வேறு.

நரிநாய் பறவை சூழவழி நடுவிற்கிடந்த சவமதனை ...... *
யுரியா ரிலரொன் றிடுகாட்டுக் குடன்கொண்டேகிக் கட்டையில்
வைத், தெரியா நின்றேன் பிணம்விழித் திஃதின்றேன் மயக்கெ
ன் றியப்பி மெய்கொ, ளரியை யவிக்கு முன்ன மெழுந்தயற் க
ட்கடையுட் புகுந்ததுவே ...... (௰)

௰அ-ம்-அதிகாரம்-மது-முற்றுப்பெற்றது.

ஆ௳ அதிகாரம் - ௰அ - இ திருவிருத்தம் - உ௱௫.

௰௯-ம் அதிகாரம்.

சூது.

வித்தமே மிகுமென வெஃகிச் சூதினி ........ *
லத்தமா ரத்தமு மழித்த நீட்டிய ........ *
சித்திர மாதெழி னம்பிச் சேர்ந்ததற் ........ *
பத்தினி தனையகல் பான்மை யொக்குமே ........ (௧)

வையமேன் மானிடர் வாழு நாட்சில ........ *
வையமில் கேள்விதா னளவிலா ருயி ........ *
ருய்யநல் வினைகளை யுஞற்றி டாதுநாள் ........ *
பொய்யமர் சூதினிற் போக்கல் புன்மையே ........ (௨)

ஓதரு விசையொடு மோடு நாளென ........ *
மேதையர் தந்தொழில் விடாது செய்குவர் ........ *
போதுநீட் டித்தெனப் பொறியி லாரதைச் ........ *
சூதெனும் வாள்கொடு துணிக்க நேர்வரோ ........ (௩)

வளமலி நிடதநா டளிக்கு மாண்புசேர் ........ *
நளனையு மலைவுசெய் நாசச் சூதுதான் ........ *
களவுபொய் சினம்பகை காம மியாவையு ........ *
மளவறப் பயிற்றிடு மையன் போலுமே ........ (௪)

கவறினை யாடுவோன் காந்தை வீயினுஞ் ........ *
சவமதிவ் வழிசெலு மென்று தானெழா ........ *
னவள்புனை தாலிபந் தயத்துக் காமென ........ *
வுவகையூத் தாடுவா னுயர்வு ருனரோ ........ (௫)

வேறு.

வட்ட மாதில மீதுமன் னூர்விட ........ *
மிட்ட பாலை யினிதளித் தாலெனக் ........ *
கட்ட மேவுங் கழகத்தில் வென்றுகொ ........ *
ளொட்டங் கையினி லொட்ட மளிக்குமால் ........ (௬)

இவற லேதந் திழிவையுந் தந்துபின் ……… *
றவறி யாவையுந் தந்துநெஞ் சந்தனைக் ……… *
கவற்றன் னேவிக் கலக்கங் கொடுத்தலாற் ……… *
கவறெனும் பெயர் காரண நாமமே ……… (௭)

௰௯-ம் - அதிகாரம் - ஞூது முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௰௯-இத்திருவிருத்தம்-௨௱௰௨.

## உ௰-ம்- அதிகாரம்.

### பரிதானம்.

வலியினு லிலஞ்சங்கொண் மாந்தர்பாற் சென்று ……… *
மெலியவர் வழக்கினை விளம்பல் வாடிய ……… *
வெலிகண்மார்ச் சாலத்தி னிடத்து மாக்கள்வெம் ……… *
புலியிடத் தினுஞ்சரண் புகுத லொக்குமே ……… (௧)

அல்லினிற் களவுசெய் பவரை வெஞ்சிறை ……… *
யில்லிடும் பண்பினுக் கியைந்த மாக்களே ……… *
யெல்லினி லெவரையு மேய்த்து வவ்வலாற் ……… *
கொல்லினும் போதுமோ கொடியர் தம்மையே ……… (௨)

கொலைஞருஞ் சோரருங் கொடிய வஞ்சரு ……… *
நிலைபெற வவர்கையி னிதியைக் கொண்டுதண் ……… *
ணலைகட லுலகிய லழிக்குந் தீயர்பான் ……… *
மலையெனப் பாவமும் பழியு மண்டுமே ……… (௩)

பயிரினை வேலிதான் மேய்ந்த பான்மைபோற் ……… *
செயிருற நீதியைச் சிதைத்தோர் தீயன்சான் ……… *
வயிறினை வளர்த்திட வாங்கு மாநிதி ……… *
வெயிலுறு வெண்ணெய்போல் விளியு முண்மையே ……… (௪)

ஆசையால் வாங்கிடு மவனை யீந்தவர் ……… *
கேசமா மதிப்புரக் கேணன் சென்னிதம் ……… *
மாசன மாக்குவ ரடிமை நானெனச் ……… *
சாசன மவர்க்கவன் றந்த தென்னவே ……… (௫)

காசதி கந்தனைக் கருதி வாதந்தீர்த் ........................ *
தேசுற வேழைகட் கிடர்செய் வோன்றன ........................ *
பீசாங் குறைவுபா ராது மேவிடுந் ........................ *
நாசிய ரினுமிழி தகவுளோ னன்றோ ........................ (சு)

எனதுன தெனவொரு பொருட் கிரண்டுபேர் ........................ *
சினமொடு வாதித்தோர் தீயன்பாற் செலிற் ........................ *
றனதென வப்பொரு டனைக்கொள் வானவர் ........................ *
மனதொரு மித்ததை வகிர்தன் மாண்பரோ ........................ (எ)

பசியினா லெளியனோர் பக விரப்பினும் ........................ *
அசியுறு மெங்கணு மாக்க முள்ளவர் ........................ *
நிசிபகல் பலரிட நிதமு மேற்கின்ற ........................ *
வசையினைச் சொல்லவோர் வாயும் போதுமோ ........................ (அ)

பெற்றவன் கைப்பொருள் பிள்ளைக் கேயலான் ........................ *
மற்றவர்க் கிலையெனன் மனுவி னீதியாங் ........................ *
குற்றமே விடநிதி கோடிபேர் கையிற் ........................ *
பற்றுவோ னவர்க்கெலாம் பாலன் போலுமே ........................ (கூ)

வேறு.

மண்டலீ சன்றன் றண்டனை நரகவ மானந் ........................ *
கண்டபேர்க் கெலாம் பயம்பெரும் பகையொடு கவ்வை ........................ *
பண்ட மிவ்வகை யீட்டவி னனுதினம் பலரை ........................ *
யண்டி மானமாத் தொண்டுசெய் துயிருய லழகே ........................ (ய)

வேறு.

இருவ ரிடத்தும் விவாதநிதிக் கிரட்டி கொள்வார் தகாதென்னி, னருமைசய மென்பார் தோல்வி யடைந்தோன் றந்தநிதி கேட்பின், வெருவ வவன்மேற் பொய்வழக்கை மெய்போற் கற்பித் திடரிழைத்துச், சருவகொள்ளை யடிப்பர் பரிதானம் வாங்கும் பாதகரோ ........................ (யக)

உய-ம் - அதிகாரம் - பரிதானம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-உய-இ திருவிருத்தம்-உாஉங.

## உக-ம்- அதிகாரம்.

### புறங்கூறல்.

சாம்பிண மிடுவனஞ் சாருந் துற்மணம் ............ *
பூம்பொழில் பரிமளம் பொருந்தி நாறிடுந் ............ *
தாம்பழி யுளரலாற் றகுதி யோர்பிறர் ............ *
நோம்படி யவர்குறை நுவலு வார்களோ ............ (௧)

நலத்தின்மிக் கார்சொலார் நயமில் சொல்லையே ............ *
சொலத்தகாப் பழிபிறர் மீது சொல்லுவோன் ............ *
குலத்தினு நலத்தினுங் குறையுளா னெனத் ............ *
தலத்தவன் வாய்மொழி சாட்சி யாகுமே ............ (௨)

உள்ளவங் கணங்கசிந் தோடல்போ லொரு ............ *
கள்ளநெஞ் சினன்புறங் கழற லன்னவ ............ *
னுள்ளமார் புனைவெலா மொழுகி வாய்வழி ............ *
வெள்ளமாய் வழிகின்ற விதத்தை மானுமே ............ (௩)

இன்னலே யேதிலார்க் கிழைக்கு மச்சொலே ............ *
முன்னமெய் யென்னினு முழுப்பொய் போலுமா ............ *
மன்னவர் குறையினை யறிந்து பின்றெனப் ............ *
பன்னுபொய் மெய்யினும் பாடுடைத் தரோ ............ (௪)

### வேறு.

ஆட்சியாமுல கரசன்முன் ............ *
சாட்சிசொல் சமையத்தலான் ............ *
மாட்சியோர் பிறர்மறுவினை ............ *
நீட்சியா நிகழ்த்தார்களே ............ (௫)

மதியிலார் செப்வடுவவர் ............ *
எதிரினின் றியம்பினு ............ *
முதுகினின்று மொழிவரோ ............ *
விதியுணர்ந்த விபுதரோ ............ (௬)

### வேறு.

ஒருவனொருவன் குறையை யுரைத்திடவே யதைக்கேட்டோர் *
பெருகபத்தங் கலந்துபல பேர்க்குரைக்க விவ்வாறே... .... ...*
மருவியெங்கும் பரவுதலான் மண்ணின்முன்னந் தூறுமவன் *
குருநோயொப்பா னவனைக்கோ ளூர்விட்டகற்ற னன்றே . (௭)

௨௧-ம்-அதிகாரம்- புறங்கூறல் முற்றுப்பெற்றது.
ஆகூ அதிகாரம்- ௨௧- இ திருவிருத்தம்- ௨௱௩௰.

## ௨௨-ம்-அதிகாரம்.

### பெரியோரைத்தூறல்.

அரியகுணஞ்சேர்பெரியர்தமக்கமையக்கடல்சூழ்புவனபெங்கும்
விரியுமிசைமா சுறவவர்மேல் விளம்பும் பொய்ச்சொ லண்டமி
திரியும்பானுக் கிரணமதைத் திரட்டிப்பற்றி யதன்மீது [சை
கரியைப்பூச வேண்டுமெனக் கருதுந்தன்மை பொருவுமால் (௧)

காற்றினெதிரே நின்றொருவன் காறியுமிழுமச்சிட்ட...... .....*
மாற்றியவன்மேல் வந்துவிழும் வாறுபோலித் தாரணியிற் .... *
றேற்றியொழியும் வாழ்வதனைத் துறந்தமேலோர் மீதொருவன்
றூற்றிக்கூறும் வசைச்சொற்கள் சொன்னோன் மீதேதோயுமால்

### வேறு.

கடலனலுற் றெரிந்ததென்றுங் கதிர்குளிர்நோ யுற்றதென்றுந்*
தடவரையே சாய்ந்ததென்றுஞ் சாற்றுமொழி நப்புவரார் .... *
திடமுடைய சான்றோர்மேற் செப்புமவ தூறதனைப் ........ *
புடவிமிசை வாழறிஞர் பொய்யெனவே தள்ளுவரால்..... ...(௩)

வாய்கைக்கு நோயினர்க்கே மாமதுவுங் கைப்பாகுங்..... ......... *
காய்வெயிலு மஞ்சணிறங் காமாலைக் கண்ணருக்கே........ .... *
சாய்நிழலுஞ் சுடுவெயிலாந் தாபச்சுரத்தினர்க்கே ........... *
தீயவர்க்குத் தூயவருந் தீயவர்போற் றோன்றுவரோ,......... (௪)

கஞ்சனத்திற் றம்முகமே காணுவது போற்கயவர் ……………… *
றஞ்செயினைப் பிறர்செயிர்போற் றுமெண்ணித் தூறுவரோர் *
வஞ்சகனை நம்பியொரு மாசிலா னின்னலொடு ……………… *
மெஞ்சலுறு வண்ணமவ னிழிவுணர்த்தன் முறையாமே…… (ரு)

உஉ-ம் அதிகாரம் - பெரியோரைத்தூறல் முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம்- உஉ-இ திருவிருத்தம்-உ௱ாகரு.

## உங-ம்-அதிகாரம்.

## உலோபம்.

பொன்னினைப் புதைத்திடப் புவியைத் தோண்டுவோன் ……… *
றன்னிடந் தொட்டமண் டனையிழுத்தலா ……………… *
வுன்னுடை யதுநிதி யுலகமே யிம்ம ……………… *
னென்னுடை யதுவென வியம்ப லொக்குமே……………(க)

பொன்னைமா நிலத்தில்யான் புதைக்கு மேல்லவையி……………*
னன்னையே யனையபா ரருளி னேக்கிநற் ……………… *
சொன்னமென் வாயிடைச் சொரியு முன்றன்வாய்க்…………… *
கென்னையே யிடுவனென் றிசைத்திட் டாளரோ……………(உ)

பொலிவளந் தங்கிய புவியிற் றுனுண்டும் ……………… *
பலிபிறர்க் கிட்டுமே பயன்றுவ் வான்பொருள் ……………… *
வலியிலாப் பேடிகை வாள் கொலாமெனை ……………… *
அலியினை மேவிய வாம்பை யேகொலோ……………(ங)

நித்திய மனுபவி யாது நீணிதி ……………… *
பத்திரஞ் செய்குவோன் பாரந் தாங்குவூர் ……………… *
மத்தியிற் புதைத்தகன் மாசி றாசர்க்கு ……………… *
வத்திரஞ் சுமக்கும்வா லேப மொப்பனே ……………(ச)

செல்லவோர் போக்கின்றிச் செறிந்த நீர்கண ...... *
வில்லமே யழித்தெழுந் தேகல் போற்செல ...... *
வில்லையென் றடைத்தபொன் னொழுந்து தன்னைக்கொள் ...... *
புல்லனாக் குடிகெடுத் தகன்று போகுமே ...... (௫)

வேம்புதே னீயுமோ வெயிறண் ணுகுமோ ...... *
பாம்பமு தளிக்குமோ பரிவில் பூரியர் ...... *
தாம்பொதி யாளெனத் தாங்கும் பொன்னினைத் ...... *
தேம்புமா துலர்க்குளஞ் சிறந்த தளிப்பரோ ...... (௬)

ஈகையில் லாதுபொன் னீட்டுவோன் கொண்ட ...... *
தோகையு மைந்தருந் தொலை கிலரென ...... *
வோகையா யருவிட முணவி லிட்டவன் ...... *
சாகையே கருதிமா தவஞ்செய் வார்களே ...... (௭)

வேறு.

அனுபவ மொன்றேபொன்னா லாயநற் பயனஃதின்றேற் ...... *
புனலிலாத்தடத்தைப்பெய்யாப்புயலினைப்பொருவுமப்பொன் *
றினமுமே நுகர்தலின்றித் தீனர்க்கும் வழங்க லின்றித் ...... *
தனமதைக் காத்தனச்சுத் தருவினைக் காத்தல் போலாம் ...... (௮)

வேறு.

மெலியு மேழைக் கிடர்மல் விளைபொன்னை ...... *
மலியுஞ் செல்வர்க்கு வாரி வழங்குத ...... *
னலியிலார்க் கருணன் மருந்தும் பெரு ...... *
கொலிகடற் பெய்யுறை யையு மொக்குமே ...... (௯)

வனவிலங்கும் விண் வாழ்பக்கி யுந்தந்த ...... *
மினமோடன்றி யெடாதிரை யேழைகட் ...... *
கண மிடாதுதம் மாகம தொன்றையே ...... *
மன மூவந்து வளர்ப்பர் கயவரே ...... (௰)

வேறு.

தானத்தனி சிந்தாதுப்பர் தருவைச்சிலை கழியா ...... *
ஞானப்பட மோதிப்பழ முதிர்ப்பாரென வுலகிற் ...... *
றீனர்க்குவ ழங்கா துறை தீயன்பசி யுளரான் ...... *
மானத்தை யிழந்தேபொருள் வவ்வப் படுவானே ...... (௰௧)

சாங்காலையோர் பிசினன்பொரு டானஞ்செய வுன்னித்...... *
தேங்கான்மொழி மனைமைந்தரை விளித்தானவர் தெரிந்தே.... *
யாங்காயவ னானாயாவித மவன்மேல்விழுந் தழுதார்.... .... ... *
தாங்காதவ னுயிர்தீர்ந்தனன் றனம்போற்பகையுளதோ.. (௰௨)

௨௩-ம்-அதிகாரம்-உலோபம் முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம்-௨௩- இ திருவிருத்தம்-௨௱௪௭.

௨௪-ம்-அதிகாரம்.

## சோம்பல்.

சிற்றெறும் பாதியாச் சீவ கோடிகண் .............. .............. *
முற்றுமெய் யுழைத்துயிர் முறையிற் காக்குமால்........ ....... *
சற்றுமெய் யசைவிலாச் சழக்க ராருயி.... .................... .. *
ரற்றவோர் சவங்கொன்மற் றசர மேகொலோ .................. (௧)

விடக்குறுஞ் சடம்பல வேலைசெய் தற்கா .............. . *
நடக்கவு மோடவு நனியுறுப் புகண்.............................. *
மடக்கவு நீட்டவும் வாய்ந்ததாற் சும்மா..... ............... ... .... *
கிடக்குமெய்ச் சோம்புளோர் கேடுளார்களே ......... ..... ... (௨)

தெளிவுற நூல்பல தினமும் வாசித்து.............................. *
மிளிருடல் வருந்தியும் வெறுக்கை யீட்டிநற்..... ... .......... *
கிளிமொழி மனைவியைக் கிளைஞரைப் பல........ ......... ..... *
வெளியரைத் தாங்குவோர்க் கில்லை மந்தமே ............... ..(௩)

வேறு.

மடிசேரு மவர்க்கொரு நாளுமறல்.......................... ..... ..... *
விடியாதவர் நெஞ்சிடை வெந்துயரோ .......... .... ......... .... *
குடியாகு மறந்தொடர் குற்றமெலா......................... ........ *
நெடிதாக வளர்ந்திடு நிச்சயமே.... .......................... ......... (௪)

வேறு.

பூசெல்லாமாள் வேந்தருநூறோர் பண்போருஞ்......... *
சீரெல்லாஞ்சூழ் செல்வருமந்தஞ் சேராரோ ........ *
நேரில்லாமா பாதகர்தீனர் நெடுஞ்சோர.......... *
மூரெல்லாஞ்செய் துப்பவர்மா சோம்புடையாரால்........(௫)

எய்யாவம்பே வல்விசைமாறி யிறுமென்று ........ *
மொய்பாவிரத மாழியொடுங்கெட் டொழியுந்தம் ........ *
மெய்யானதுவே வியர்வையுறப்பல் வினைகையாற் ........ *
செய்யாதவமா நோய்பலவுற்றுத் தேய்வாரே..........(௬)

௨௪ -ம் - அதிகாரம் - சோம்பல்முற்றுப்பெற்றது.
ஆ அதிகாரம்-௨௪-இ திருவிருத்தம்-௨௱௫௫.

௨௫ -ம்- அதிகாரம்.

சினம்.

வலியனைச்சினப்பொர் வனையினின்மோ[illegible]மட்கலமெனவுடைந் தழிவார், பொலிவுறத்தமையொப் பவர்களைச்சினப்போர் புலியிரண் டொன்றையொன்றடித்து,மெலிவொடுமிரண்டுங் கெடுவபோற்கெடுவார் மெலியனை வெகுளுவோர்வேங்கை, யெலியினையெதிர்த்த தன்மைபோலிழிவுற் றெரிநரகிடையமிழ்ந் துவரே.

வேறு.

எம்மையுந்தெரி யாமலிச் சினம்வந்த தென்பீ........ *
ரும்மைநோய்செயும் வலியனை வெகுண்டிடா தொளிப்பி ........ *
ரிம்மைவாழ்விலா வெளியர்பாற் சினமுமக் செய்தும்........ *
வெம்மைநீரறிந் தோவறி யாமலோ விளம்பீர்..........(௨)

கண்சிவந்திட மெய்யெலா நடுங்கிடக் காலான் ........ *
மண்சிதைந்திட வுதைத்துநாக் கடித்திதழ் மடக்கி ........ *
பெண்சிதைந்திடச் சினங்கொள்வீர் நும்மெயோ டிதயம்........ *
புண்சுமந்தத லாற்பிறர்க் கென்குறை புகல்வீர்..........(௩)

கோடவாண்முகஞ் சுழித்திதழ் மடித்தெழில் குலையச் *
சேடன்மீதியான் சினமுற்ற பொழுதெதிர் திகழும் *
ஆடிநோக்கயா னியான்கொன்மற் றூர்கொலென் றயிர்த்துத் *
தேடிநோக்கவோர் குருபமே கண்டிளந் திகைத்தேன் (௪)

சினமுளோன்மனை மைந்தர்க ளவன்வெளிச் செல்லுந் *
தினமெலாந்திரு விழவுகொண் டாடுவர் செல்லா *
தினையன்றங்குறா ளிழவுகொண் டாடுவ ரிறப்பின் *
மனையிலோர்பெரு மணவிழா வந்தென மகிழ்வார் (௫)

நாளுநாங்கொளுந் துயர்க்கெலாங் காரண நாடின் *
மூளுஞ்சீற்றத்தின் விளைவதா முனிவக முடையோர் *
தேளும்பாம்பும்வெஞ் சினவிலங் கினங்களு நனிவாழ்ந் *
தாளுங்கானில்வாழ் பவரெனத் தினமளு ரடைவார் (௬)

தழையுஞ்செல்வத்துட் பிறந்துநல் லோரவை சார்ந்து *
பிழையினூலெலா முணர்ந்துநீ வைகலும் பிழைத்தா *
யிழைபுந்தீனராய்ப் பிறந்துகற் றிடவகை யில்லா *
வுழையர்செய்பிழைக் காமுனிந் தனையிதென் னுளமே (௭)

வேறு.

பைதலே யெய்தலாதிப் பரன்செய லாமப்பைதல் *
செய்தவர் தமை[illegible]னைத்தல் சினவரா தன்மேற்கல்லைப் *
பெய்தவன் றனைவிட்டக்கல் பிளந்திடப் பொரலுங்கையா *
லெய்தவன் றனைவிட்டம்பை முனிதலு மேய்க்குமாலோ (௮)

௨௫-ம்-அதிகாரம்-சினம் முற்றுப்பெற்றது,
ஆக அதிகாரம்-௨௫-ற்கு திருவிருத்தம்-௨௱௬௧.

௨௬-ம்-அதிகாரம்.

## பொறுமை.

மாங்கனி வாயிற்கவ்வி மரத்திடை யிருக்குமந்தி *
பாங்கர்நீர் நிழலைவேறோர் பழமுணுங் குரங்கென்றெண்ணித் *
தாங்கரு மவாவிற்றாவிச் சலத்திடை யிறந்ததொப்ப *
நீங்கரும் பொறுமையுள்ளோர் நிலத்திடைக் கெடுவர்நெஞ்சே (

## வேறு.

தாரணியி லெவரேனுந் துயருறிற்றன் றலையின்முடி தரித்
திதொட்பாஞ், சீரணியுஞ் செல்வமவர் படைக்கிற்றன் றுய்மனை
சேப்செத்தொட்பாங், காரணமே யொன்றுமின்றிச் சுகதுக்கந்
தன்வலியாற் கணத்துக்குள்ளே, பூரணமா வாக்கிடுவோன் பொ
ருமையுளோ னன்றியெவர் புவியின்கண்ணே..... ..... ..... (௨)

வவ்விடலேழுதலாய வினையாலெலாவ் வோர்பயன்கை வந்து
கூடு, மவ்வினைக ளியற்றவெவ்வே றிடங்கருவி சமயமும்வந்
துமையவேண்டு, மெவ்விடத்து மெப்பொழுது மொழியாம
லெரியென்ன விதயந்தன்னைக், கவ்வியுண்ணு மௌவியத்தாற்
கடுகளவும் பயனுளதோ கருதுங்காலே.......... .............. (௩)

## வேறு.

ஆண்டெலாம் பிற ராக்க நோக்கியே..................... *
மீண்டு மீண்டுநெட் டுயிர்ப்பு வீங்கினுந்..... ..... ..... ...... *
தாண்டி யவர்தனந் தவழ்ந்துன் கைமிசை..................... *
மீண்டு சேருமோ விதயமே சொலாய்............ .......... (௪)

மக்கள் பலருளார் மகி விசாலமாம்.... ..................... *
பக்க மவர்தினம் படைப்ப ரோர்நல.......... ..... ....... *
மொக்க வதுபொரு துள்ள நைந்திடிற் ............... ...... *
றுக்க மோயுமோ சொல்லெ னெஞ்சமே.................. (௫)

நிறையு நீர்க்கசை வில்லை நீணிலத் .......................... *
தறையுங் கல்வியி லறிவின் மேன்மையிற் ............... *
குறையு ளார்க்கலாற் கோதின் மாண்பின்றிக் ... .... ........ *
கிறையு மவ்விய மில்லை யில்லையே.... ........................ (௬

அறமுளார் கள்போ லறிஞர் போற்புகழ்....................... *
பெற வருந்துதல் பெருமை யாயினும் ....... ..... ........ *
புறமுளார் கள்போற் பொருளி லேமென.... ............... *
வுறுமவ் வுறுகணே யுறுக ணீயுமே ..... .. ... ..... (௭)

வேறு.

பூட்டுமரி கண்டம் புனைந்தழுங்கு வார்போலுந் ........... ........... *
தோட்டியினைத் தானே சுமந்துகெடுங் கயம்போலும் ........... *
வாட்டுந் துபர்கள்புல வையமிசை யிருக்கக் .... ..... ......... ..... *
கோட்டமுளோர் வேறு குலந்தமக்குண் டாக்குவரோ..... .....(அ)

உசு-ம்-அதிகாரம்-பொறுமை முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-உசு-இ திருவிருத்தம்-உ௱சுசு.

உஎ-ம்-அதிகாரம்.

வித்தியாகர்வம்.

என்னநீவருந் திக்கவிபாடினு மெடுத்தகற் பனைமுன்னோர் .... *
சொன்னதேயலா லூதனமொன்றிலைத் தொன்மைநூல் பலவாகு
முன்னந் நூலெலாந் தந்தவனீயலை முற்றுணர்ந்தனையல்லை .... *
புன்னின்மிக்கவர் பலருளர்கல்வியா லுள்ளமேசெருக் கென்னே

வேறு.

பருத்திவிதைத் தெடுத்து நூ லாக்கியாடை பண்ணியளித் தாலுடுத்தல் பாரமாமோ, திருத்திமண்ணிற் செந்நெல்விதைத் தரிசியாக்கித் திஞ்சோறட் டூட்டிலுண்ணச் செவ்வாய் நோமோ, அருத்தமொடு மிலக்கணங்க ளிலக்கியங்க ளரியநூல் பலமுன் னோரளித்ததாலே, கருத்தேயந் நூல்கள்சில கற்றுணர்ந்து கவி சொல்லல் வியப்பன்று கர்வ மென்னே......... .......... ...... (உ)

வேறு.

இயலொடு தமிழ்மூன்று மெள்ளளவுந் தேரா.... ..... ......... *
யயர்வறு கலைஞான மறுபத்தி னொடுநான்கும் ........ ..... ..... *
பயனொடு தெரிவாரோ பலருள ரவர்முன்னீ ..................... .. *
வெயிலின்மு னிடுதீப மின்மினி யாநெஞ்சே......................(ங)

உஎ-ம்-அதிகாரம்-வித்தியாகர்வம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-உஎ-இ திருவிருத்தம்-உ௱எஉ.

## ௨௮-ம்- அதிகாரம்.

## அழகாற் செருக்கல்.

எழிலுளேமெனச் செருக்குறு நெஞ்சமே யிழைதுகி லீத்தங்கந்
கழுவிடாதுற நோக்குதிமுகந்தனைக் கஞ்சனந் தனிலேநோக்கி.... *
னெழுநிலத்திடை யுன்னின்மிக் காருள ரெனவறிவாயிமைத் ......*
தழியும்வெண்டலை யுன்றலைபோலிருந் தவனுற்ற தறிவாயே .(௧)

வேறு.

தோற்பேர்வை துறந்திறந்து கிடந்தவழ கியைக்காணச்
சுடலைசென்றோங், கோற்போன்ற வெள்ளென்பின் குவையொன்
றே கண்டனஞ்செங் குமுதவாயு, நூற்போன்ற விடையுமன ந
டையுமணி தனமுழுதி நுதலும்வாய்ந்த, சேற்போன்ற விழியும்
பான் மொழியுங்கா ணுமலுளந் திகைத்தோமன்னே ........(௨)

நோக்கதனிற் பீளையிரு செவிகளிலுங் குறும்பியன நுகர்
வாயெச்சின், மூக்கதனிற் சளிதலையிற் பேன்வெயர்வை மலசலங்
கண் மூளுநாற்றம், போக்கவொரு நாட்கழுவா விடிலழுக்கு மி
கத்திரண்டு புழுத்துநாறும், ஆக்கமிலாத் தேகமிதை யழகென்
னச்செருக்கலறி யாமையாமே.................(௩)

வேறு.

கட்புலன்றனையே கவர்ந்திடு கவினுளே மெனவனுதினம்.... *
பெட்புறப்புவியிற் செருக்குதல் பெருமையன் றெளிர்பேருட
லுட்புறத்தினையே திருப்பிடி லோங்கலா மலக்காடுசூழ்..... .... *
மட்புறச்சுவர் தீட்டுசித் திரமானுநம் மெழினெஞ்சமே......(௪)

வேறு.

மண்ணிற்செய் பாவைமீது வயங்குபொற் பூச்சோதண்பூங் ... *
கண்ணிய மாற்றிற்சூடுங் காட்சியோ பழம்பாண்டத்திற் ..... *
பண்ணிய கோலமோநற் பண்பொடு ஞானங்கல்வி..... .... . .... *
புண்ணிய மேதுமில்லான் பூண்டபே ரொழிலுடம்பே......(௫)

௨௮-ம்-அதிகாரம்-அழகாற்செருக்கல் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் - ௨௮- இ திருவிருத்தம் - ௨௱௭௭.

உகூ-ம்- அதிகாரம்.

## செல்வச்செருக்கு.

மணிகள்பல வகைக்கல்லாம் பொன்முதலு லோகமின்னு
மண்ணுங்கட்டி, துணிபட்டாடைகள்பருத்தி நூல்பூச்சிக் குடர்
நாயின் ரோமுரோம, மணிபுழுகு கத்தூரி முதலியபூ லையின்ம
லம்பா லாவிரத்தந், தணி பிறேன் வண்டெச்சி லிவைசெல்வ மெ
னச்செருக்க றகுமோநெஞ்சே............................ (க)

செங்கல்வெண்கல் கருங்கல்லை நவமணிக ளெனச்செல்வர்
சேர்ப்பார்யாமுஞ், செங்கல்வெண்கல் கருங்கல்லைச் சேர்த்திட்
டோ மிருவர்கல்லுஞ் சீர் தூக்குங்கா; லங்கல்லே யிடையதிக மெ
ங்க ளுமுண் டெதிர்ப்போர்ணா நாசஞ்செப்பும், பங்கமுறச் செல்
வர்நம்மின் மிக்கோரென் றகங்கரிக்கும் மான்மையென்னே (உ)

### வேறு.

இடையிற்கோர் வண்முமின்றி யிங்குதித்தோர் மவ்வாறே ........ *
கடையினில் வெறுங்கையோடுங் கழிகுவ நடுவிற்சேரு.......... *
முடைமையாற்பெருமையென்றேவூர்க்கெலாம்பொதிசுமக்கும்
விடைதருக் குற்றதென்ன வீண்செருக் குற்றாய்நெஞ்சே.. (௩)

சுழல்சக் டக்காற்போலுந் தோன்றியே யழிமின்போலு......... *
மழன்மன வேசைபோலு மருநிதி மேவிநீங்கும்............. *
பழமைபோ லதனைநம்பிப் பழியுறச் செருக்கன்மேக ........ *
நிழலினை நம்பிக்கைக்கொ ணெடுங்குடை நீத்தலொப்பே.... (ச)

### வேறு.

தரித்திரந் தரித்திர மென்னுந் தாரணி........................ *
சிரித்திடச் செல்வமே செல்வ மென்னுமிச்........................ *
சரித்திர முணர்ந்துமே தரையிற் பொன்னெமக்.................. *
குரித்தெனச் செருக்குத லூரனன் றுள்ளமே .....................(ரு)

நாசமாங் காலமே நண்ணு முன்னிற............................... *
நேசலுக் கெய்தலு மிரியு முன்னமே............................... *
தேசது மிருத்தொளிர் தீபம் போலவு............................. *
நீசர்தஞ் செருக்கினு னிதி யிழப்பரோ............................ (சா)

வேறு.

செழித்திடு நாளினிற் செருக் குற்றுய்.......... *
கழித் துனைமா நிதிகை நீங்கிற் .......... *
பழித்திடு முலகின் முன்பரி வின்றி .......... *
விழித்திட லெப்படி வினை நெஞ்சே .......... (எ)

௨௯-ம்-அதிகாரம்-செல்வச்செருக்குமூற்றுப்பெற்றது.

ஆஆ அதிகாரம்-௨௯-இ திருவிருத்தம்-௨௱அ௪.

௩௰-ம்-அதிகாரம்.

## தீயவர்ச்சேராமை.

செழுமல ரிடைமது சிறையளி நுகரு .......... *
முழுவிட மதுபெறு முனிவுடை யரவம் .......... *
பழுதறு மறநிலை பயிலுவர் சிலரோ .......... *
வழுவய லவரிட மருவுவர் பலரோ .......... (௧)

வேறு.

மணமலி சேர்மண மாலை மாண்புறும் .......... *
பிணவனத் தாரிழி வெய்தும் பெற்றியார் .......... *
கணமதிற் சேர்ந்தவர் கனங்கொண் டோங்குவர் .......... *
குணமிலா ரினமுறல் குறையுண் டாக்குமே .......... (௨)

மண்ணியல் பாற்குண மாறுந் தண்புனல் .......... *
கண்ணிய பொருண்மணங் கலந்து வீசுங்கால் .......... *
புண்ணிய ராதலும் புல்ல ராதலு .......... *
நண்ணினத் தியல்பென நவில லுண்மையே .......... (௩)

பாரினிற் பிறந்தபோ தெவரும் பண்பினர் .......... *
பூரிய ரெனப்பெயர் பூண்ட தில்லையால் .......... *
சீரிய ரென்னலுந் தீய ரென்னலுஞ் .......... *
சேரினத் தியல்பினாற் சேர்ந்த நாமமே .......... (௪)

கயவரைச் சேர்ந்தவன் கலந்த போதவர் ..... ....... ..... ...... *
செயலினை யெள்ளுவன் றினஞ் செலச்செல... .... ......... *
மயன்மிகுந் தவர்செயன் மகிழ்ந் தனுட்டிப்ப... .... .... ...*
ணியவரைச் சேர்தல்போ லிலைத் தீமையே .... ..... ..... .......(௫)

௩௰-ம்- அதிகாரம்-தீயரைச்சேராமை முற்றுப்பெற்றது.

ஆ. அதிகாரம்-௩௰-க்கு திருவிருத்தம் - ௨௱௮௯.

௩௧-ம்-அதிகாரம்.

## பிழைபொறுத்தல்.

எப்பிழையா னீபிறரைச் சினந்தவர்க்கின் னைசெய்ய வெண்
ணிளுயோ, வப்பிழைநீ செய்திலையோ வுன்னைப்போ லவர்பிழை
க்க லாகாதோமா, வெட்பமுற நாணிலையோ நீயோருவன் பிழை
செய்ய விண்வேந்தன்கை, யொப்பமுட னதிகாரம் பெற்றனை
யோ மனமேநீ யுரைசெய்வாயே.... .... ..... ... .... .... ....(௧)

பிழையிலான் கடவுளன்றி மக்களிற்றப் பில்லாதார் பிறரு
முண்டோ, மழையினுமே யசனியுண்டு மதிக்குமோர் மறுவுண்
டு மலர்க்குமுள்ளாங், கழையினுமே சக்கையுண்டு கனியினுந்
தோல் கொட்டையுண்டு கதிக்குங்காம, விழைவினன் மறம்புரித
னரர்க்கியல்பா தலினவரை வெறுக்கொண்ணுதே... ........ . .(௨)

நாவையே கடித்ததெனப் பற்றகர்க்கும் பேருளரோ நடக்
கும்வேளை, பூவையே 'பொருவுகழல் சருக்கியதென் றதைக்களை
வோர் புவியிலுண்டோ, காவைபா ருலகமெனும் பேருடலி ன
வயவம்போற் கலந்தசீவர், தாவையே செய்யினுமிக் கீறிவுடை
யோர் கமைசெய்த றகுதியாமால் ... ..... ..... .... ... ......(௩)

உனையொருவ ரிகழ்ந்தனரோ லேதுக்கா விகழ்ந்தனரொன்
றுன்னியுன்பாற், றினையளவு தட்பளதே லதைநீக்காய் தட்பின்றே
ற் சினமுறுதே; கனைகழையை வேம்பென்னிற் கழைக்குமோர்
குறையுண்டோ கல்லின்மோதித், தனையுடைப்போர்க் குணவுதரு
ந் தேங்காய்போ லெவர்க்குநன்மை தனைச்செய்நெஞ்சே......(௪)

தீதொருவர் செய்தனரொன் றதற்கெதிராய் நீயவர்க்கோர்
றீங்குசெய்யிற், சாதுநீ யவர்திய ரொன்பதற்குச் சரியென் னசக்கி
லாதா,ரோதவிட முண்ணின்விழி யுடையாரு முண்ணுவரோ வுல
ப்பில் செந்நெல், சேதமுற வவைத்தடுவோர்க் குணவாதல் போ
னலமே செய்வாய்நெஞ்சே.... ....... ........ ..... .... .... .... (௫)

நல்லவர்தீ யவரொன்று தெவனாயுமே புவிதாங்கு நனிநீர்ந
ல்குந், செல்லருண னொளிபரப்புங் கால்வீசு மந்தரமுன் சேரு
மொப்பொன், றில்லாதான் றீயவர்க்கா விரங்கிமனு வேடமுற்று
னெனிலன்னார்பாற், செல்லாதுன் சினமனமே பொறுமையே
பெருமையன்றோ செப்புங்காலே... ..... ..... ........ ..... .... (௬)

இன்னலெமக் கிழைத்ததனால் வீடிழந்து நரகாழ்வா ரென
நினைந்து, பன்னரிய பெரியர்பிழை பொறுப்பர்பொறார் தப்பி
ழைபைப் பரமனுற்றுன், முன்னொருவன் செய்தனனென் றவ
னுக்குச் செயுமிடரம் முறையிலான்சேய், பன்னிதமனாயுஞ்சே
ரு மவர்நமக்கெப் பிழைசெய்தார் பகராய்நெஞ்சே............(௭)

௩௧-ம்-அதிகாரம்-பிழைபொறுத்தல் முற்றுப்பெற்றது.

ஆகூ அதிகாரம்- ௩௧- இ திருவிருத்தம்-௨௱௧௬.

௩௨-ம்-அதிகாரம்.

## இனியசொற்கூறல்.

வட்டவுல கெட்டுமிசை மட்டற நிரப்பும்........ ... . . ...... .... . *
வெட்டவரு திட்டனை விலக்கிவச மாக்கு.... ........ .............. *
நட்டமில வெட்டனையு நட்டுநர ரொல்லா . ..... ........ ...... *
மிட்டமுறு கட்டுதவு மின்மொழிய தன்றோ.................. (௧)

இக்குவல யக்கனிழி வுக்கிடம தாகும். . ..... . . .......... ....... *
பக்கரொடு மக்கள்பகை புக்கவழி பண்ணுந்... .... .... . ........ *
துக்கமும் விளக்குமொரு துக்கமும் விளக்குங் ........ ...... *
குக்கனை நிகர்க்குமவர் கக்குமிழி கூற்றே .................. (௨)

சந்தநிறை செப்பிறைவை சாணமுள தென்னக் ........ *
கந்தம தேவர்க்குநனி காட்டிவிடல் போலு ........ *
நிந்தனையு ளாரினிய நீர்மையின ரென்ன ........ *
முந்தவவர் வாய்மொழி மொழிந்துவிடு மன்றே ........ (௩)

நன்மைபுரி யார்களு நயந்தவிர் கொடுஞ்சொல் ........ *
லின்மையெனி னலலவ ரெனப்புகழ் படைப்பார் ........ *
தின்மைபுரி யார்களும் வழங்குமுனா தீதேற் ........ *
புன்மைபுறு தியரென வெள்ளுமுயர் பூவே ........ (௪)

வன்மொழி யுரைக்கினெதிர் வன்மொழி கிடைக்கு ........ *
மின்மொழி யுரைக்கின்வரு மின்மொழி யெமக்கு ........ *
நன்மொழிக ளேபல விருக்கநவி லாமற் ........ *
புன்மொழி யுரைப்பவர்கள் பூரியர்க ளன்றே ........ (௫)

௯௨-ம்-அதிகாரம்-இனியசொற்கூறல்முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௯௨-க்கு திருவிருத்தம்-௪௱௬௰.

௯௩-ம்-அதிகாரம்.

## பிறர்க்குத்தீங்குசெய்யாமை.

விடதரம் பற்றிவே றொருவன் மேல்விடு ........ *
மடலுளோன் றன்னைமுன் னது கடித்தல்போ ........ *
லிடர்பிறர்க் கிழைத்திடு மியவன் றன்னைமுன் ........ *
மிடலொடு மவ்விடர் மேவிச் சாடுமே ........ (௧)

படியின்மா னிடர்மிகு பண்பு ளோரலாக் ........ *
கொடியனா நரரெனக் கூறல் பாலலா ........ *
மிடியெனக் கொலைத்தொழி லியற்றுந் தீவெடிற் ........ *
பொடியினை மருந்தெனப் புகல லொக்குமே ........ (௨)

உரவுநீர்க் கருங்கட லுடுத்த பார்மிசைப் ........ *
பரர்வருந் திடவிடர் பண்ணுவோன் றனை ........ *
நரரெலாம் பகைசெய்வர் தன்னு மாயிர ........ *
மரவுசூழ்ந் தின்றவோர் தேனை யாவனே ........ (௩)

வேறு.

கயலிற் பாய்சிரல் கால்சிக்கிக் கொண்டெழ............... *
வயமிலா துயிர்மாய் கின்ற தன்மைபோ............... *
லயலவர்க் கழி வாகயோ ரந்தரஞ்............... *
செயநினைத் தவர்க்கே வந்து சேருமே............... (௪)

வேறு.

புயகமதைத் தேள்புலியைப் பொல்லாத விலங்கையெலா....... *
மயர்வாக வடித்தோட்ட லவைகள்குணத் தாலன்றே........... *
வியல்பின்றி யெந்நாளு மேதிலார்க் கிடரிழைக்குங்........... *
கயவனையே வைதடித்துக் காறோட்ட னன்றாமே............... (௫)

ருரு-ம்-அதிகாரம்-பிறர்க்குத்தீங்குசெய்யாமை
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் - ருரு - இ திருவிருத்தம் - ருாசு.

ருசு - ம் - அதிகாரம்.

## நெடுந்துயில்.

விடியலிற்பறவை யிருசம்பாவுமுன் விழித்தெழுந்துபல வினைசெயுங், கடிமலர்ப்பொழில்கண் மலருமார்வமொடு கடலெழுந்துசனா தாவிடும், படியின்மன்னுயி ரெலாமெழுந்துதொழில் பலவியற்றிட வெழாமலே, தடியெனத்துயிலு வோனரன் கொலெரு தாவரங்கொலறியேமரோ............... (௧)

வேறு.

தங்கருமங்கள் செய்யத் தனிப்பகல் போதாதென்ன............... *
விங்கறி வுடையோர் தூங்கா ரிரவினு மூடர் துஞ்சல்............... *
கங்குலும் போதாதென்னப் பகலுங்கண் படுவர்யாவும்............... *
புங்கமாத் தேர்ந்த்வேறோர் புரையிலார் போலுமாதோ...... (௨)

வானுலா மருணனென்னு மக்களாயுளின்க ணக்கன்..... ........*
றூனெழு முன்னெழாணாச் சகத்திரக் கரத்தாற்றட்டு........ .... *
மேவினன வெழார்வாழ்நாளை யெண்குறைத் தெழுதிக்கொள்வா
னது கண்டுகால னவரிட மணுகுவானே.... ...... .... ....... (௫)

௯௪-ம்-அதிகாரம்-நெடுநித்துயில்முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம்-௯௪-இ திருவிருத்தம்-௯௱௪௰.

௯௫-ம்-அதிகாரம்.

## பேருண்டி.

நனிநிழல் புனல்கொள் பைங்கூழ் நாசமா மிகவேயுண்ணு..... *
மினியமா மருந்து நஞ்சா மின்பமு மிகிற்றுன் பாகும்.. .... *
பனிபிணி மடமை மந்தம் பழியெலாம் வம்மி னென்னக் ...... *
கனிவொடு மழைக்குந் தூதாங் கழியபே ருண்டிமாதோ.....(௧)

௯௫-ம்-அதிகாரம்-பேருண்டி முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம்-௯௫-இ திருவிருத்தம்-௯௱௫௰

௯௬-ம்-அதிகாரம்.

## தற்புகழல்.

சடமதைக் கழுவவுன்னிச் சகதியிற் றேய்தல் போலுஞ்......*
சுடரினைத் தூண்டவேண்டி யூதியே தொலைத்தல் போலு..... ...*
மடமையாற் றன்னைத் தானே புகழுவோன் வசைகளெல்லாம். *
புடவியே யெடுத் துரைக்கப் பூணுவ னிந்தையம்மா,....... (௧)

வேறு.

தற்புகழ் வோன்றனைப் பழிக்குந் தாரணி ... ....... ... ..... ....... *
சொற்புகழ் விரும்பிடான் றனைத் துதித்திடு. .. .... ......... ... *
நற்புகழ் பெறுவழி நன் னடக்கையோ ............................ *
டற்பமுந் தற்புக ழாமை யாகுமே ................................ (௨)

௫௬ - ம் - அதிகாரம் - தற்புகழல் முற்றுப்பெற்றது.
ஆகஅதிகாரம் - ௫௬ இ திருவிருத்தம் ௫௱௰௨

௫௭ - ம் - அதிகாரம்.

## புகழு மிகழு மதியாமை.

தன்றுணை யிலானேயுள்ளத் தன்மையை யறிவான்பூமி ........ *
யின்றொரு வனைத்துதிக்கு மேசிடு மவனைப்பின்னு .... ......... *
நன்றினைத் தீதென்றன்னுந் தீதைநன் றென்னவுன்னும்..... ..*
பொன்றுமா னிடர்புகழ்ச்சி புனலின்மே லெழுத்துக்கொப்பே

வசையுமீக் கூற்றுமற்றோர் வாய்வரு வாயுவல்லாற் ............... *
பசையுள தோவக்காற்றைப் பாரிலோர் பொருளென்றெண்ணி *
யிசையினுன் மகிழ்வும்பேசு மிகழ்வினாற் றுயருமுற்று ... .... *
நசையினற் சொல்லுநெஞ்ச நஞ்சமே யாக்குமாதோ ... (௨)

சுணங்கனோர் பாற்குனாக்குஞ் சூழ்கரங் கத்துமோர்பாற் ...... *
பிணங்கியே புள்ளொலிக்கும் பெரும்பறை யோர்பாலார்க்கு ..*
மிணங்கியிவ் வொலிகளெல்லா மேற்கின்ற செவியோர்தீயன் . . *
குணங்கெடக் கூறும்வன்சொற் கொண்டிடிற் குறையென்னெ
[ஞ்சே(௫)

௫௭ - ம்-அதிகாரம் புகழு மிகழு மதியாமை முற்றுப்பெற்றது.
ஆகஅதிகாரம் ௫௭-இ திருவிருத்தம் ௫௱௰௫

௯௮-ம்- அதிகாரம்.

## பரோபகாரம்.

அனமிலர்க் கன்னமாய்வாழ வகமிலார்க் ககமாய்த்துன்ப ......... *
மனமுளார்க் குவப்பாய்நோயின் வருந்துவோர்க் கருமருந்தாய்த்
தனமிலார்க் கரும்பொன்னாய்நற் றாய்தந்தை யிலார்க்கன்னா *
யினமிலார்க் கினமாயார்க்கும் யாவுமா யிசைதலன்பே ..... (௧)

அருந்தவே கூழும்பூண வாடையும் வீடுமின்றி .................*
வருந்துவோ ரெண்ணிலார்நம் மருங்குளா ரெனவறிந்தும்... ...*
விருந்திடாய் மணிமாடத்து மேவிநீ யொருவன்வாழப் .........*
பொருந்தினாய் மனமேமக்கட் போலிநீ விலங்கானாயே.......(௨)

ஏவல்செய் வோர்க்குக்கூலி யிடைத்துகி லுணவாம்யாமோர்.... *
காவல னெனினுஞ்சோறு கலையன்றி யொன்றுங்காணோ ...... *
மாவலர்ப் பொருளைமீட்டி யயலவர்க் காச்சுமந்தோ ..... .... *
மீவதை மேற்கொண்டோமே விண்ணையில்வீ டடைவோநெஞ்சே

சாந்தமார் வறியர்போலத் தற்பரன் வருவான்றாவென் ......... *
றேந்துகை வீடுகொள்ளென் றேந்துகை யாமக்கையி.... ... ..*
னீந்தபொன் விலைபோல்வீட்டுக் கிட்டபொன் னுமன்னாக் *
காய்ந்திலையென்போர்வேண்டோங் கதியென்பார்பேர்லுமாதோ

இரவலர் தம்மையெள்ளு மேழைநா ளியம்பக்கேளீர்...............*
நரகைமோக் கத்தைவிற்க நண்ணிய வணிகரன்னார் ..... ..... .... *
பரகதி யவனைத்தாங்கும் பண்பினார்க் கிவரள்ளல் ................ *
கரவுளார்க் கிவரொன்னி னவர்தமை கழறலென்னே ..... ..... (௫)

பிறர்புக ழினைக்கைம்மாற்றைப் பேணியே யுதவிசெய்வோ .... *
ரறமுளா ரல்லர்நித்த னருட்குமே யருகரல்லர் ................*
திறவலக் கரஞ்செய்நன்றைத் திகழிடக் கரங்காணாமல் ........... *
வறியர்பாத் திரமறிந்து வழங்குவோர் மாட்சியோரே ..........(௬)

மக்கடம் பொறையைத்தாங்கு மகிக்குமன் னைக்காக்க..........*
மிக்கநீர் பொழிபாநின்ற விண்முகி லினுக்குஞ்செய்யத் ... .. *
தக்கவோ ரெதிர்நன் றுண்டோ சமயத்தோர் பயனும்வேண்டா *
தொக்கவே செய்தநன்றி யுலகினும் பெரிதாமாதோ.......... ..(௭)

மன்னிப கனிகாய்நிழன் மற்றெலா முதவிப்பின்னுந் ..........*
தன்னையு முதவாநின்ற தருவெனத் தங்கையார்ந்த ... ............*
பொன்னெலா முதவிப்பின்னும் பூட்சியா லுழைத்திட்டேனு *
மின்னுயி ருதவியேனு மிடுக்கண்டீர்ப் பார்நல்லோரோ ..... (௮)

வேறு.

நூனுழைந்த நுவலருஞ் சிலர்தம்..... .................................. *
பானுழைந்த படர்மதி யார்பிறர் ...... ....................... *
கானுழைந்த கடுவுந்தங் கண்ணின்வை ......... ................ *
வேனுழைந்தென முன்னி மிறைப்பரோ ......... .......... (௯)

புறம்வருந்திடப் பூத வுடம்பினை ......... .................. ..*
மறவுடம்பை வளர்ப்ப ரறிவிலா .... ............................ *
ருறவிடும்பை யுருவண்ண மீந்துநல் ....... ........ .... ......... *
லறவுடம்பை வளர்ப்ப ரறிஞரோ ......................... .......... (௰)

ஓடியெங்கு முலரும்பைங் கூழ்களை.. ........................ ...... *
நாடிமைமுகி லன்மழை பெய்தல்போல் .... ............. .... *
வாடினரையும் வறிஞ ரிருக்கையைத்.............................. ......*
தேடிமேலவர் செய்வ ருதவியே .......................................(௰௧)

காரிடத்திரந் தேனுங் கயநதி ..........................................*
நீரினைப்பணை யெங்கு நிறைத்தல்போ..... ............................. .*
லாரிடத்திரந் தேனு மறமுளார் .... ............................... *
பாரிடத்துப் பகுப்பர் வறிஞர்க்கே.... ..................... (௰௨)

வேறு.

சாடுவெங் கோடையைத் தலையிற் றாங்கியு..... ............. ..*
மாடுளோர்க் கருநிழல் வழங்கு மாவெனக்............. ............*
கேடுதம் பான்மிகக் கிளைக்கினுங் குணப்.... ...............................*
பீடுளோர் நன்மையே பிறர்க்குச் செய்வரால்........ ...... (௰௩)

இதமிலா வுலோபர்தம் பொருளை யெண்ணியே......... ..........*
மதமொடு நாடொறு மகிழ்வர் மேலவர்.... ........ .... .......... *
பதவிதீர் மிடியர்க்குப் பரிவிற் றுஞ்செயு.................................*
முதவியை யுனுந்தொறு முளங் களிப்பரோ ........ ........(௰௪)

காமமே யின்பங்கள் கணத்தி னீங்கிப்பின் ........................ *
தீமையே விளைத்திடும் பிறர்க்குச் செய்கின்ற ...... ........ ...... *
சேமநல் லுதவியாற் சேரு மின்பந்தா..... ... .... .... ..... . ... *
னீமவீட் டின்பென நிகரு மற்றதே.......... ...... ........ (௰௫)

௩௮-ம்- அதிகாரம்- பரோபகாரம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்- ௩௮-இ திருவிருத்தம் - ௩௱௩௰.

௩௯-ம்-அதிகாரம்.

## பொருளாசையொழித்தல்.

என்பொருளென் பொருளென்று சீவன்விடு மன்மேயொ
ன் றியம்பக்கேளா, யுன்பொருளா னலதன்மே லுன்றுமம் வரை
ந்துளதோ வுன்றனோடு, மூன்பிறந்து வளர்ந்ததோ வினிடுனைவி
ட் டகலாதோ முதிர்ந்துநீதான், பின்பிறக்கும் போததுவுங் கூட
விறந் திடுங்கொல்லோ பேசுவாயே.. .. ..... ..... ..... ..... .. (௧)

ஒப்பருநற் குணத்தவர்க்குங் கொலைகாமங் கட்களவை யுப
தேசிக்கு, மப்பனுப் நேயர்க்குட் பகைவிளைக்குஞ் சத்துருவா
யகிலத்துற்ற, செப்பரிய துயர்க்கெல்லா மாதாவாய்த் தீவினைக்
கோர் செவிலியாய, விப்பொருளை நற்பொருளென் றெப்படி
நீ யொப்புகின்று யேழைநெஞ்சே.... ......... ..... .... .... ... (௨)

நோக்கிருந்து மந்தகராக் காதிருந்துஞ் செவிடரா நோ
யில்லாத, வாக்கிருந்து மூங்கையரா மதியிருந்து மில்லாரா
வளருங்கைகாற், போக்கிருந்து முடவரா வுயிரிருந்து மில்லாத
பூட்சியாரா, வாக்குமிந்தத் தனமதனை யாக்கமென நினைத்தனை நீ
யகக்குராங்கே............ ..... ........ .... ... ............. . ..... ... (௩)

நிறைசெல்வ முடையாரை நோய்துன்ப மணுகாதோ நினை
த்ததெல்லாங், குறையின்றிப் பெறுவரோ புவிக்கரசு செலுத்து
வரோ குறித்தவாயுள், பிறையென்ன வளருமோ வியமன்வர வஞ்
சுவனோ பேரின்பத்துக், குறையுளோ வவர்கிரக மீதெலா மன
மேநீ யுன்னுவாயே.......................................... ........... (௪)

கனவதனிற் கண்டபொருள் செலவுக்கா மோகுனிக்குங் கங்
குற்கூத்தி,வினரமைச்ச ரெனவேடம் புனைந்தவர்தம் மாணையெங்
கு மேகுமோவின், கனமின்போ லொழியுமிந்தப் புவிவாழ்வு
நிலையென்னக் கருதிக்கோடி, நினைவுற்றா யுடல்வீழி னென்செய்
வா யறிவில்லா நெஞ்சக்கல்லே...... (௫)

பஞ்சபூ தங்களைவின் டாரகையைத் தண்மதியைப் பானுத்த
ன்னைக், கொஞ்சமுநம் பொருளெனவுன் னாமல்வெள்ளி பொன்
னெனுமட் குப்பைதன்னைத், தஞ்சமாம் பொருளென்ன நினைத்
ததன்மே லாசையுற்றுத் தயங்குகின்றாய், நெஞ்சமே யுனைப்போ
லு மறிவீனர் தேடினுமிந் நிலத்திலுண்டோ ...... (௬)

பூதலநம் மில்லம்வான் மேற்பந்தர் சசிகதிர்மீன் பொற்றீ
பங்கள், சீதநீர்க் கடம்விருட்சா திகணம்பூம் பொழிலுலகின் செ
ல்வமெல்லாம், வீதமா நமதுமக்கள் யாவருநஞ் சுற்றமென
வியந்துன்னாமற், பேதஞ்செய் துழல்கின்றாய் நெஞ்சமே யுனை
ப்போலும் பித்தருண்டோ...... (௭)

பூதமதி னொன்றுநமைத் தாங்குந்தா யொன்றுநாம் புசிக்
குமுண்டி, மாதனாயி லொன்றுநஞ்ச மையலாளொன்றெமக்கு
வளச்சாந்தாற்றி, பேதமின்றி மற்றொன்று நாமூரும் வாகனமா
ம் பின்னுமாதி, நாதனே தந்தையெனிற் செல்வமிது போலுமு
ண்டோ நவிலாய்நெஞ்சே...... (௮)

மண்டுபெருந் தனமிருந்துங் கண்டுமகி ழுவதல்லான் மய
லீபோன்றுற்று,முண்டுவிட வொண்ணுமோ நினைவிற்கும் பஞ்ச
மோ வுலகந்தன்னிற், கண்டபொரு ளத்தனையு நமதுசெல்வ ரப்
பொருளைக் காத்தெமக்குத், தொண்டுசெய்வோ ரெனவுன்னி
மகிழ்வுற்றாற் றலைபோமோ சொல்லாய்நெஞ்சே ...... (௯)

எத்தனைபேர் கையின்முன்ன மிப்பொருடா னிருந்ததவ
ரெல்லாந்தத்த, மத்தமென நம்பினா ரவர்களைவிட் டகன்றுன்கை
யமர்ந்ததின்னுஞ், சத்தமின்றி யனைமோசஞ் செய்தனந்தம் பே
ர்கரத்திற் சாருஞ்சொன்னேன், சித்தமே யதுசெல்லு முன்னீச
ற் பாத்திரத்திற் செலவிடாயே...... (௰)

சதிரவரு லொளிரும்பல் வகைக்கல்லை மணியென்றுங் காமர்
மண்ணை, நிதி வெள்ளி யுலோகமென்றும் பெயரிட்டும் விலையிட்
டு நிகழ்ம்மண்ணாற், சதியான சாகபண மெனச்செய்துந் தனை
யின்மிடி தனையமைத்தோர், மதியிலா நரரன்றிக் கடவுளோ
சொல்லுவாய் மருள்சேர்நெஞ்சே ........ .... ........ ........ (௰௧)

தனையெலா மெமதெனினு மிருப்பிடமோர் முழமேநற்
றுனியங்கள், வனையென்னக் குவிந்துகிடந் தாலுமுண்ப தனைநா
ழி வளரவாவாற், றினைகட லெலாப்பருக வுன்னுநா யெனவெமக்
குத் தேவையில்லாக், கனையினிதி காணிதா னியங்கணீ வேட்டதெ
ன்ன கருத்தேசொல்லாய் ........ ........ .... ........ .... ...... (௰௨)

பொலமிகவு ளார்க்குணவின் சுவையின்று பசியின்று புசி
க்குமன்னம், அலமாய நோயாக் கவலைபிணி பிடகர்பலரருகி
ல்வேண்டும், பலருடலைத் தாங்கினுமோ சுமக்கரிதூர்ப்பகைபய
மிப் பையுளெல்லாம், இலருறுக ணுளனொனிற் செல்வமாவர் மிடி
யனோவ ரியம்பாய்நெஞ்சே........ ........ .... .... ........ (௰௩)

௩௯-ம்-அதிகாரம் பொருளாசையொழித்தல்முற்றுப்பெற்றது.

ஆ அதிகாரம் ௩௯-இ திருவிருத்தம் - ௯௱௪௯.

௪௰-ம்-அதிகாரம்.

## சரீர நிலையாமை.

நெருநலோ வகன்றதின்று விடிந்துபக லாயிற்று றிமிடந்
தன்னி, லருணனே யத்தமிப்ப னிசிவரும்பின் போமறுநா ளா
மிவ்வண்ண, மொருநாளாப் பலநாளாத் திங்களா வாண்டதுவா
வுருவுகொண்டிங், கருநாளா மாயுளுள் கழிவதனை யுணராயோ
வவலநெஞ்சே ..... ... ..... ..... ..... ...... ....... ........ (௧)

வையாற்செய் புணைநம்பி யனலாழி கடக்கவுன்னு மதியி
லார்போற், பொய்யாற்செய் மெய்நம்பி யேதேதோ நினைவுற்
றுய் புனைசேர்நெஞ்சே, பையவோர் புட்பிடிக்கக் ககனமிசை
வட்டமிடும் பருந்துபோல, வையோகூற் றுனைப்பிடிக்க வற்ற
ம்பார்த் தொளித்துநின்ற தறிகிலாயோ........ ........ ........ (௨)

தினமும்விரோ சனங்கொளினு மோயாமன் மலமாரி திர
ளாப்பெய்யுங், கனம்போலுந் தேகமிதைப் பிரித்துநோக் கிடி
ன்மலநீர் கசியுஞ்செந்நீ, ரினமான தோலென்பு தசைநரம்பு
குடரன்றி யினிவேறுண்டோ, மனமேநீ யிதையுமொரு பொரு
ளென்ன வுன்னவென்ன மருளுற்றாயே........ .... ........ ..... (௩)

மாடாடு விலங்கிறப்பிற் றசைமயிர்தோல் கொம்புதவு மட்
கலந்தா, னோடாக வுடையினென் றுக் குதவும்வீழ் மரங்கல்லு
முபயோகந்தான், வீடான திடியின்மேற் பொருளுதவுங் காட
ழியின் விறகாமாயக், கூடாகுந் தேகமிது வீழினெதற் குதவுநீ
கூறாய்நெஞ்சே..................................................(௪)

காடுசேர் மரஞ்செடிபார்த் தித்தனைநா ணிற்குமெனக் க
ணிக்கலாஞ்சீர், நாடுநீர்த் தடநோக்கி யித்தனைநாட் புனலென்ன
நவிலலாமோர், வீடிதா னித்தனைநா ணிற்குமென விளம்பலா
மெய்யெனும்பொய்க், கூடிதா னித்தனைநா ணிற்குமெனப் புவி
யிலெவர் கூறற்பாலார்..................................................(௫)

நெல்லறுக்க வோர்கால மலர்கொய்ய வோர்கால நெடிய
பாரக், கல்லறுக்க வோர்கால மரமறுக்க வோர்காலக் கணிதமு
ண்டு, வல்லரக்க னனையநம னினைத்தபோ தெல்லாநம் வாழ்நா
ளென்னும், புல்லறுக்க வருவனெனி னெஞ்சமே மற்றினியாம்
புகல்வதென்னே..................................................(௬)

முற்றியபின் கனிபுதிரும் பழுப்புற்றுத் தழையுதிரு முழு
துமேநெய், வற்றியபின் விளக்கவியு மென்னவோர் திடமுண்டு
மக்கள்காயம், பற்றியவக் கருட்பத்தோ பிறக்கும்போ தோபா
லப்பருவத்தோழுப், புற்றபின்போ வீழ்வதென நிலையின்றே
லிதன்பெருமை யுரைப்பதென்னே..................................................(௭)

புகைவண்டி யூர்ந்துலகை நொடிக்குள்ளே சுற்றுவோம் பு
கைக்கூண்டேறிக், ககனமிசைப் பறவையெனப் பறப்போமோர்
புகைக்கலத்தாற் கடல்கடப்போம், வகையாய்மின் னஞ்சலினு
லெத்திசையுள் ளோரோடும் வார்த்தைசொல்வோ, மிகையான
புதுமைசெய்வோ மரணமதை விலக்கறியோம் வியப்பீதன்றோ.

அண்டாண்டங் களின்றூர நிலையளவு கூறுவோ மருக்கன்
றிங்கட், குண்டாகுங் கிராணமதை முன்சொலுவோங் கடியாரத்
துதவிகொண்டு, தண்டாத காலத்தை யளவிடுவோ மின்னும்வெ
கு சமர்த்துஞ்செய்வோங், கொண்டாடுந் தேகமிது வீழ்காலம
றிவதற்கோர் குறிப்பின்றம்மா.................................. (௯)

மண்டலத்தாருயிர்வாங்க நமன்கொண்ட வாயுதத்தின் வகு
ப்பைநோக்கிற், கொண்டலிடி மின்னீர்கா லனன்மரங்கள் மண்
ணேப்பிணி கொடியபுட்க, ளுண்டிவிலங் கின்பதுன்பம் பகை
யச்ச மூர்வனபே யுலகிலின்னுங், கண்டதெல்லா மவன்கையா
யுதமென்னிற் றப்பும்வகை காணேநெஞ்சே.. ................ (௰)

விரியாழி நுண்மணலைத் தாரகையை யெண்ணிடினும் வீ
ந்தோர்தம்மைச், சரியாவெண் ணிடத்தகுமோ வின்னமுநங் கண்
முன்னஞ் சாவோர்தம்மைத், தெரியாது போற்றினமும் வீண்
காலங்கழிக்கின்றாய் திடமாயென்று, மரியாமை யுற்றனையோ வ
றியாமை பெற்றனையோ வழுத்தாய்நெஞ்சே............... (௰௧)

அனமிகிலோ வாயுகுறை யிற்கூடுண் ணாவிடிலின் ணாவிநீங்கு
ங், கனமான வெய்யின்மழை பனியுதவா தவையின்றேற் கணநில்
லாது, தினமுமா யிரங்கணட மிமைப்போதா கிலுமிதன்மேற்
சிந்தையின்றேற், புனன்மொக்கு ளெனவழியு நெஞ்சமே நாஞ்
சுமக்கும் பூட்சிதானே.............................................. (௰௨)

பொன்றுநா ளின்னதென நிலையுண்டே லாழிசூழ் புவியோ
ராயு, ளொண்றிரண்டு நாளெனினும் போதுநா ளுண்டென்றோ
ருரையுண்டேனு, மின்றோவிக் கணமோபின் னுறுங்கணமோ
மாலையோ விரவோசாவ, தென்றோவென் றோருறுதி யில்லாத
வாயுளிதற் கென்செய்வோமே...................................... (௰௩)

தொல்லுலகிற் புல்லிலையுண் ணுமூத லுயிர்களைநற் சுர
பிப்பாலை, நெல்லுடன்பஃறானியத்தைக் காய்கனியைக் கிழங்கி
லையை நிதமுமுண்டு, மல்லுறவே வளருமிந்தக் காயத்தைமரமெ
ன்று மாடாமென்றும், புல்லென்று நெல்லென்றுஞ் செடியென்
றுங் கொடியென்றும் புகலலாமே................................ (௰௪)

ஆதியிற்புல் லிலைகனியாய்த் தானியமாய் மீன்பறவை யாடு
மாடாய், மேதினியி லிருந்துதாய் தந்தையுடற் சேர்ந்தொருநா
ள் வெளியேவந்தங், கோதியடண் டநதின்று பெருத்திறந்து பல
செந்துக் குணவாய்ப்பஞ்ச, பூதியமாய் நாசமாய்ப் போநெஞ்
சே நாஞ்சுமக்கும் பூட்சிதானே.................... (௰௫)

எமதெனுமெய் பிறக்குமுன்னெங் கிருந்ததின்னஞ் சிலகா
லத் தெங்கேசெல்லு, மமருயிர்நீங் கியபின்னோர் கணமுமனை
சேயரித னருகேநில்லார், தமர்சவமென் றெடுத்தெறிவார் பறவை
விலங் கினங்கூடித் தத்திக்கொத்தி, யமர்செய்து புசிக்குமப்போ
தென்னென்று கேட்பவரா ரறிவிநெஞ்சே.. ................ (௰௬)

௪௰-ம்-அதிகாரம்-சரீரநிலையாமை முற்றுப்பெற்றது.

ஆ- அதிகாரம்-௪௰-இ திருவிருத்தம்-௩௱௫௯.

௪௧-ம்-அதிகாரம்.

## துன்பம்.

பாரில் யார்க்கும் பழங்கண் சகசமாம்............................*
வீரி யங்கெட வெந்துயர்க் கஞ்சுதல்..................................*
போரி னேர்ந்தவன் பொன்றலுக் கஞ்சலு.............................*
நீரின் மீன்குளிர்க் கஞ்சலு நேருமே................................(௧)

பிறந்த சேயுட னேயழும் பீழைதான்................................*
சிறந்த மாநிலஞ் சேர்ந்துபின் றுயி..................................*
றிறந்து போமள வுந்துய ரென்பதை.................................*
யறிந்து நீர்விட் டனுங்கலை யொக்குமே...........................(௨)

### வேறு.

கோடிபொன் னுடையவ னெனினுங் கோமுடி..........................*
சூடிய வேந்தரே யெனினுந் துன்பொடுங்..........................*
கூடிய வாழ்க்கைய ரன்றிக் கூறுங்கா.................................*
ணீடிய சுகமுளோர் நிலத்தி னில்லையே.............................(௩)

பாக்கிய நிலையெனும் பதகரோர் துயர் .......................... *
தாக்கிடிற் பொருதுயிர் தன்னைப் போக்குவ .......................... *
ராக்கிய வாக்கமு மனுரு மொன்றென .......................... *
நோக்கிய சீலனை நோயென் செய்யுமே .......................... (௪)

## வேறு.

ஒளியினேடிரு ணிழலொடு வெயில்பொழி யுதகத் .......................... *
துளியினேடுமின் னசனிமா மலையையுஞ் சுழற்றும் .......................... *
வளியினேடிளந் தென்றலும் வருதல்போன் மாக்கள் .......................... *
களியினேடருந் துயரமுங் கொள்ளுவர் கலந்தே .......................... (௫)

உழூதுபுண்செயப் புன்செயு நன்செயா முயர்பொன் .......................... *
முழூதுந்தீயினிற் சுடச்சுட வொளிருமான் மொழியும் .......................... *
பழூதின்மாமணி தேய்பட வொளிமிகும் படர்கொண் .......................... *
டழூதுநொந்தவர்க் கன்றிமற் றவர்க்கற மரிதே .......................... (௬)

௪௧-ம் - அதிகாரம் - துன்பம் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௪௧-இற் திருவிருத்தம்-௬௱௬௫.

## ௪௨-ம்- அதிகாரம்.

## அறஞ்செய்தல்.

பசிவந்த பின்னெல்லை விதைப்பதுபோல் வீட்டிற்றீ பற்றிக்கொண்டு, நசியும்போ தகழ்யவிக்க வாறுவெட்டல் போலும் போர் நடக்குங்காலை, விசிகநூல் கற்கமுயல் வதுபோலுங் கபமிஞ்சி விக்கிச்சிக்கி, யிசிவுகொண்டு சாங்காலத் தெப்படிநீ யறம்புரிவா யிதயப்பேயே .......................... (௧)

எத்தொழிலு முற்பழக்க மின்றியெய்தா தறமென்னு மினையொன்றில்லா, வத்தொழின்முற் பழக்கமின்றிச் சாங்காலத் தமையுமோ வருமன்றற்கு, வத்திரம்வேண் டிற்பருத்தி விதைத்துமுன்ன நெய்யாமன் மணஞ்செய்காலத், தொத்ததுகில் வேண்டுமென வெத்தனைபேர் முயன்றுவு முறுமோநெஞ்சே.......(௨)

சிற்பநூ லிலக்கண நூல் வயித்திய நூன் மரக்கல நூல் செ
ரு நூலின்னம், பற்பலநூ லுணர்வதினும் புண்ணிய நூ லரிதா
மோ பகரந்நூல்கள், கற்பதன்முன் னரிதெனினும் பின்னெளி
தா மதுபோனற் கருமமென்னு, மற்புதநூன் முயலுவோர்க்
கெளிதாகு மதையடைவா யறிவினெஞ்சே.. ..... ...., ..... . (௩)

தினங்கள்செலச் செலவேதோ பெற்றதுபோன் மகிழுநெ
ஞ்சே தினங்களோடுங், கனங்கொளுமுன் னுபுனுள் கழிவதுண
ராயுயிர்தீர் காயஞ்சேரும், வனங்கடுகி வாவென்ன விளித்துன்
பாற் றினநெருங்கும் வண்மைபுன்னி, முனங்கொளறி யாமையை
நீ யினங்கொள்ளா தறஞ்செய்ய முயலுவாயே... ...........(௪)

இன்றருணோ தயங்கண்டோ முயர்ககன முகட்டின்மிசை
யிந்தப்பானு, சென்றடைய நாங்காண்ப தையமதைக் காண்கி
னுமேற் றிசையிருக்குங், குன்றடையு மளவுநா முயிர்வாழ்வ
தரிததன்முன் குறுகுங்கூற்ற, மென்றச்சத் துடன்மனமே மற
வாம லறவழியி னேகுவாயே...... .... ........ ....... ........(௫)

சிற்றுதர போஷணைக்கா மலையேறிக் கடல்கடந்து தேய
மெல்லாஞ், சுற்றியனு தினமலைவாய் நித்தியபே ரின்பசுகந்
தோயவேண்டிச், சற்றுமுடல் வருந்தலின்றி யலைதலின்றி யோ
ரிடத்தே தங்கிழுளும், பற்றினையே துறந்துசும்மா விருந்தற
ஞ்செய் வதிலென்ன பாரநெஞ்சே ........................ .. (௬)

கல்லூறுஞ் சிறுநீரை விரைவினிறை யாவிடினக் கலந்தா
ன்மிக்க, சலமூறி யழுந்துமது போற்பவத்தை விரைவுற்றுத் த
ள்ளிடாம, னிலமீதி யாம்வாளா விருப்போமேற் பாவங்க ணி
றைந்துமோக்ஷ, நலநீங்கி நரகமெனும் பேராழி தனில்வீழ்ந்து
நலிவோநெஞ்சே ........ ........ .... .... ................ (௭)

பெருவெள்ளஞ் சேர்ந்தபின்ன ரதைத்திருப்ப வொண்ணு
மோ பெருத்துநீண்ட, தருவின்கோ ணலைநிமிர்க்கத் தகுமோ
பா வங்களைநீ தள்ளிமேலாங், கருமமதின் முயலென்றாற் பின்
னையா கட்டுமென்றாய் கசடுவிஞ்சி, யொருமலைபோ லானபின்
னெவ் வாறதைநீ சாம்பருவத் தொழிப்பாய்நெஞ்சே .. .... (௮)

எதிலார் பொருணோக்கி யிச்சையுறல் கவர்ந்ததொப்பா
மெழின்மின்னாக், காதலாய் நோக்குதலே கலந்ததொப்பாம்

பிறர்கேட்டைக் கருதலன்றார், வேதையுறக் கொன்றதொப்பா
மிவ்வாறோர் பயனின்றி மேவும்பாவ, மாதலினைம் பொறிவழி
யே மனஞ்செல்லா தடக்குவா ரறிவுள்ளோரே ............ (௯)

பரியூர்வோன் றனைமறந்து பரிக்குபசா ரங்கண்மிகப் பண்
ணல்போலும், பெரியகட வுளைப்பணிபா தாலயத்தை யலங்கரி
க்கும் பித்தர்போலு, மரியபொருள் வெளிவிட்டுச் செப்பைக்
காத் திடல்போலு மான்மாவுக்கே, யுரியவறம் புரியாம லுடலைநீ
யோம்புகின்றா யுள்ளப்பேயே ......................... (௰)

ஒருயிரீ ருடலென்ன நட்டமைந்தர் மாதர்நம துயிர்நீங்கிற்
றம், மாருயிரைத் துறப்பரோ வழுவதுந்தம் முணவுவைக்க வ
மைந்தபாண்டம், பேருலகி லுடைந்ததென வழுவதன்றி நமக்கி
ரங்கும் பேரிங்குண்டோ, சாருமிவர் நேயத்தாற் பவஞ்செய்து
வீடிழத்த றகுமோநெஞ்சே ............................(௰௧)

வேறு.

உளதிலையென்ன வுரைப்பதேவருத்த முண்மைகூ றிடலெ
ளிதாகுங், களவுகட்காமங் கொலைசெயல்வருத்தங் காவலன் றண்
டமூர்ப்பகையா, முளமதைவருத்து மிகபரங்கெடுக்கு முண்
மையா வீதெலாமுன்னிற், களநிகர்பாவஞ் செய்தலேகட்டங்
கருதறஞ் செயலெளிதன்றே ..........................(௰௨)

ஒருவனைப்புதிதாக் காணினுமவனோ டுறவுசெய் யினும்ப
ணிகொளினும், பெருமையோன்றீய னெனவறியாமுன் பேசி
டார் தீயனேற்பெயர்வார், தருமநற்குணத்தைத் தீயரும்புகழ்
வார் சழக்கினைச் சழக்கருமிகழ்வா, ரிருமைதீரறத்தின் பெரு
மையுமறத்தி னிழிவுமீ துன்னுவாய்மனனே.... ..............(௰௩)

பலர்கழல்வருட மாதர்களாடிப் பாடவோர் பகலெலாம
ளிச்ச, மலரணைகிடத்தல் வருத்தமாமன்றே வார்த்தவெந் நீர்
பொருவுடல, மலகறுகால நரகவெந்தழலாழ்ந் தயர்வுற வொ
ண்ணுமோவவியாப், புலவையேவிளைக்கும் பவத்தைவேரறுத்
துப் புண்ணியம் புரிந்திடாய்மனனே ...................(௰௪)

வேறு.

சூற்றுயர்க் கஞ்சுவாட்குச் சுதரிலைப் பயனொன்றில்லைக் .......*
காற்றினுக் கஞ்சாநின்ற கலத்தினுக் கவிழ்தங்கைப்பென் ....*

றேற்றிட வஞ்சினரோக் கியமிலை யின்னற்கஞ்சிற் .......... *
சாற்றரு மறமுமில்லைத் தனிப்பர கதியுமின்றே .......... (டரு)

இந்துமீன் பருதிபக்கி யினவிலங் குகண்மரங்கள் .......... *
ஐந்துபூதங்களேனை யாவுமோ வாதெஞ் ஞான்றுந் .......... *
தந்தொழில் செய்துவாழுந் தனியறம் புரிதலென்னு .......... *
நந்தொழில் புரிகிலேம்யா நாய்த்தொழி லுடையேநெஞ்சே ()

சஉ-ம்-அதிகாரம்- அறஞ்செய்தல் முற்றுப்பெற்றது.

ஆ. அதிகாரம்-சஉ-இ திருவிருத்தம்-ருாஅக.

## சரு-ம்- அதிகாரம்.

## கணிகையரியல்பு.

பூவையிவட் களித்தநிதி கணக்கிலையோர் கடன்காரன் புலிபோனம்மைச், சாவடிக்கே யிழுக்கமயி லேயிடர்தீ ரொன்றிவடன் றுளில்வீழ்ந்தோம், பூவில்வைத்த நிதியையோர் கிழப்பூதங் காத்தினிய பூபாவுன்னைச், சீவபவி யிடினீவே னென்றதென்று ளென்செய்வா டெரிவைதானே.......... (க)

நேரிழைநம் முடனிறப்ப னெனமுன்ன முறைசெய்தாணிருபனம்மை, யீரவெனக் கொலைக்களத்திற் கிழுக்கவடி பற்றிப்பின் னிரங்கிவந்த, காரிகையை நோக்கினே மிஞ்சியவோர் கோவணத்தைக் கருதிவந்தே, னேருயிர்நம் மிருவர்க்கு நீர்வீயி னுனிறந்த தொக்குமென்றாள் .......... (உ)

மனைதாலி முதல்வேசைக் கீந்துவே றொன்றுமின்றி மயங்கும்வேளை, புனையவோ ரணியிலா திருந்தவில்லாள் கழுத்தினிலோர் பொட்டைக்கண்டு, மனமகிழ்வுற் றேதென்றேன் பரத்தையர்போ லெனக்குமருள் வாய்க்கவேண்டி, யினமாப்பொட்டணிந்துகொண்டு தாசியானே னென்ன வியம்பினளே - (ரு)

ஆவியனை யாளையோர் பொழுதுபிரிந் தவளில்ல மணுகுங்காலை, மேவுபாங் கியைக்கண்டாண் டுணையின்றி வருந்தினளோ

மின்னுளென்றே, னுவிதனுக் குண்டோகாண் மயிர்ப்பஞ்ச ம
லப்பஞ்ச நாய்க்குமுண்டோ, தேவிதனக் குண்டோவாண் பஞ்ச
மென்று ளதன்பொருளைத் தெரிகிலேனே .... .......... ......(ச)

செவ்வையுறு பொருள்கவர்ந்த பின்னரொனைக் கைவிட்ட
தேனைநோக்கிக், கொவ்வைவாய் மயிலேயிச் சினமேதென் றே
ன்வனசக் கோயின்மேவு, மவ்வையையமுன் சேர்ந்தபிழை பொ
றுத்தவளை யென்னகத்துக் கழைத்தேனன்று, டவ்வையையு ம
ருவினீ ரினிப்பொறே னென்றாடிச் சலங்கொண்டாளே .... (ரு)

உண்ணும விரவலர்க்கு மீயாமற்பூமிதனி லொளித்த பொ
ன்னைக், கண்ணுன டனக்கீய வேண்டியதைத் தோண்டுகின்ற கா
லந்தன்னின், மண்ணுன ளெனைநோக்கி யெனக்கீந்த பொரு
ளையினி வாங்காநின்ற, பெண்ணுன ளெனையுன்வாய் கொட்டுவ
ளென் றேநகைத்துப் பேசினுளே ........................ .... ... (சு)

முனங்காலை வருடுமவள் கரங்கோல்போன் முதுகின்மேன்
மோதப்பூமே, லனங்கான மயிலென்ன நடஞ்செய்த கழனம்மே
லாடித்தாக்கத், தினங்கான ரசமுதவு வாயேசி யுமிழவிந்தச் செ
ய்கைகண்டு, மினங்காத லாயவளில் லேகுதியோ நிற்றியோ வி
யம்பாய்நெஞ்சே.................... .................... .................... ... .... (எ)

ஆவலா லவகாலத் தவளின்னுன் புகச்சிலபே ரங்கிருந்து,
மேவியோ டினர்சினமுற் றிவராரொன் றேன்மாமி விரைவாய்வ
ந்து, பூவையிவ ணின்பிரிவாற் றுதழப்பாங் கியர்க்குனைப்போற்
புருடவேடந், தாவறவே தரித்தவட்குக் காட்டினன்வே றன்றெ
ன்று சாதித்தாளே............................ ........... ............... .... (அ)

பொருளொன்று நாந்தந்த திவட்கதற்கில் லாமைபிணி
பொய்புரட்டு, மருளொன்றுங் கட்காமங் கொலைகளவு சூதுவ
சை மரணத்தோடு, மிருளொன்று நரகமின்னு மிவள்பாலுங்
கொண்டதற்கோ ரிலக்கமுண்டோ, தெருளொன்றும் பாரினம்
போற் சமர்த்தாக்கொண் டெவர்வணிகஞ் செய்யுவல்லார் .(கூ)

இரதியனை யார்பாற்போய் நாம்வருமுன் னெங்குசென்று
யெனவில்லாளைப், பொருதிவின விடவிரதி புருடனனை யார்பா
ற்போய்ப் புணர்ந்தேனென்றுள், விரதமுள்ளா யெங்கிதைநீ கற்

றதென்றே மும்மிடத்தும் விருப்பாயும்மைச், சூரதஞ்செய் பவ
ரிடத்துங் கற்றதென்றாள் வேறினிநாஞ் சொல்வதென்னே..(௰)

சுவையுணவு தானிருக்க மலந்தேடி போடுகின்ற சுணங்கன்
போலுங், குவையதனிற் கிடந்துநல் லிடநீங்கித் திரிகின்ற கோகு
போலு, நவைதீர்தண் ணதித்தூநீ ரருந்தாதங் கணநீரா நாடல்
போலுஞ், சிவையனைய காந்தையரை வெறுத்தசடர் வேசையரை
ச் சேர்வர்மாதோ.......................................(௰௧)

கோடுமுடன் மாமியெனை மதுவுடன்பு லாறிருடிக் கொ
ணர்தியென்றாள், பாடுபெறும் பார்ப்பானு னென்றேன்மற் ற
வையுண்ணப் பவம்போமென்று, ஞூடும்வசை யுயிருய்யே னெ
ன்றேனீ மாய்ந்திடின்முன் னுன்கொடுத்த, வோடுமற்ற மருகர்க்
கா நான்றுக்கொள் ளெனக்கயிறொன் றுதவினாளே.....(௰௨)

பசையறவெம் மாவியன்றாள் கைப்பொரு ளெலாம்பறிக்
கப் பசியானுன்கு, திசைமுகமு நோக்கலாற் றிசைமுகனு மேனு
ம்வாயிற் றீயாளிட்ட, வசையான மண்ணுண்டு மாயுனு னேங்கை
யின் வாங்குமோட்டா, விசைமேவு மீசனுனேம் புவியினமை
யொப்பா ரெவர்தாமம்மா.......................................(௰௩)

விடமுண்டான் கூற்றுதைத்தா னல்கைவென்றான் புரமெரி
த்தான் விடையோனென்னக், கடலுலகிற் சைவரவன் புகழ்விரிப்
பார் கணிகையர்கட் கடுவையுண்டு, குடமுலையாங் கூற்றுதைத்து
த் தாய்க்கிழவி யெனும்பேயைக் கொன்றனன்றூர்வா, ழிடமென்
னும் புரமெரித்தா னெனில்யாமு மவன்புகழை யியம்புவோமே

கொடியாளன் பற்றபின்னர் பலர்நம்பால் வந்துன்னைக் கூ
டிக்கொண்ட, மிடியென்றும் வாழ்கவென்று ரோனென்றே மு
யிர்க்கினியாள் வீட்டினீவந், தடிவைத்த போதெல்லாங் கூடையுரி
பர்ணகட்டி லடியடுக்கு, நெடியசிறை யிருந்தோமச் சிறையை
யுன்றன் வறுமைவந்து நீக்கிற்றென்றாள்.......................(௰௫)

தெரிவையினட் பறிவான்மான் டெனக்கிடந்தே மாமிவந்த
சிலனைநோக்கி, யுரியபா டையிலினை யெடுமென்றாள் வீண்செ
லவே னுலந்தோன்காலிற், புரிவீக்கி யிழுமென்றன் னம்பணித்
தா ளதுசெய்யப் புகுந்தோர்தம்மைத், தெரியாம லுயிர்தப்பி
யோடிவந்தோ மங்குறிலெஞ் சீவன்போமே.......................(௰௬)

சாமியுனைப் பிரியேனென் றுரைத்துப்பின் னகன்றமின்னு டன்னைநோக்கித், தோமிலா நின்மாற்றந் திறம்பியதே தென்றே னீ தொகுப்பாத்தந்த, சாமியைநீங் கேடினென்றே னுனைச்சொன் ன தன்று நீ சாமியானுற், பூமியினுன் மாற்றென்ன விடையென் ன விலையென்ன புகல்வாயென்றாள் ........ .... .... .... .... (யஎ)

ஒருவனுண்ட கலத்துண்ண வொருவனுடை யிணையுடுக்க வொருவன்றூங்குந், திருவமளி துயிலமனம் பொருந்தாது பல ரொச்சஞ் சேர்படிக்கம், பொருவுவே சியர்வாயெச் சிலையுண்ணப் பலபேரைப் புணர்ந்தசுத்த, முருவுகொண்ட வேயவர்தோள் சே ரவே யெவர்க்குமன மொன்றுங்கொல்லோ........ .... .... (யஅ)

பொருளின்சே டத்தையிவட் களித்தோம்வாய்ச் சேடமெ னும் பொருளளித்தா, டருமனெனத் தனமளித்தோ மெமக் கிவளுந் தருமனெனத் தனமளித்தா, ளருமையாம் பலியளித் தோ மிவளெமக்கும் பலியளித்தா ளாழிசூழ்ந்த, விருநிலத்தி னிதன்றி யின்னுமிவ ளென்செய்வா ளெமக்குத்தானே ... (யகூ)

கொலைஞர்தமைக் கொலைசெய்து கள்வரைவெஞ் சிறையிலி ட்டுக் குற்றஞ்செய்யும், புலைஞரைத்தண் டித்தடக்கு நம்மிங்கி லி வீடமன்னர் புருடராவிக், குலைவைக்குந் தன்மையளாய்ப் பாத கமெ லாந்திரண்டோ ருருவாய்வந்த, விலைமாதைக் கொல்லாம லுலகத்தி லேதுக்கா விடுத்தாரம்மா ...... .... ......... ..... (உய)

பணயமே திரணமன்பு பெரிதென்ற பாவைபொருள் பறி த்தபின்ன, ரணியேனென் றுளனங்க னுனக்கிலையோ வென்றே மவ் வறிவிலான்பூங், கணைகளையே விடுத்தனனு னஞ்சுவனோ கா ணமெனுங் கதிரங்கொண்டென், னிணைமுலைமேற் றெறித்திடின் வெல் வானென்று ளிவண்மனம்வல் விரும்போவம்மா...... (உக)

வடிவுமிகு கொழுநர்தமை வேசியர்வவ் விடவருந்தும் வா ட்கணவ்லீர், கடினமனங் கணக்கிலா வாடவர்சம் போகமுயிர் நவர்தல்வஞ்சங், குடிகெடுக்குந் தொழிலுங்கட் கில்லையென வெ றுத்தனரக் குணங்களெல்லாம், படியிலுமக் கமையுமேற் கணவர் திரு வருளுமக்கும் பலிக்குமன்றே.................... ........ (உஉ)

பகரும்வங்கம் பலசரக்குத்தரகுசெல வாள்கண்முதற் பண ங்கூட்டின்றி, யகனிதம்பச் சரக்கொன்றைப் பலருக்குந் தினந்தி

ணம்விற் றரும்பொன்வாங்கிப், புகலுமந்தச் சரக்குங்கை நீங்கா
து வணிகஞ்செய் பொதுமின்னார்போற், சகமதனிற் பேரறிவி
னோடுவா ணிபஞ்செய்யுஞ் சமர்த்தருண்டோ..... ......... ..... (உரு)

கலவிசெய்த மாதென்னை விலைகேட்டா ளுடனெக்கக் கல
ந்துகாம, நலமுண்ட வுனக்குவிலை யேதென்றேன் சவமனைய நா
ன்சுகிக்க, விலையென்றாள் பொய்யென்றேன் வள்ளுவர்கூ றியகு
றளா மினியநூலில், விலைமாதைச் சேர்தல்பிணந் தழுவியதை
யொக்குமென்றார் வீணேயென்றாள் ............... .... .... (உசு)

தையலில்லம் புகும்போதென் சுதன்குரலைக் கேட்டொதுங்
கித் தாழ்வாரத்திற், பையவொன்றிச் செவிகொடுத்தேன் பாலனை
ப்பார்த் தக்கோதை பணமீயென்று, ளையனிறந் திடிலெல்லா மு
னதென்று னவன்றூங்கு மமையம்பார்த்தோர், சையமெடுத் தவ
ன்றலைமேற் போடுவாய் போடுமுன்னுன் றழுவேனென்றாள்-உஎ

ஒருமாது தன்றுணைவன் சீடனைமற் றொருமாதவ் வும்பர்
கோனை, யொருமாது சோதரனை வரச்சேர்ந்து கன்னியரொன்
றுயர்பேர்கொண்டா, ரருமையா வெமைச்சேயர் சோதரர்சீட
ரையிம்பர்க் கரசைச்சேரும், பொருண்மாதக் கன்னியர்க்கெலா
ஞ்சிரோ மணியென்னப் புகலலாமே.... .................... ..... (உஅ)

விதிமுதன்மூ வரிலெவருன் கடவுளெனச் சிற்றிடையை
வினவப்பூவா, யெழதிரிமமனியனென்று ளரன்மகாயிற் றுசியுனக்
கியல்போவென்றே, னிதியுடன்மைந் தனைப்படைத்தன் றுரதை
யென் காலின்வைத்து நிதமும்வீழ, மதிபடைத்தாத் தமனியப்
பேர் தான்படைத்த விதிக்கிணையார் மகிபமென்றாள்...... . (உஎ)

அந்தமுளா ளுரிமையா வத்தமுளார் வாலியா வவன்பின்
றோன்றி, வந்தவனா ளுயினேன் மூவரிலோ ரரியரியின் மகனை
யன்றோ; பந்தமுறச் செய்தனனம் மிருவரையார் சேர்த்துவை
ப்பார் பாவாயென்றே,னந்துலோ கத்துளோ ரரிநமையோ ரரி
சேர்க்கு மறிநீயென்றாள் ..... ......... .................... ..... .... (உகூ)

இனியாளை நோக்கியத்தை சக்கிரிக்குச் சொக்குத்தா விடு
வாயென்ற, தொனிகேட்டுச் சினந்துநான் குபவனோ வெனைம
யக்கத் தாளோவென்றேன், றனியரசாகு சக்கிரிநீ யாகையினின்

னடிமலர்தோய் தானமெல்லா, நனியேசொக் கெனுங்கனகப்
பொடியிறையென் றேன்முனித னன்றேவென்றாள் ..... (௨௯)

எனையன்றி மற்றோரைச் சேர்ந்தறியே னென்றகன்னி யி
ருதிங்கட்குட், டனையனீன் றாள்புதுமை யென்னென்றே னினை
யும்மை தழுவியிச்சேய், சினையாயென் மதியிலிறந் தேனிகத்
து முனைப்புணரச் செய்தநோன்பான், முனையல்கு லிருடமாத
நிறைந்துடனிம் மகவீன்றேன் முதல்வவென்றாள்.. ....(௩௰)

சிலர்மயில்வீ டுற்றனனொன் றறிந்துண்மை யறியவங்கு செ
ல்லுங்காலை, புலனிழந்து நூறாண்டுங் கடந்தகூ னுடன்மாமி பூ
பாமாரன், மலர்வாளி விடுத்தனன்சே ரெனையென்ன நெருங்கிவ
ழி மறித்தாளப்பேய், கலவிதனக் கஞ்சிமீண் டோடினே னவள்
சுதையைக் கண்டிலேனே ... ......... ........ ..... .... ......(௩௧)

கைத்தனநா மிழந்தபின்கூன் முடவரந் தகர்நோயர் கடைக்
குலத்தர், நித்தமரு விடவுள்ள மூவந்தமின்னை நோக்கியிது நெறி
யோவென்றே, மத்தமதிற் குருமினஞ் சாதியிழி வுளதோவஃ தளி
ப்போர்மேலோ, ரித்தனையி லெனக்கியார் கீழ்க்குலத்தர் சாதியி
வை யிரண்டென்றாளே.............................................. (௩௨)

கனகடன் மணலையெண்ணினும் வேசியர்சே ரர்டவர்க்கோர்
கணிதமுண்டோ, வனையநீ ரளவிடினு மவருட்கொள் சுக்கிலத்
துக் களவுண்டோவவ், வினையவர்மெய் யுரோமத்தை யெண்ணி
னுநோய்த் திரளெண்ண விதானமுண்டோ, யினையவளைச் சேர்
தல்பெருந் தீயினிடை மூழ்குதலை யேய்க்குமாதோ......... (௩௩)

விலைமகட்கென் றயலகத்திற் கன்னமிட்டுத் துளைவழியுள்
விட்டதாளைக், கொலைவாளாற் றறித்தனர்கூ கூவென்றேன் வே
சையென்பாற் குறுகியுக்கக், கலைசோதித் தொன்றுமிலாச் சினத்
தாலவ் வகத்தாளைக் கதறிக்கள்வன், றலைதுமியுந் தாடுமித்தென்
பலனென்றாள் வெருவியுடல் சாருனேனே ..................(௩௪)

திருவெலாங் கொள்ளைகொண்டா டனைநோக்கிச் செவ்வதர
த்தேனீயென்றேன், பெருவாயெச் சிலையுமிழ்ந்தாள் பேசென்
றேன் கொடுஞ்சொற்கள் பேசலுற்றாண், மருவென்றே னுதைத்
துக்கை யாலிடித்துக் கடித்தினிய மதனநூலா, மிருபாத தாடன
மா லிங்கனமெல் லிதழ்சுவைத்த லென்றாளம்மா ..... .........(௩௫)

தரணியின்மிக் கெழின்மாதை யுனதுகுல தெய்வமெது சாற்றுயென்றே, னிரணியனென் றெய்வமென்றாள் விட்டுனுவோர் நரசிம்ம மெனவேவந்தான், மூரணுறவொண் ணாதென்றே னிரணியா சுரனன்று முராரிமெய்ம்மேற், கிரணவுடை யெனப்புனைந்த விரணியனென் றெய்வமென்றாள் கிளியன்னாளே...... (௩௬)

பொய்யேந்து மனவேசைக் காத்திருடிக் கையிரண்டும் போக்கிக்கொண்டோ, மெய்யேந்து விழிமணையாட் கிடையேந்துந் துகிலின்றி மானந்தன்னைக், கையேந்து மிரக்கவோ கையிலாளானெக் கையையேந்திச், செய்யேந்து முலகத்திற் பலியேந்தி யுண்ணுவமியாஞ் செப்பாய்நெஞ்சே.......................(௩௭)

சேயிழையின் சேடியர்முன் னெமக்கிதஞ்செய் வான்புலி வெஞ் சினமாகோகு, நாயோரி கரடியெனக் கத்திமகிழ் விப்பர்நா நவிந்தபின்னத், தியவிலங் கினச்செய்கை நங்கண்ணே செயத்தொடுத்தார் திருவையொப்பா, ளாயமிரு கங்கட்கோ ரரசாளவட்கிளை நா மாயினேமே.......................(௩௮)

வண்ணமல ரமளியின்மே லிருக்கையிலோர் பரபுருடன் வரவுநோக்கிப், பண்ணமரு மொழிமின்னாள் விளையாடல் போற்றன்கைப் பதுமத்தாலென், கண்ணதனை மூடிவிடே னெனநகைத்தாள் வேற்றாளார் கள்ளீயென்றேன், கண்ணடிபோற் றிகழுமென்றன் கபோலமதி லுன்னுருவைக் கண்டாயென்றாள் (௩௯)

இரவினிலென் னுடன்றுயின்ற கோதையடிக் கடிவெளியே பேகிமீண்டாள், கரவறிவான் பின்றொடர்ந்தேன் கொல்லையிலோர் காளையொடுங் கலந்துநின்று, எரவமெனச் சீறியவ்வாண் மேல்வீழ்ந்து தாக்கவுயி ரற்றுவீழ்ந்த், வுருவையுற்றுப் பார்க்கவென்ற னெருநசேயென் றறிந்துநெஞ்ச முருகினேனே..(௪௰)

௪௩-ம்-அதிகாரம் - கணிகையரியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௪௩-இல் திருவிருத்தம்-௪௱௨௧.

## சச - ம்- அதிகாரம்.

### விலங்கினத்துக்கிடர்செய்யாமை.

விலங்கினங் கட்குவர்க்கும் வினையுணர் ஞானத்தோடு ...... ..*
நலங்களு மிலையென்றாலு நரனைப்போற் சீவன்மெய்யைம் .... *
புலன்களு மின்பதுன்பப் புணர்ப்பறி நெஞ்சினோடுந் ..... ....*
துலங்கிடு விலங்கைவாட்டித் துயர்செய்வோர் நரகத்தாழ்வார் (க)

மானிடர் துயரைச்சொல்வர் மற்றுளோ ரதனைத்தீர்ப்ப .........*
ரானவ ருறுநோய்நீக்க வனந்தமாம் பரிகாரங்கண் ...... ..........*
மோனமா யிடுக்கண்டாங்கி முறையிட வறியாதல்லற் .. ...... .... *
றுனுறு விலங்கைக்கொல்வோன் றருமனோ பேயோவம்மா (உ)

கொடியவெவ் விலங்கையெல்லாங் கோறலே முறையென்றாலு*
மடிமைபோ னரர்க்குழைத்திண் டயர்விலங் கினமாசில்லாக் . *
குடிஞையையடித்துதைத்துக் கொன்றுண்போர் சமயம்வாய்க்கி
யடியின்மாக் களையுமுண்பர் பழக்கம்போற் றீயதுண்டோ [ற்

உளமனைப் பித்துளானை யுணர்வில்சே யனைமின்னைப்........*
பாமரர் தம்மைமிக்க பரிவொடுங் காத்தல்போல... .. ..... ...*
நாமற விலங்கைக்காப்பர் நல்லவ ரதைவருத்துந் .... ..... ..... ... *
தீமன முடையோர் துன்பஞ் செய்வர்மா னிடர்க்குமம்மா ...(ச)

காயிலை கிழங்கேதக்க கறியதா மதனையுண்போ .... .... ... ......*
ராயுனுள் வளருமுழ்த்த லருந்துவோ ருயிர்கட்கெல்லாந் .... ..*
தாயெனு மொருகருத்தன் சாபத்தைப் பரிப்பாரொன்னிற் .....*
பேயினுங் கொடியவன்னர் பிழைக்குமா றெவன்கொலம்மா ()

சச-ம்- அதிகாரம் - விலங்கினத்துக் கிடர்செய்யாமை
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்- சச-இ திருவிருத்தம்-சாஉக.

சடு-ம்- அதிகாரம்.

## பன்னெறி,

### தன்னைத்தானறிதல்.

தன்னைத் தன்குணத் தன்மையைத்தேரவே ...................... *
புன்னு கின்றவ ரேங்கிய நட்பினோர் ... .... ......... ........... *
தன்னபச் சொனம் பாமனவ் ளார்தினம் ...... ..... ............... *
பன்னு மாற்றங் கணம்பிற் பயனரோ .... .... .... ...... ..... (க)

### பெரியோரடக்கம்.

தேமலி சுவைக்கனி பல செறிந்துபர் .. ..... ....... ............. *
காமரம் வளைதல்போற் கலை யுணர்ந்திடு..... .. .............. *
தூமன மாட்சியோர் தொழுவர் யாரையும்................. ....... *
பாமர ரெவரையும் பணிந் திடார்களே.. ........ ............ (உ)

### இதுவுமது.

குலமணி வெளியுறு சாழ் குரவையூ டொளித்திருக்கின்ஞ் ........ *
சலதிசை யெவருங்காணச் சஞ்சரித் திடுந்துரும்பு.... .......... *
கலமென மானம்பூண்ட கலைவலோ ரடங்கிநிற்பர்.... ....... ....*
புலனில்சித்தையர் தமைத்தாம் புகழ்ந்தெங்குந் திரிவர்மாதோ(ரு)

### உபசரித்தல்

எதிர்சென்று முகமன்கூறி யிருக்கையு நல்கியுண்டே......... *
யதிசய மெனவினவி யன்பொடு முகமலர்ந்து ...... ....... *
துதிபுரிந் துபசரிக்குந் தொழிலினுற் செலவொன்றில்லை ..... *
யதிர்கட லுலகுளோர்த மன்பெலாம் வரவாமாதோ ........ (ச)

### பெரியோர் சாதற்கஞ்சாமை.

அறப்பெருங் கடலன்றன்ற னடிமலர் காணவண்ண ..... ..... *
மறைப்பதே யுடற்படாமா மரணத்தா லதனைப்பாரிற்......... *
றுறப்பவர்க் குடனேயத்தன் சொரூபமே தோன்றலாலிங்..... *
கிறப்பது பிறப்பினுந்தா னினிதற வர்க்குமாதோ ........ .....(ரு)

### நம்பி மோசம் போகாமை.

அத்திசூ மூலகிற்சில்லோ ரகத்தொன்றும் வாக்கிலொன்றும்..... *
வைத்திதஞ் சொலலாமியாவும் வனச்செவி யேற்பதன்றிச்..... *

சத்திய மெனக்கொண்டேகல் சக்கிலை மூடிநீண்ட..... ............*
பித்திகை யேறிச்செல்லும் பேதைமை நிகர்க்குமாதோ.·.... (சா)

பகைவர்க் குதவிசெய்தல்.

நள்ளுநர் தமக்குமென்று நன்றெமக் கியற்றுவோர்க்கு........ *
முள்ளுவந் தியற்றுகின்ற வுதவிதா னரியதன்று .... . . .........*
புள்ளுவ மிழைக்காநின்ற பொருந்தலர்க் காற்றுநன்றி.... .... *
விள்ளும்வீட் டின்பந்தன்னை விளைக்கின்ற வித்தாநெஞ்சே -(எ)

உலோபர்பொருள்.

தமதெனவு லோபரீட்டுந் தனத்தினைக் கொடுங்கோன்மன்ன...*
ரெமதென விருப்பர்கள்வ ரெமதென்பர் கிளைஞரெல்லா ..... *
முமதெம தெனவாதிப்ப ருலகென தென்னும்யாமு .... ...... *
நமதென்போம் பாரந்தாங்கி நலிவதென் பிசினரம்மா ....(அ)

நற்குணச்சிறப்பு.

விறலிகற்பது வேகற்புகூனுடல் விருத்தைகற்ப ரிதன்றுக லையெலா, மறவுணர்ந்ததக் கோர்நெறிலேநெறி லஞ்ஞைகொண்ட வடக்கங்கதழ்வன்று, திறலினர்பொறை யேபொறைகொஞ்சமுந் திறமிலார்தம் பொறுமைதலையன்று, மறவுளார்கொடையேகொடைசீரொலாம் வாய்த்தசெல்வர் கொடைபெரிதன்றரோ

கொடுஞ்சொற்கூறுமை.

உருமையின் னினைத்தன்பாற்கொண் டுதகமன் னுயிர்க்குநல்குங்
கருமுகி லெனக்கண்ணுலென் காணினுங் கேட்பினுஞ்சூழ் ... *
பருவர லேதிலார்க்குப் பயக்கும்வன் சொல்லைநீத்து...........*
மருவிய நலங்கலந்த வசனமே பகர்வர்நல்லோர் ..... ..... ....(கூ)

சமயமறிந்துபேசல்.

நதிமுதற் புகுவதெல்லா நன்கசுட் டிடையடக்கு ............... *
மதிர்கட லெனவுமீயா ரருத்தமஞ் சிகையேபோலும்·····,.... ..*
வதிசெவி நுழைவதெல்லா மனத்தினு ளடக்கித்தக்க ......... .. *
மதியறிந் துரைப்பதன்றிச் சவலர்க்கு முரையார்மிக்கோர்.. (கக)

### மனோரம்மியம்.

பறவையும் விலங்குந்தீனி பசித்தபின் றேடுநாளைக்...............*
குறையெனுங் கவலையில்லை யுணவின்றி யிறந்ததில்லை............*
வறியரொம் மிற்பல்லோரிவ் வையகத்துளர்தே வீந்த............*
சிறிதுமேபெரிதென்றெண்ணிச் சிந்தையேமகிழ்ந்துகொள்ளே

### வேதாந்தம்.

ஈசனையே துதித்தலவன் றிருநாமத்தொடுதிருநா ளினைக் கொண்டாட, னேசமா ரனைதந்தை வணங்கல்கொலை செய்யா மை நிதங்காமத்தை, நாசமாக் குதல்களவு பொய்நீக்கல் பிறனில் பொ னயந்திடாமை, மாசறுமிவ் விதிபத்தும் வேதாந்த மெனக் கடவுள் வகுத்திட்டானுல் .... .... ........ .... ....... ......... (யிரு)

### இதுவுமது.

முன்னவன் பொற்பத முன்ன முன்னலுந்...............*
தன்னுயி ரெனப்பல வுயிரைத் தாங்கலும் ................*
பன்னெறி யாவினும் பளகிலா வரு ....................*
நன்னெறி யாமென நவிலும் வேதமே..... .. ..... .... (மச)

சரு - ம் - அதிகாரம்- பன்னெறி முற்றுப்பெற்றது.

ஆ. அதிகாரம்-சரு-இ திருவிருத்தம் - சாசம.

---

### வாழி.

ஆதிநூலென் றும்வாழ்க வறுதினந்தருமம்வாழ்க .......*
வேதியர் நாளும்வாழ்க மெய்யடியார்கள்வாழ்க .... .....*
தீதிலாங்கிலேயமன்னர் செங்கோலெஞ்ஞான் றும்வாழ்க
நீதிநூல்படிப்போர்கேட்போர் நித்தமும்வாழ்கமாதோ*

## நீதி நூல்.

### முற்றிற்று

நீதிநூல்,

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௰௩ | ௨ | ௩ | பன்னுட் ................... | பன்னுள் |
| ௨௰ | ௰ | ௧ | பொருட் ................... | பொருள் |
| ௨௪ | ௨௰ | ௪ | நின் ......................... | நும் |
| ௸ | ௨௨ | ௨ | அடைகிலீரெனின் .. | அடைகிலாயெனின் |
| ௨௨ | ௨௩ | ௩ | வேறிலைச் ... ......... | வேறிலை |
| ௸ | ௨௫ | ௨ | மலர்த்துறந்து ... . | மலர்துறந்து |
| ௸ | ௨௬ | ௧ | மார்பிணை. ........ | மார்பிணா |
| ௨௩ | ௩௧ | ௪ | தானென்னை ........ | தாமென்னை |
| ௸ | ௩௨ | ௨ | அன்னனை ......... | அந்நனை |
| ௨௭ | ௫ | ௩ | பொய்யர் ............ | பொய்யா |
| ௨௮ | ௪ | ௧ | மா ...................... | மர் |
| ௨௯ | ௩ | ௫ | சோரர் ............... | சேரார் |
| ௪௧ | ௬ | ௪ | சிறந்ததளிப்பர் .... | சிறந்தளிப்பர் |
| ௪௩ | ௨ | ௨ | பிர் ..................... | பீர் |
| ௪௮ | ௪ | ௧ | காற் ..................... | கால் |
| ௫௰ | ௧ | ௧ | ச ெய்ய ............... | செய்ய |
| ௭௨ | ௩௨ | ௪ | கீழ்ககுலத்தர் ......... | கீழ்க்குலத்தர் |